ஆலம்பாடி
பொருள் தந்த குல வரலாறு

Q2996:38.2118 AL
N92
171287

வர் செ. இராசு

ஆலாம்பாடி
பொருள்தந்த குல வரலாறு

995/S2

ஆசிரியர் :
புலவர் செ. இராசு, எம்.ஏ.,
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

வெளியீடு :
திருப்பணிக் குழுவினர்
அருள்மிகு அண்ணன்மார் கோயில்
ஆலாம்பாடி
காங்கயம் (வழி) 638 701
பெரியார் மாவட்டம்

R2998:38.21860C
1192

முதற் பதிப்பு :

ஆலாம்பாடி, அருள்மிகு
அண்ணன்மார் ஆலயக் குடமுழுக்கு
விழா நாள் 9-7-1992

விலை : ரூ. 20-00

நூல், ஆலாம்பாடி அருள்மிகு
அண்ணன்மார் ஆலயத்தில் கிடைக்கும்.

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 14.

ஆசிரியர் உரை

காங்கேய நாட்டு ஆலாம்பாடி தொன்மையானதொரு பேரூர். வரலாற்றுச் சிறப்புமிக்கது. அவ்வூரைக் காணியாகக் கொண்ட பொருள்தந்த குலத்துப் பெருமக்கள் அங்குச் சிறப்புடன் எழுந்தருளி அடியார்க்குக் கண்கண்ட கடவுளாக விளங்கும் அண்ணன்மார் சுவாமிகளைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வணங்கி வருகின்றனர்.

இப்போது ஆலாம்பாடி அண்ணன்மார் கோயிலில் பல திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுக் குடமுழுக்கு விழாவும் நடைபெறுகிறது. ஆலாம்பாடிப் பொருள்தந்த குலக் காணி யாளர்களில் ஆலாம்பாடி திரு. எம். கோவிந்தசாமிக் கவுண்டர், வேட்டைக்காரன்புதூர் திரு. வே. ப. சபாபதிக் கவுண்டர் இருவரும் தம் காணியூர், குலதெய்வம், பொருளந்தைகுலம் ஆகியவற்றின் வரலாற்றைத் தொகுத்தளிக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்தனர்.

அதற்காக நான் ஆய்வுக்கு வரும்போதெல்லாம் அவ்விரு பெருமக்களும் சிறந்த முறையில் வரலாற்று நூல் உருவாக எல்லா ஏற்பாடுகளையும் செய்து உதவினர். அவர்களிருவரும் காட்டிய பேரார்வமே இந்நூல் வெளிவரக் காரணமாக அமைந்தது.

பிடாரியூர்ப் பொருளந்தைகுலத் தோன்றல், கம்பன் செஞ்சொற்கொண்டல் கள்ளிப்பட்டி ஸ்ரீராமமந்திரம் திரு. க. கு. கோதண்டராமக் கவுண்டர் அவர்கள் நூல் வெளி வருவதில் தம் ஆர்வத்தைக் காட்டினார்கள். வேட்டாம்பாடி அ. பழனிசாமிக் கவுண்டர், வெள்ளக்கல்பட்டி புலவர் வெ. இரா. துரைசாமி ஆகியோர் தம்மிடம் உள்ள அரிய குறிப்புக்களைத் தந்துதவினர்.

எல்லோரின் நல்லாசியுடனும், துணையுடனும் சில பழைய செய்திகள் இங்கு நூல் வடிவம் பெற்றுள்ளன. ஆர்வலர்கள் நூலைப் படித்துத் தங்கள் கருத்தை எழுதவேண்டுகிறேன்.

தஞ்சாவூர்
6-7-1992

இங்ஙனம்
செ. இராசு

பொருளடக்கம்

1.	வேளாளர் தோற்றமும் குடியேற்றமும்	... 1
2.	கொங்குநாடு	... 7
3.	காங்கேயநாடு	... 13
4.	சிவன் மலை	... 22
5.	ஆலாம்பாடி	... 31
6.	அண்ணன்மார் ஆலயமும் திருப்பணியும்	... 40
7.	அண்ணன்மார் வரலாறு	... 52
8.	அண்ணன்மார் வழிபாடு	... 57
9.	ஆலாம்பாடி ஆலயங்கள்	... 60
10.	பாப்பினிக் கல்வெட்டில் ஆலாம்பாடி	... 66
11.	பொருள்தந்த குலம்	... 72
12.	காணி ஊர்கள்	... 77
13.	கருமாபுரம்	... 85
14.	குலகுருக்கள்	... 82
15.	புகழ்பாடும் செப்பேடுகள்	... 94
16.	புலவர்கள் பொன்னுரைகள்	... 99
17.	வரலாற்று ஆவணங்களில்	... 103
18.	இலக்கிய ஏடுகளில்	... 110
19.	காடையூர் காங்கேய மன்றாடியார்	... 121
20.	உரிச்சொல் நிகண்டுக்கு உரியவர்	... 131



அருள்மிகு பெரியக்காண்டி அம்மன்



சங்கர், பொன்னர், தங்கை அருக்காணி

வேளாளர் தோற்றமும் குடியேற்றமும்

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி"

"மேழிச் செல்வம் கோழைபடாது"

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"

என்றெல்லாம் புலவர் நாவால் போற்றியுரைக்கப்படும் இனம் வேளாளர் இனம். புகழ்மிக்க தொழில் உழவுத் தொழில். வான்புகழ் வள்ளுவன் வகுத்துரைத்த ஒரே தொழில். உலகம் இயங்க, உலகினர் வாழ இன்றியமையாது வேண்டப்படும் தொழில் உழவுத் தொழில். அதை வாழ்விலும் தாழ்விலும் விடாமல் செய்து உலகை உபசரிக்கும் சான்றோர் உழவர்கள்— வேளாளர்கள்.

புராணம்

சிறப்புமிக்க வேளாளர் புராணத்தை அழகிய கவிதை வடிவில் ஆக்கித் தந்தவர் வீராட்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர் அவர்கள். பெருங்காவியம் என்று போற்றப்படக் கூடியது. அந்நூலில் வேளாளர் தோற்றம்பற்றிப் புராண ஐதீகங்களுடன் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

வேளாளர் புராணத்தை அழகிய உரைநடை வடிவில் கோவை விளாங்குறிச்சி நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். இரண்டு நூல்களுமே அச்சிடப் பெற்றுள்ளன. அந்நூலில் வேளாளர் தோற்றம் கீழ்வருமாறு கூறப்படுகிறது.

கைலாசத்தில் சிவபெருமான் பார்வதி தேவியாருடன் வீற்றிருக்கும்போது நான்முகனாகிய பிரம்மா அங்கு வந்து சிவபெருமானால் உலகில் படைக்கப்பட்ட இயற்கை வசதிகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்று முறையிட்டார். சிவபெருமான் நான்முகனிடம் திருமாலைச் சென்று பார்க்குமாறு பணித்தார்.

திருமாலிடம் சென்று நான்முகன் மேற்கண்டவாறு முறை யிடும்போது போதாயன முனிவர் அங்கு வந்தார். போதாயன முனிவரைத் திருமால் நான்முகனுக்கு அறிமுகம் செய்து வைத்து அவரையே வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு வேண்டிக்கொண்டார்.

உழவு செய்யத் தெரியாமல், உணவைப் படைக்கத் தெரியாமல், உண்ணத் தெரியாமல் இருந்த இவ்வுலகுக்குக் கங்கைத் தாயின் அருகேயுள்ள திருவேணி சங்கமத்திலிருந்து மரபாளன் ஒருவனை உற்பத்தி செய்து அவனுக்குச் சகல செய்திகளையும் கற்பிக்குமாறு போதாயனருக்குத் திருமால் ஆணையிட்டார்.

கங்கா தேவியின் சன்னிதானத்தில் வணங்கி மரபாளனைப் பெற்றுத் தன்னோடு இந்திரலோகத்திற்கு அனுப்பவேண்டும் என்று போதாயன முனிவர் வேண்டினார்.

தான் பெற்ற மரபாளனை இரு கைகளாலும் பரிந் தெடுத்து உச்சிமோந்து ஆனந்த முத்தங்கள் தந்து 'பொன்னுலகு சென்று சிறப்பெல்லாம் பெற்றுப் போதாயன ருடன் மண்ணுலகு செல்க மகனே' என்று கங்காதேவி அனுப்பிவைத்தாள்.

இந்திரன் எல்லா இன்பங்களையும் குறைவறப் பெற்றிடுக என மரபாளனை வாழ்த்தினான். இந்திரன் மரபாளனைச் சரியாசனத்தில் இருக்கச்செய்து 'பார் முழுதும் ஏர்முனையைத் தான் நம்பியுள்ளது. சீரைத் தேடின் ஏரைத் தேடு

என்கிறார்கள். சகல பிணிகளிலும் தலைசிறந்த பசிப் பிணியைத் தீர்க்க உழவு வைத்தியத்தைத் தவிர வேறு உண்டோ? உழவுத் தொழில் இல்லாமல் உலகில் என்னதான் நடக்கும். இதற்கு இணையான தொழில் ஏதுமில்லை' என்றான்.

இந்திரன், குபேரன் இவர்களின் பெண்மக்களை மணந்த மரபாளன் (வேளாளன்) பூமிக்கு வந்து பயிர்த்தொழில் செய்ய முற்பட்டான். கங்கையின் அருளால் தோன்றிய காரணத்தால் வேளாளர் கங்கா குலத்தினர், கங்கை மைந்தர் என்று அழைக்கப்பட்டனர்.

டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்கள் வேளாளர்கள் கங்கா குலத்தினர் என்று கூறப்படுவதை வைத்துக் கங்கைச் சமவெளியில் வேளாளர் தோன்றினர் என்பார்.

பட்டயம்

அவ்வாறு தோன்றிய வேளாளர்கள் தொண்டை நாட்டிலிருந்து சோழநாடு வழியாகக் கொங்கு நாட்டில் குடியேறினர் என்பதைப் பட்டயங்கள் பல கூறுகின்றன. பெரிய குலத்துத் தலைவர்களான வேணாடுடையார் பட்டயம் கீழ்வருமாறு கூறுகிறது.

> 'ரிஷபகிரிச் சோழன் மகளை சேரமான் பெருமாள் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டபடியினாலே சோழ ராசாவின் மகள் தனக்குச் சீதனம் தன் தோப்பனாரைக் கேட்டது யென்னவென்றால் யெனக்கு சிறிது வேளாளர் குடி வேணுமென்று கேட்க நாற்பத்தெண்ணாயிரம் குடி சீதனம் குடுத்தபடியினாலே சேரமான் பெருமாள் கொங்கு மண்டலத்துக்கு கொங்கு வேளாளர் என்று பேரும் குடுத்து கொங்கு மண்டலத்துக்கு அழைத்து வந்ததன் பேரில் யிருந்த யெண்ணாயிரம் குடியும் கொங்கு மண்டலம்

இருளுறைந்த காண்டாவனம் எல்லாம் வெட்டிக் கிராமம் உண்டு பண்ணி'

என்பது பட்டயப் பகுதியாகும். இவ்வாறே காங்கேயம் பல்லவராயர், ஊத்துக்குளி காலிங்கராயர், காடையூர்க் காங்கேய மன்றாடியார், சமத்தூர் வானவராயர் வமிசாவளிகள் எல்லாம் கூறுகின்றன. ஆனால் பயிரகுலத் தலைவர் பழைய கோட்டைப் பட்டக்காரர் வமிசாவளியில் மட்டும் சோழராசா பெண் கேட்க, பெண் கொடுக்க மறுத்துக் கொங்கு நாடு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

'சோழராசா தொரைத்தனத்தில் ஆதொண்டைச் செக்கிறவர்த்தி நாளையில் தன்னுடைய தேசத்திலே யிருக்கப்பட்ட வேளாள சாதியில் கல்யாணம் பண்ண வேணுமென்ங்குரதாக யெத்தினம் பண்ணுமிடத்தில் சம்மதிச்சு ராசாவே வரச்சொல்லி சகல சன்னாகத்தோடே ராசா வந்த இடத்தில் பெண் நாயை அலங்கறிச்சு பந்தக்காலில் பிடிச்சுக் கட்டிப்போட்டு 48000 கோத்திரத்து வேளாளர் சோழ ராசாவுக்கும் விரோதமாயி புறப்பட்டு சேர தேசாதிபதியிடத்தில் வந்து சேர்ந் தார்கள்.

சேரனுக்குக் கொங்கனென்றும் பேர் வரப்பட்டுயிருக்குர படியினாலே கொங்கு வேளாளரென்று பேர் வரப் பட்டு...'

என்பது பழையகோட்டைப் பட்டக்காரர் வமிசாவளிப் பகுதி. காரணம் வேறுபட்டாலும் தொண்டை நாட்டு, சோழநாட்டுத் தொடர்பு மறுக்கப்பெறவில்லை.

இலக்கியம்

ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி என்பது ஒரு சிற்றிலக்கியம். சேரகுலச் சின்னத்தம்பி நாவலர் என்னும் புலவர் பாடியது. இதனைக் கருந்தும்பிப் புலவர் மகன்

க. பழனிசாமிப் புலவர் பதிப்பித்துள்ளார். அந்நூலிலும் சோழன் மகள் சேரனை மணந்தவள் சீதனமாக வேளாளரை அனுப்புமாறு கேட்டதாகவும், சோழன் அவ் வேளாளர்களை நன்முறையில் நடத்த வாக்குறுதி அளித்தால் அனுப்புவதாகக் கூறச் சேரமானும் வாக்குறுதி கொடுத்து வேளாளர்களை அழைத்துவந்தது கூறப்படுகிறது. அப் பாடல் பகுதி,

'திக்கெலாம் மதிக்கும் சேரமான் பெருமாள்
குருத்தணி சோழன் குறைவிலா தீன்ற
உருத்திர மணியின் உடனக மகிழ்ந்து
மணம்புரிந் துலகில் வாழ்ந்திடும் நாளில்
குணமுடன் மகட்குக் குருத்தணி சோழன்
சீதன வரிசை சிலபொருள் உதவும்
போதினில் மகளும் பொருந்தியுள் மகிழ்ந்து
தந்தைதன் னுடனே சாற்றிய வசனம்
நந்தலில் லாத நாற்பத்தெண் ணாயிரம்
நற்குலத் தாரில் நாலிரு ஆயிரம்
நிற்கிரி கடனே னீடூழிக் காலம்
மதியுடன் எங்கள் மன்சபைச் சுமுகராய்
இதமுடன் இருக்க ஈகுவீர் என்னக்
கூறவும் மகிழ்ந்து குருத்தணி சோழன்
சேரமா னுடனே செப்புவர் சிறப்பாய்
மகளுரை தவறா வாய்மையால் யானும்
வகையுடன் வேளாண் மரபுளோர் அனுப்பில்
உங்களோ டொப்ப உயர்ச்சியாய்ப் பார்க்கில்
அங்குயான் அனுப்ப அகம்சம் மதிப்பேன்
என்றவர் சொல்லவே சேர மானும்
நன்றவர் நமது நாடதி பதியாய்
வரிசைமெய்ப் புகழுடன் வழங்குவேன் எனவும்
சரிசரி யெனவே தரணிபா லகரில்
கண்ணன் ஆனங்கூர்க் காணிமுத் தையனை
மன்னவர் சபையில் வரவழைத் தேதான்

எண்ணா யிரங்கோத் திரத்துளோர்க்கு அரசன்
நண்ணாகக் கொங்கு நாடதை விளக்கம்
செய்துதான் இருப்பீர் சென்மென அனுப்ப
உய்யவே சேரன் உலகுக்கு வந்தார்'

என்பதாகும்.

இங்கு மாதிரிக்கு ஓரிரு பட்டயங்களும், இலக்கியமும் எடுத்துக்காட்டாகக் காட்டப் பெற்றுள்ளன. நமக்குக் கிடைக்கும் எல்லாப் பட்டயங்களும், இலக்கியங்களும் கொங்கு வேளாளரின் மேற்கண்ட குடியேற்றத்தை வலியுறுத்திக் கூறுகின்றன. மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் மூவேந்தர் இருக்கும்போது அவர்கள் ஆதரவு பெற்றுக் காவிரி, அமராவதி, நொய்யல், பவானி ஆற்றங்கரை வழியாகக் கொங்கு நாடெங்கணும் சென்று காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிக் கொங்கு நாட்டை வாழ்வும் வளமும் உடையதாகச் செய்து வேளாளர் கொங்கு வேளாளர் ஆயினர்.

குடியேற்றத்தின் காலம்

கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறிய காலம் சங்க காலமாகும். முன்பெல்லாம் இக்காலம் சற்றுப் பிற்காலம் ஆக இருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால், ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டுகள், அறச்சலூர்க் கல்வெட்டு, கொடுமணல் அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் இவைகள்மூலம் வேளாளர் குடியேற்றக் காலம் சற்று முன்னுக்குப் போகிறது. மேற்கண்ட இடங்களில் ஆந்தை, அந்துவன், ஓதாளன், சாத்தந்தை, ஆதன், பண்ணன், மணியன், வண்ணக்கன் போன்ற கொங்கு வேளாளர் குலங்களின் பெயர்கள் பொறிக்கப் பட்ட பழந்தமிழ் எழுத்துக்களைக் காணுகின்றோம்.

கொங்கு நாடு

நம் செந்தமிழ் நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டை நாடு, கொங்கு நாடு என்ற இரண்டு தனிப்பிரிவு நாடுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது

கொங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு. நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இதனைப் பழங்கால இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிப் படுத்துகின்றன. நீலகிரி கோவை, பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களின் பகுதிகளும், திண்டுக்கல் அண்ணா மாவட்டம் பழனிப் பகுதியும், திருச்சி மாவட்டக் கரூர், குழித்தலைப் பகுதிகளுமே கொங்கு நாடாகும்.

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று —கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு'

என்பது ஒரு தனிப்பாடல். இதன்மூலம் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை என்பதும், தெற்கு எல்லை பழனிமலை என்பதும், மேற்கு எல்லை வெள்ளியங்கிரிமலை என்பதும், கிழக்கு எல்லை குளித்தலை என்பதும் பெறப் படுகிறது.

தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது.

தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று 'வியன் தமிழ்நாடு ஐந்து' என்று கூறுகிறது.

'நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியான் அல்லன்—துறையின்
விலங்காமை நின்ற வியன்தமிழ்நாடு ஐந்தின்
குலங்காவல் கொண்டொழுகும் கோ'

என்பது அப் பாடலாகும்.

சைவ சமய நூல்களில் மிகவும் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம் 'தமிழ் மண்டிலம் ஐந்து' என்று கூறுகிறது. எனவே கொங்குநாடு தனிப்பிரிவு என்பது உறுதிப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்கு நாடு' தனி நாடாகக் குறிக்கப்பெறுகிறது.

கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே' (புறநானூறு 373) எனச் சோழன் அழைக்கப்பெறுகின்றான். அவன் கொங்கு நாட்டை வென்று அடிப்படுத்திய செய்தி இதன்மூலம் பெறப்படுகிறது.

'கொற்றச் சோழர் கொங்கர்ப் பணிஇயர்
வெண்கோட்டு யானை போஓர் கிழவன்
பழையன்' (நற்றிணை-10)

'ஒளிறுவாள் கொங்கர்' (குறுந்தொகை-383)

'ஆகெழு கொங்கர் நாடு' (பதிற்றுப்பத்து-22)

'கொங்கர் ஆபரந்தன்ன' (பதிற்றுப்பத்து-77)

'கொங்கர் படுமணி ஆயம்
நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா' (அகநானூறு-79)

'வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி' (அகநானூறு-253)

'கொங்கர் மணி அரை யாத்து
மறுகின் ஆடும் உள்ளி விழவு' (அகநானூறு-368)

போன்ற பாடல்கள்மூலம் கொங்குக் குறுநில மன்னர்கள் கால் நடைச் செல்வம், கொங்கர் போர்த்திறன், அவர்கள் விழா ஆகியவை சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெறுகின்றன.

கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்த சிற்றரசர்கள் சங்க இலக்கியத்தில் அத்தி, அதியமான், ஆய், ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன், ஏற்றை, ஓரி, கங்கன், கட்டி, கடிய நெடுவேட்டுவன், குமணன், கொடுமுடி, கொண்கானங்கிழான், தாமான் தோன்றிக் கோன், நன்னன் பழையன் புன்றுறை பேகன், விச்சிக்கோ ஆகியோர் சுட்டிக் கூறப்பட்டுள்ளனர். கொங்கு நாட்டு மணிகளும் வண்ணக் கல்மணிகளும், வேலைப் பாடு மிக்க அணிகலன்களும் புகழ்ந்து பாராட்டப்படுகின்றன.

சேரன் செங்குட்டுவன் தனக்குச் சமமான அரசனாகக் கொங்கு நாட்டு இளங்கோசரைத் தமிழ்நாட்டு மூவேந்தருக்கு ஒப்ப மதித்துப் போற்றியிருக்கின்றான். நூற்றுவர் கன்னர், இலங்கைக் கயவாகு மாளுவ வேந்தர், பெருங்கிள்ளி ஆகியோர் போலக் கொங்கு நாட்டு மன்னனையும் நட்பாகக் கொண்டிருக்கிறான். இதனைச் சிலப்பதிகாரம் மூலம் அறிகின்றோம்.

பேரூரை மேற்குக் கொங்கு என்று பாண்டியர் பழஞ் செப்பேடுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன.

'குடகொங்கத்து அடல்மன்னனைக்
கொல்களிற் றொடும் கொண்டுபோந்து
கொடியணிமணி நெடுமாடக்
கடல்மதில் அகத்துவைத்தும்'

என்று சீவரமங்கலச் செப்பேட்டிலும்,

மீகொங்கில் அணி காஞ்சிவாப் பேரூர்' என்று சுந்தரர் தேவாரத்திலும் குறிப்புக்கள் வருகின்றன. இதனால் கொங்கு நாடு தனி நாடு என்று பெறப்படுகிறது.

கொங்கு நாட்டிலிருந்து சமய அடியார்கள் சேரநாடு நோக்கிச் சென்றதை,

'கொங்கு நாடு கடந்து போய்க்
குலவு மலைநாட்டு எல்லையுற,

'மலைநாடு கடந்தருளி......திருமுருகன்
பூண்டிவழிச் செல்கின்றார்'

என்று பெரியபுராணம் குறிப்பிடும். சிலப்பதிகாரத்திலும் கொங்கு நாட்டின் மேற்பகுதி அரசர் 'குடகக்கொங்கர்' என்று குறிக்கப்பெறுகிறார். கண்ணகியே கொங்கச் செல்வி என்று சிலம்பில் குறிக்கப்பெறுகிறார்.

நூற்றாண்டுகள்தோறும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கொங்குநாடு தனிநாடு எனக் கூறுகின்றன. சிலர் தொண்டை நாட்டைச் சோழநாட்டுடனும், கொங்கு நாட்டைச் சேர நாட்டுடனும் அடக்குவர். அது பொருந்தாது.

கோவைகிழார் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் தம் 'கொங்கு நாட்டு வரலாறு' என்னும் நூலில் கீழ்வருமாறு குறிக்கின்றார்.

'சோழர்கள். ஒயிசளர், விசய நகரத்தார், மைசூர் மன்னர்கள் ஆகிய வம்சத்தாரிடம் கொங்குநாடு சென்றது. இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராச்சியங்களுடன் கொங்குநாடு இணைக்கப்பட்ட போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையை இழக்கவில்லை. இந்நாட்டின் அமைப்பு மாத்திரம் அன்றி இந்நாட்டுக் குடிமக்களின் பழக்கவழக்கங்களும் புண்டைக்காலம்தொட்டு ஒரேவித

மாக இருந்துவந்தன. சமூக வழக்கங்களிலும் இவர்களுடைய வழக்கங்கள் ஏனைய நாட்டார்களிடமிருந்து சிறிது வேறுபட்டேயிருக்கும். இவ்விதக் காரணங்களினால் கொங்கு நாட்டைத் தனிநாடு என்று நிச்சயிக்கக்கூடும்.

சேரநாடு என்னும் கேரளத்தில் வழங்கிவரும் பழக்க வழக்கங்களைக் கொங்கு நாட்டாரின் பழக்கவழக்கங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், எக்காலத்திலும் இவ்விரு நாடுகளும் ஒன்றாக இருந்திருக்க முடியாது என்று சொல்லவேண்டும். கொங்குநாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்திருந்தால் சேரநாட்டு வழக்கம் கொஞ்சமேனும் கொங்கு நாட்டில் பரவியிருக்கும். இவையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் ஆதிகாலம் தொடங்கி இவ்விரு நாடுகளும் தனித்தனியாகவே இருந்திருக்கவேண்டும் என்றும், கொங்கு நாடு ஒரு தனிநாடாகவே இயற்கையில் அமைந்து வந்ததென்றும் திண்ணமாகக் கூறலாம்.'

வராகமிகிரர் தன் நூலில் கொங்கு நாடு தனி நாடு என்று குறிக்கின்றார். அசோகன் கல்வெட்டிலும் தனி அரசராகக் குறிக்கப்பெறும் சதிய புத்திரர் கொங்கு நாட்டு மன்னன் அதியமானே என்பது ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

'ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி'

என்பது ஜம்பைக் கல்வெட்டாகும்.

'கொங்கு நாடு' என்னும் வரலாற்று நூலில் புலவர் குழந்தை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

'தொன்றுதொட்டே கொங்கு நாடு சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு உட்படாத தனியாட்சி நாடாகவே இருந்துவந்தது. வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய வேளாண்குடிச் செல்வ

ராகிய கொங்கு நாட்டுத் தனி அரசர்கள் தமக்குள் பகை யின்றி ஆண்டுவந்தனர். அவர்கள் முடியுடை மூவேந் தரிடத்தும் அன்பொடு நண்பும் அமைவும் உடையவராக இருந்துவந்தனர். முடியுடை மூவேந்தர்க்கு மைத் துனரும் மாமனாருமாகிய அவர்கள் பின்னர் எவ்வாறு இருந்திருப்பார். கேரளோற்பத்தி, கேரள மான்மியம் போன்ற நூல்களும், திருவாங்கூர்ச் சரித்திர ஆசிரியர் சங்குண்ணி மேனன் அவர்களும், டாக்டர் எஸ். கிருஷ்ண சாமி அய்யங்கார் அவர்களும் கொங்கு தனியாட்சி நாடு என்பதைத் தக்க எடுத்துக் காட்டுகள் காட்டி நிறுவியுள்ளனர்.'

தொல்பொருட் சிறப்பும், கல்வெட்டுப் பரப்பும், சிற்பச் செல்வமும் வரலாற்றுப் பெருமையும், வாழ்வியல் வளமும் வற்றாச் சீரும் உடையது நமது கொங்கு நாடு.

காங்கேய நாடு

கொங்கு 24 நாடு

கொங்கு நாட்டில் குடியேறிய வேளாளர்கள் நாடெங்கும் சென்று பல ஊர்களில் காணி கொண்டு நிலையான ஆட்சியை ஏற்படுத்தினர். ஆங்காங்கு குளம் தொட்டு வளம் பெருக்கினர். ஆலயங்கள் கட்டி வழிபாடு செய்து கொடைகளும் பற்பல விட்டனர். தங்களுடன் குடியேறிய குடிபடைகளுக்கும் பல உரிமைகளை அளித்தனர். கால்நடைச் செல்வத்தைக் காத்து வேளாண்மையை மேற்கொண்டனர். அப்போது நாட்டு நிர்வாகம் செய்ய கொங்கு நாட்டை 24 உள்நாடுகளாகப் பிரித்தனர். தங்கள் பூர்வீகமான காஞ்சிபுரம் சூழ்ந்த தொண்டை நாட்டில் 24 கோட்டங்கள் இருப்பதனால் இங்கு 24 நாடுகளாகக் கொங்கு நாட்டைப் பிரித்தனர் என்பர்.

கொங்கு 24 நாடுகளாவன

1. பூந்துறை நாடு
2. தென்கரை நாடு
3. காங்கேய நாடு
4. பொன்கலூர் நாடு
5. ஆறை நாடு
6. வாரக்க நாடு
7. திருவாவினன்குடி நாடு
8. மண நாடு
9. தலைய நாடு
10. தட்டய நாடு
11. பூவாணிய நாடு
12. அரைய நாடு
13. ஒடுவங்க நாடு
14. வடகரை நாடு
15. கிழங்கு நாடு
16. நல்லுருக்கா நாடு
17. வாழவந்தி நாடு
18. அண்ட நாடு
19. வெங்கால நாடு
20. காவடிக்கா நாடு
21. ஆனைமலை நாடு
22. இராசிபுர நாடு
23. காஞ்சிக்கோயில் நாடு
24. குறுப்பு நாடு

பிற்காலத்தில் அரசர்கள் காடு கொன்று நாடாக்கி மக்களைக் குடியேற்றம் செய்யும்போது நாடுகள் பெருகின என்பதைக் காணுகின்றோம். சில பட்டயங்கள் கொங்கு 42 நாடுகள் என்று கூறுகின்றன. காங்கேய நாடு மூன்றாவது நாடாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. 24 நாடுகளைக் குறிக்கும் பாடல் பின்வருமாறு :

சொல்லஅரி தானபூந் துறைசைதென் கரைநாடு
 தோன்றுகாங் கேயநாடு
தோலாத பொங்கலூர் நாடுதிகழ் ஆறையணி
 தோய்ந்தவா ரக்கநாடு
வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு
 மணநாடு தலையநாடு
வரதட்டை பூவாணி அரையநாடு ஒடுவங்கம்
 வடகரை கிழங்குநாடு
நல்லுருக் காநாடு வாழவந் தியும்அண்ட
 நாடுவெங் காலநாடு
நாவலர்கள் சொல்கா வடிக்காநாடு ஆனைமலை
 ராசிபுர நாடுநிதமும்
இல்லறம் வளர்ந்துதவி மல்குகாஞ் சிக்கோயில்
 இயல்செறி குறுப்புநாடு
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலந் தனிலான
 இருபத்து நான்குநாடே!

காங்கேய நாடு 'தோன்றுகாங்கேய நாடு' என அடைமொழியுடன் கூறப்படுகிறது. புகழ் தோன்று நாடு, புண்ணியம் தோன்று நாடு, முன்தோன்றிய நாடு எனப் பல்வேறு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

காங்கேய நாடு

காங்கேய நாடு கொங்கு நாட்டில் மிகவும் பழமையான நாடாகக் கருதப்படுவது. சங்ககால முத்தூருக் கோட்டம்

இப்பகுதியே என்பது திருப்பூர் க. பழனிச்சாமிப் புலவர் அவர்கள் கருத்தாகும். அதற்கேற்ப இன்றைய முத்தூர் காங்கேய நாட்டின் ஒரு ஊராக உள்ளது.

கங்கைகுல வேளிருக்கு உரியது ஆதலின், காங்கேய நாடு ஆயிற்று என்பர் சிலர். கங்கையின் புதல்வன் முருகன், காங்கேயன் என்ற சிறப்புப் பெயர் பெற்றான். அதுபோலக் கங்கைகுல வேளிர்களும் காங்கேயர் என்ற சிறப்புப் பெயர் பெற்றனர். சீய கங்கன் இப்பகுதியில் ஆட்சி புரிந்ததால் காங்கேயத்துக்கு 'சிங்கை' என்பது பெயராயிற்று என்பர் சிலர். காங்கேயருக்குத் தலைநகராக இருந்த காரணத்தால் இவ்வூர் காங்கேயம் என்று பெயர் பெற்றது என்பதும் ஒரு காரண மாகும். காங்கேயர் என்ற பெயர் பொருள்தந்த குலத் தலைவர் கடையூர்ப் பட்டவர்த்தனருக்குரியது. அவர்களின் முன்னோர் இங்கு வாழ்ந்து இருக்கலாம். அதனாலும் காங்கேயம் எனப் பெயர் வந்திருக்கலாம். இன்னும் சில ஆய்வாளர்கள் கங்கர் களின் தலைநகர் ஸ்கந்தபுரம் காங்கேயம்தான்; கங்கர்கள் ஆண்ட பகுதி காங்கேயம் ஆயிற்று என்பர்.

மெக்கன்சியின் ஆவணம் காடையூர்க் காங்கேயர் கோட்டை கட்டிய இடம் 'காங்கேயன் கோட்டை' என்று பெயர்பெற்றுப் பின் காங்கேயம் ஆயிற்று என்று கூறுகிறது. அவ்வூர்ப் பெயரே பின் நாட்டுக்கும் ஆயிற்று. எனவே காங்கேயம் ஊருக்கும் நாட்டிக்கும் காடையூர்க் காங்கேயரால் பெயர் வந்தது என்பது புலப்படுகிறது.

கொங்கு 24 நாடுகளில் காங்கேயம் மூன்றாம் நாடாகக் குறிக்கப் பெறுகிறது. 'தோன்று காங்கேய நாடு' என்று சிறப் பிக்கப் பெறுவது. பல்வேறு சிறப்புக்களைப் பெற்றது இந்தக் காங்கேய நாடு. இலக்கியங்களால் ஏத்திப் புகழப் பெறும் நாடு காங்கேய நாடு. கொங்கு வேளாள பாளையக்காரரில் மூவர் வீற்றிருந்து ஆட்சி செய்யும் சிறப்பினை உடையது. அவர் களை 'மூவரசு' என்று இலக்கியங்களும், தனிப்பாடல்களும் புகழும்.

மும்மன்னர் ஆட்சி

தமிழகத்திற்குச் சேர, சோழ, பாண்டியர் மூவேந்தர் ஆட்சி போலக் காங்கேய நாட்டிற்கும் மூவர் ஆட்சி என்பது புலவர் புகழும் செய்தி:

காடையூரில் இருந்து அரசு புரிந்தவர்கள் பொருளந்தை குலக் காடையூர் காங்கேய மன்றாடியார் மரபினர். பழைய கோட்டை ஆனூரில் இருந்து ஆட்சி புரிந்தோ பயிரகுலத் தலைவர் சர்க்கரை மன்றாடியார் மரபினர். காங்கேயத்தி லிருந்து ஆட்சி புரிந்தவர்கள் செங்கண்ண குலத்துத் தலைவர் கள் பல்லவராயர் மரபினர். இதனை இலக்கியம் பின்வருமாறு புகழுகிறது. இவர்கள் மூவரையும் காங்கேய நாட்டின் மூவரசு' என்பர். முதல் அரசு பொருள்தந்த குல அரசு என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கக் கட்டியும் தந்தியின் குட்டியும்
　　தரள மோகன மாலையின் பெட்டியும்
முன்கை கட்டியே நெஞ்சம் பறைகொட்டி
　　முடிமன்னர் தினம் கப்பங்கள் கட்டியும்
எங்கு மெட்டிய விருதுகள் கொட்டியும்
　　யானை பன்னிரு கடகங்கள் கட்டியும்
கொங்கை மெட்டியே இம்முடி சூடிய
　　குமார காங்கேயர் நாடெங்கள் நாடே!

காமத் துரோக எதிரியர் மிண்டன்
　　தக்க சொட்டை முனைவலர்க்குக் கண்டன்
தாய் முதுகில் கவிஞோர்கள் ஏறிச்
　　சவுக்கிலே அடிபோடப் பொறுத்துமே
நாமிந்தப் புலவோ னுக்குத்தொண் டானது
　　நல்ல தம்பிச் சருக்கரை உத்தமக்
காமிண்ட மன்றாடி மன்னன் கீர்த்தி
　　கதிக்கும் காங்கேய நாடெங்கள் நாடே!

நிதம்ப ரப்பிய தானதன் மங்களும்
நீதி சற்றும் வழாது வழங்கும்
புதன் பெருக்கிய புத்தியம் கல்வியும்
பூசு ரர்க்குச் செயுமுப காரமும்
இதம் பரவு சிவபூசை நேயமும்
யாவர்க்கு முபகா ரங்களே செய்யும்
சிதம்பரப் பல்ல வேந்திரன் அரசு
செலுத்து காங்கேய நாடெங்கள் நாடே!

மூவரும் கொடையிலும், வீரத்திலும் மக்களை ஆதரிக்கும் பண்பிலும் சிறந்து விளங்கினர்.

காங்கேய நாட்டின் சிறப்பு

காங்கேய நாட்டில் ஓடுவது மாநதியின் நீர்தான். வீதியில் தேர்களே உயர்ந்து காணப்படுகின்றன. இரவலரைத் தேடித் தானதர்மங்கள் செய்யும் நாடு காங்கேய நாடு. அங்கு உள்ள கோயில்கள் செழித்துக் காணப்படுகின்றன. அன்னக்கொடி கட்டித் தானதர்மம் செய்து இரவலர்க்குச் சோறு போடுவதால் அக் கொடிகளின் ஆட்டம் அங்கு காணப்படுகிறது. வேறு ஆட்டம் இல்லை. அதிர்வன முரசுகளேயாகும். எல்லோரும் பாடல்கள் இசைப்பர். இச் சிறப்புகளையுடையது காங்கேய நாடு என்கிறார் ஒரு புலவர்.

ஓடக் காண்பது மாநதி நீர்கள்
உயரக் கண்டது வீதியெங்கும் தேர்கள்
தேடக் கண்டது தானதன் மங்கள்
செழிக்கக் கண்டது தேவத் தலங்கள்
ஆடக் கண்டது அன்னக் கொடிகள்
அதிரக் கண்டது முரசு துடிகள்
பாடக் கண்டது கீதங்கள் யாரும்
பகரும் காங்கேய நாடெங்கள் நாடே!

எட்டுத் திக்குகளிலும் காங்கேய நாடு புகழ் பெற்றது. கொங்கு 24 நாடுகளிலும் தலைமையானது. அன்னதானத்தில் சிறந்த நாடு. கலை வளரும் நாடு. முடி சூடிய தலைவர்கள் அரசு புரிவது. சிவன் மலையில் சீருடன் தேரோட்டும் நாடு. செல்வம் சிறக்கும் நாடு என்று ஒரு பாடல் காங்கேய நாட்டைப் புகழுகிறது.

அட்டதிசை யெங்கணும் அறுநான்கு நாட்டிலும்
அதிபவுசு பெற்ற நாடு
அரதேசி பரதேசி பசியாற என்னாளும்
அன்னம் பகர்ந்தநாடு

மட்டுள்ள குலமாதர் நடனசங் கீதமும்
வரிசைபல பெற்றநாடு
வாகையுடன் நாட்டார்க்கு மணிமுடி சூட்டவே
வந்தரசு பெற்றநாடு

திட்டமுள சக்திசிவன் மலைவே லவர்க்குத்
திருத்தேர் நடத்துநாடு
செம்மைமிகு பனிரெண்டு கிராமநாட் டாருக்கும்*
செல்வம் சிறந்த நாடு

கட்டுமுடி தவறாது வெட்டிச் செயங்கொண்டு
கனபரிசு பெற்ற நாடு
கனசென்னி மலைகாஞ்சி ஆன்பொருநை சூழ்கின்ற
காங்கயநன் னாடுதானே!

மேலும் கவிஞர் காங்கேய நாட்டின் வளத்தை விவரிக்கின்றார். நீர் வளமும், நிலவளமும், மக்கள் மனவளமும் அதனால் தெரிகிறது.

---

* பிற்காலத்தில் ஆறுதொழு, ஆலாம்பாடி சேர்ந்து 14 கிராமங்கள் ஆயின.

'முத்து ரத்னம் விளைவுள்ள நாடு
முனிவர் வேள்வி வளங்கொண்ட நாடு
சத்திர சாலை மிகுந்துள்ள நாடு
தடந்தொறும் தண்ணீர்ப் பந்தல்உள நாடு
நித்திய மங்கள கலியாண நாடு
நிறைந்த செல்வம் சிறந்துள்ள நாடு
மெத்த வீரம் விஜயம் புகழும்
விளங்கும் காங்கேய நாடெங்கள் நாடே!'

'ரத்னம்' விளைவுள்ள நாடு என்பது மிகவும் அரிய உண்மை. காங்கேய நாட்டுப் பகுதியில் சிவன் மலை சூழ்ந்த பகுதியில் படியூர் உள்ளிட்ட ஊர்களில் பல வண்ணக் கற்கள் பன்னெடுங் காலமாய்க் கிடைக்கின்றன. சங்க காலத்தில் சேரர் ஆட்சிக் காலத்தில் அவை மணிகளாகச் செய்யப்பட்டும், பாசிகளாக உருவாக்கப்பட்டும் ரோம் நாட்டுக்கு ஏற்றுமதி ஆயிற்று. தமிழகப் பெண்களும் விரும்பி அணிந்தனர். காங்கேய நாட்டுக் கல்மணிகளை ரோம் நாட்டுப் பெண்கள் மிகவும் விரும்பி அணிந்தனர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கொடுமணல் அகழாய்வு அதனை இன்று மெய்ப்பிக்கிறது. பதிற்றுப்பத்து என்னும் சங்க இலக்கியமும் இதைக் கூறுகிறது. (பாடல் 67, 74).

காங்கேய நாட்டு வேளாளர்கள், அந்தணர், ஞானியர், புலவர், தேவர்கள் ஆகியோருக்குக் குறைவில்லாமல் உணவளிப்போம் என்று மேழிக் கொடிகட்டி அன்னமிடக்கூடியவர்கள். அவர்கள் செல்வம் மிக்கவர்கள். அரசர்கட்கு முடிசூடும் உரிமை படைத்தவர்கள். இதோ புலவர் பாடும் புகழ் வரிகள்.

'மறைய வர்க்கும் மெய்ஞ்ஞானி யர்க்குங்கவி
வாண ருக்கும் சிறந்திடு தேவர்க்கும்
குறைவி லாமல் அனம்கொடுப் போம் எனக்
கூ ர்ந்து மேழித் துவசங்கள் கட்டிய

நிறைந்த செல்வம்சம் பத்துள்ள வேளாளர்
நீதி மன்னர்க்கு மாமுடி சூட்டவே
இறைகு டிகள்எண் ணாயிரம் கோத்திரம்
இருக்கும் காங்கேய நாடெங்கள் நாடே'

வேளாளர் சடையப்ப வள்ளல் மரபினர் கொடுக்க வசிட்டன் இராமனுக்கு முடிசூடிய காட்சி இங்கு நினைவுகூரத் தக்கது.

'தொல்லுலகில் அதிக புகழ்பெறும் காங்கயம்', 'அதிக காங்கேய நாடு', 'பெரும் காங்கயம்', 'நாட்டிலுயர் காங்கயம்', 'நன்றான காங்கயம்' எனப் புகழ்கொண்ட காங்கேய நாட்டின் இப் புகழுக்கும்,மாபெரும் பெருமைக்கும் காரணமான ஊர்களில் நமது ஆலாம்பாடியும் ஒன்றாகும். ஆலாம்பாடி காங்கேய நாட்டின் பதினாலாம் ஊராக விளங்கும் பெருமை உடையது.

காங்கேய நாட்டு ஊர்கள்

காங்கேயம், வள்ளிஎறிச்சல், காடையூர், பட்டாலி, கீரனூர், பார்ப்பதி, பரஞ்சேர்வழி, காரையூர், மருதுறை, முத்தூர், கண்ணபுரம், வெள்ளகோயில், ஆறுதொழு, ஆலாம் பாடி ஆகிய 14 ஊர்களைக் காங்கேய நாடு தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

இவைகளைத் தொகுத்துக் காங்கேய நாட்டு ஊர்த் தொகைப் பாடல் ஒன்றும் பாடியுள்ளனர்.

காங்க யத்துடன் வள்ளிதென் காடையூர்
கந்தர் மேவிய பட்டாலி கீரனூர்
ஓங்கு பார்ப்பதி நற்பரஞ் சேர்வழி
உற்ற காரை மருதுறை வெண்முத்தூர்
தேங்கு கண்ண புரம்வெள்ளை கோவிலும்
சிறந்த ஆறுதொழு ஆலாம் பாடியும்
தீங்கி லாதகங் காகுல நாட்டார்
செழிக்கும் காங்கய நாடெங்கள் நாடே!

என்பது அப் பாடலாகும். சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல் என்னும் விதிப்படி ஆலாம்பாடி இறுதியில் சேர்க்கப் பட்டிருப்பதும் தனிச் சிறப்பு மிக்கதாகும்.

மெக்கன்சி ஆவணங்களும், வேறு சில பாடல்களும் காங்கய நாட்டில் 12 ஊர்கள் என்று கூறுகின்றன. ஆறுதொழு ஆலாம்பாடி ஆகியவை காங்கேய நாட்டு ஊர்களாக முன்பு சேர்க்கப்பெறவில்லை. அவ்விரண்டு ஊர்களும் காங்கேய நாட்டில் குடியேறிய பொருளந்தை குலத்து வேளாண் பெரு மக்களால் உருவாக்கப்பெற்ற புது ஊர்கள் ஆகும் அவ்விரு ஊர்களிலும் பொருளந்தை குலப் பெருமக்களே இன்றும் தனிக் காணியாளர்களாக வாழ்ந்து சிறந்து வருகின்றனர். பொருளந்தை குலக் காணிப்பாடல்களிலும் அவ்விரண்டு ஊர்களும் குறிக்கப்பெறுகின்றன.

இருபத்து நான்கு நாட்டுப் பட்டயம் என்னும் ஆவணம் ஒன்று சிவன்மலை, துறவலூர், தேவதானம், வீரசோழபுரம் ஆகிய நான்கு ஊர்களையும் காங்கேய நாட்டு ஊர்களுடன் சேர்த்துக் கூறுகிறது. தேவ தானம் என்பது ஆறுதொழுவே என்பது அறிஞர்கள் கருத்து, கோயிலுக்குக் கொடுக்கப் பெற்ற கொடை நிலங்கள் அவ்வூரில் மிகுந்திருந்ததே அப்பெயர் வரக் காரணம் ஆயிற்று.

சிவன் மலை

கொங்கு நாட்டில் முருகப்பெருமான் உவந்து உறையும் குன்றுதோறாடல் தலங்களுள் சிவன்மலையும் ஒன்று. சிவன் மலை, சிவமலை, சிவாசலம் சிவசைலம், சிவாத்திரி, சிவ நாகம், சிவன்மாமலை, சிவகிரி என்று பல்வேறு பெயரிட்டு அழைக்கப்பெறும் சிறப்பினை உடையது. ஆலாம்பாடியோடு நெருங்கிய தொடர்பு உடைய காரணத்தால் சிவன்மலை வரலாறு இங்கு கூறப்படுகிறது.

பொதுவாகக் காங்கேய நாட்டுத் தலைவன் சிவன்மலை முருகன் என்பது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

> 'தேங்கிய புகழ் எலாம்
> ஓங்கியே சிறந்த காங்கய நாடன்'

என்று சிவன்மலை முருகன் அழைக்கப் பெறுகின்றார்.

சிவன்மலையே காங்கேய நாட்டின் தலைமைத்தலம். ஆதலின், காங்கேய நாட்டு ஊர்த்தொகைப் பாடலில் சிவன் மலை சேர்க்கப் பெறுவதில்லை.

ஊர்

பன்னெடுங் காலத்திற்கு முன் குறிஞ்சியும் முல்லையும் மிகப் பெருகிப் பரவியிருந்த காலத்தில் சிவன்மலை அடி வாரத்தில் ஊர் ஏதும் இல்லை. மலையைச் சார்ந்து காடுகள் மிகவும் அடர்ந்து இருந்திருக்கவேண்டும். சிவன்மலையைச் சேர்ந்த ஊர், சிவன்மலைக்குரிய ஊர் அருகில் உள்ள பட்டாலியூரேயாகும். (இதேபோல் சென்னிமலை அடிவாரத் திலும் ஊர் ஏதும் முன்பு இல்லை பிடாரியூரே சென்னி மலைக்கு உரிய ஊராகும் என்று வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன).

சிவன்மலை பட்டாலியுடன் இணைத்தே பல இடங்களில் குறிக்கப்பெற்றுள்ளது இதனை விளக்கும்.

'அன்னம் பயிலும் பட்டாலிச் சிவன்மலை'

'ஞாலம் புகழும் பட்டாலிச் சிவமலை நன்னகர்'

என்பன இதனை உறுதிப்படுத்துகின்றன. பட்டாலி இலக்கியப் புகழ் பெற்ற பேரூர். அங்குள்ள பால்வெண்ணீசுவரர்—நல்ல மங்கையம்மன் இருவரின் மகனாகவே சிவன்மலை முருகன் குறிக்கப்பெறுவது அப்பழைய தொடர்பை நன்கு விளக்கும்.

'செல்வப்பட்டாலியில் பால்வண்ணர் பாலன்'

'பத்தர் பணி பட்டாலிச் சித்தர்'

'சிகரகோ புரமும் தெருஇரு புறமும்
அகரசீ கரமும் அன்னசத் திரமும்
மாடமா ளிகையும் கூடகோ ளகையும்
நீடுறு ககனத்து ஆடிடு கொடியும்
அந்தணர் வேள்வியும் செந்தமிழ்க் கேள்வியும்
உந்திய குடிகள் உலவுசந் தடியும்
பூமலர் ஓடையும் மாமணி மேடையும்
பூமினார் ஆடலும் காமனார் கூடலும்
கிட்டாது வானமும் கட்டோடு சோலையின்
மட்டார்ந்து வாழ்ந்திடு பட்டாலி யூரன்'

என்று சிவன்மலை முருகன் குறிக்கப்பெறுகின்றார். ஆனால், இன்று பட்டாலி என்ற ஊர் அழிந்து அருகில் அரசம்பாளையம் என்ற ஊர் ஏற்பட்டுள்ளது. கோவை கே. எஸ். வைத்திய நாதன் அவர்கள் அரசம்பாளையமும் படியூரும் இணைந்து பழங்காலத்தில் பட்டாலியாக விளங்கியது என்று கூறுகின்றார்.

'கந்தர் மேவிய பட்டாலி' என்று கூறப்படுவதும் சிவன் மலை முருகனை 'பட்டாலியூரன்' என்று அழைப்பதும் சிவன்மலையும் பட்டாலியும் பழங்காலத்தில் ஒன்றே என்பதை நமக்குக் காட்டுகிறது.

சிவன்மலை

24 நாட்டுப் பட்டயத்தில் பட்டாலியும், சிவன்மலையும் தனித்தனி ஊர்களாகக் குறிக்கப்பெறுகின்றன. அப் பட்டயம் எழுதப்பெற்ற காலம் 16ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 17ஆம் நூற்றாண்டின் தொடக்கம் ஆகலாம். அப்போது சிவன்மலை அடிவாரத்தில் மக்கள் குடியேறி வாழ்ந்திருக்க வேண்டும். அதனால் சிவன்மலை அடிவாரத்தில் உள்ள ஊர் சிவன்மலை என்றே பெயர்பெற்றது போலும்.

சிவன்மலையை அடுத்துக் கவுண்டம்பாளையம் என வழங்கும் ஊரையும், சிவன்மலையாகவே கொள்வர் வீரை, வீரையூர் எனப்படும் ஊரொன்றும் சிவன்மலையை அடுத்து உள்ளது.

'பார்புகழ் வீரைப் பட்டாலியூர்'
'வீரையூரில் திருச் சிவமலை வேலவர் தேர்'

எனவரும் பாடல் அடிகளால் வீரை என்ற ஊர் உள்ளது விளங்கும்.

சிவன்மலை, கலியாண சிவன்மலை, சத்தி சிவன்மலை, இருநிதிசூழ் சிவன்மலை, மகிமைசேர் சிவன்மலை, செல்வச் சிவன்மலை, தவசுபுரி சிவன்மலை என்றெல்லாம் புகழப்பெறும் சிறப்பினை உடையது.

இறைவன்

சிவன்மலையில் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருந்து அருள்புரியும் சிவன்மலையாண்டவர் ஆகிய முருகப் பெருமான் சிவாசல வேந்தன், சிவன்மலைக் காங்கேயன், சிவாசலத்திற் கந்தவேள், சிவாசல விசாகர், சிவசயில முத்தையன்' சிவமாமலைக் கந்தசுவாமி, சிவசைலக் குமரர், சிவன்மாமலை வேலன், சிவாத்திரிச் சண்முகன், சிவாத்திரி இறைவன், சிவமலை வேள், சிவமலைக் குகன், சிவசுப்பிரமணியர்

துரைசாமி, மரகத மயூரன், வள்ளிமணாளன், காங்கேயன் என்று பல்வேறு பெயர்களில் சிவன்மலையோடு இணைத்தும் தனியாகவும் கூறப்பெறுகிறார்.

இலக்கியங்கள்

காங்கேய நாட்டு மடவிளாகத்தில் அந்தணர் மரபில் மார்க்கண்டேய கோத்திரத்தைச் சேர்ந்த தேவராஜ பண்டிதருக்கும், நஞ்சுண்டம்மாள் என்ற பெண்மணிக்கும் 1767இல் பிறந்தவர் இலட்சுமண பாரதி. தமிழகமெங்கும் சென்று தம் புலமையை நிலைநாட்டியவர். சேதுபதி அரசரால் பாரதி என்ற பட்டம் பெற்றவர். அவர் சிவன்மலைக்குக் குறவஞ்சியும், மயில்விடு தூதும் பாடியுள்ளார். குறவஞ்சி திருச்செங்கோடு அ. முத்துசாமிக் கோனார் அவர்களால் அச்சிடப் பெற்றுள்ளது. மயில்விடுதூது இன்னும் அச்சேற வில்லை. பல்வேறு தனிப்பாடல்களும் சிவன்மலையையும், முருகப்பெருமானையும் புகழ்ந்து கூறுகின்றன.

'திருமிகு சிவமலை வாழ்—முருகனே
சித்தர்கள் தினம் துதிக்கும் அத்தன் மகனே
சீதரன் மருமகனே—நம்பினோர்கள்
சிந்தனையைத் தீர்த்து வைக்கும் கந்த நாதனே'

கொடுமணல், தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவரிடமிருந்து பெற்று ஈரோடு கலைமகள் கல்விநிலையத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுவரும் பல ஓலைச் சுவடிகளில் சிவன்மலையைப்பற்றிய பல்வேறு தனிப்பாடல்கள் உள்ளன. அவற்றில் ஒன்று;

'தகைமைபெறு முப்பத்து முக்கோடி தேவரும்
தாமரைக் கண்ணன் உந்தி
தனில்வந்த நான்முகன் இந்திரன் மயேசுவரன்
சப்தரிஷி யுங்கூடியே

மகமேரு மத்தாக நாகமுங் கயிறாக
மதிநடு தறியாகவே
வாரியும் தாளியாய் வைத்தவர் யாவரும்
வந்தமிர்தம் கடையும்வேளை
பகவனொரு பாலிலே நின்றிடும் போதுகன
பாரம் பொறுக்காமலே
பாதாளம் ஆகுதென்று ஆயிரக் கலாமை
பாருரு வாய்ப்படர்ந்து
செகமெலாம் தாங்கியே வாழ்வுபெற வேவைத்த
திருமாலின் மருகாகுகா
தெய்வானை வள்ளிமண வாளன்என வந்தவா
சிவன்மலைக் குமரேசனே!

என்பதாகும்.

'பண்பான சிவன்மலையிற் பண்டிதா சரணம்' என்று கொடுமணல் இலக்கியங்களில் ஒரு தொடர் வருகிறது.

அருணகிரியார்

கொங்கு நாட்டுக்கு மூன்று முறை வருகை புரிந்து சென்னி மலையில் படிக்காசு பெற்றுக் கொங்கு நாட்டில் பஞ்ச நிவாரணப் பணி செய்த அருணகிரிநாதர் பட்டாலி முருகனைப் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள மூன்று பாடல்களையும் சிவன் மலைப் பாடலாகவே நாம் கொள்ளலாம்.

'பயிரவி அருள் பட்டாலியூர்'
'பச்சோலை குலவு பனைவளர்
மைச்சோலை மயில்கள் நடமிடு பட்டாலி'
'கொங்கிற் பட்டாலி நகர்'

என்பவை அருணகிரிப் பெருமான் பட்டாலியை வருணிக்கும் பகுதிகளாகும்.

சிவன்மலைக் குறவஞ்சியில் சிவன்மலையில் நக்கீரரின் திருமுருகாற்றுப் படையுடன் அருணகிரிப் பெருமானின்

திருப்புகழ் இங்கு படிக்கப்படுகிறது என்று கூறுவதும் நோக்கத் தக்கது.

'நக்கீரர் தமிழ் உரைத்தே நலம்பெருகும் வாசலிது'
'பொற்புடனே அருணகிரி திருப்புகழ் படிக்கும் வாசலிது'

என்ற வரிகள் அருணகிரிநாதருக்கும் சிவன்மலைக்கும் உள்ள தொடர்பை விளக்கும்.

கல்வெட்டு

சிவன்மலையின் கல்வெட்டுகள் இல்லை; ஆனால் அருகில் உள்ள கவுண்டம்பாளையத்தில் விநாயகர் கோயிலுக்கு எதிரில் உள்ள ஒரு பலகைக் கல்லில் சிவன்மலை முருகன் தொடர்பான கல்வெட்டு ஒன்று உள்ளது.

கலியுகம் 4894இல் சாலிவாகன சகம் 1717இல் பிரமாதிச ஆண்டு சித்திரை மாதம் சிவன்மலை ஆண்டவருக்கு உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர்களால் 15 வள்ளம் பூமி கொடையாக அளிக்கப்பெற்ற செய்தி அங்கு கல்வெட்டாக வெட்டப் பட்டுள்ளது. இதனை 1920ஆம் ஆண்டு மத்தியத் தொல் பொருள் துறையினர் படியெடுத்துள்ளனர் (எண் 291).

சிறப்புகள்

சிவன்மலை பல்வேறு பெருமைகளைத் தன்னுள் அடக்கியது மூலிகைகள் பற்பல நிரம்பியது. அற்புதங்கள் பலவற்றைக் கொண்டது. முனிவர்கள் தவமிருந்த சிறப்புப் பொருந்தியது. மரம், செடி, கொடி, கிழங்கு வகைகள் மிகுதி யாகப் பெற்றது. அதன் விசேடங்கள் பலப்பலவாம். சிவன் மலைக் குறவஞ்சியில் இவற்றை மிகவும் விரிவாகக் காணலாம்.

அஷ்டதுர்க்கை, அஷ்டபத்திரகாளி எட்டுத்திக்கும் காவல் காப்பதாகக் கூறப்படுகிறது. சிறப்பாசு கிழக்குத் திசைத் துர்க்கை காட்டம்மை எனும் பெயரில் ஆலாம்பாடியில்

உள்ளது. விசேடமிக்க புராணப்படி என விளங்கும் பதினெட்டாம்படி, கன்னிமார், பத்தினிப் பெண் சடைச்சியம்மாள் பற்றியும் குறவஞ்சியில் குறிப்புகள் வருகின்றன. தெப்பக்குளங்களும், பூந்தோட்டங்களும், அன்னசத்திரங்களும் பல சிவன்மலையில் உள்ளன என்று கூறப்படுகிறது.

பட்டாலிச் சிவன்மலைக்கு வடக்கில் சம்பு நதி உள்ளதாகக் கூறப்படுவதுடன் மலையில் உள்ள பொய்கைக்கு சரவணப் பொய்கை என்ற பெயர் கூறப்பெறுகிறது. அச் சரவணப் பொய்கை மதுரையில் உள்ள சங்கத்தார் மூழ்கிய பொற்றாமரைக் குளத்திற்கு இணையாகக் கூறப்பெறுகிறது.

சிவபெருமான் திரிபுர சம்காரம் செய்யும்போது மேரு மலையின் சிகரங்களில் ஒன்று விழுந்து சிவன்மலை ஆயிற்று என்பது புராணக் கருத்து.

புலவர்கள்

சிவகிரி பண்டிதர், ஆறுமுகக் குருக்கள் போன்றோர் சிவன்மலையில் வாழ்ந்த புலவர்கள். அவர்கள் சிவன்மலை பற்றியும், கொங்கு நாட்டின் பல தலங்கள், பாளையக்காரர் பற்றியும் பல்வேறு பாடல்கள் பாடியுள்ளனர். 'வித்வஜனர் கவி விளம்பும் முழக்கம்' சிவன் மலையில் உள்ளதாகக் குறவஞ்சி கூறும். சிவன்மலையில் 'கவிவாணர்கள்' இருப்பதாகக் காங்கேய நாட்டுப் பாடலில் குறிப்பு வருகிறது.

திருப்பணியும் கொடையும்

காங்கேய நாட்டு அரசர்கள் எனப் புகழப்பெறும் பொருளந்தை குலக் காடையூர் காங்கேய மன்றாடியார், பயிர குலப்பழைய கோட்டைச் சர்க்கரை மன்றாடியார், செங்கண்ண குலக் காங்கேயம் பல்லவராயர் ஆகிய மூவரும் பண்டைக் காலத்தில் பல்வேறு கொடைகள் அளித்துள்ளனர். விழா வெடுத்துள்ளனர். சிவன்மலைக்கு வந்து வழிபட்டுள்ளனர்,

பொருள்தந்த குல அழைப்பிச்சான், பச்சைராயன், காங்கேயன், கீரனூர் காடைகுலச் செல்லன், கருப் பண்ணன், ஆதிகுலக் குப்பண்ணன், பார்ப்பதி தோடை குலச் செல்லய்யன், பெரியண்ணன், முத்தய்யன், கண்ணந்தை குலச் சின்னத்தம்பி, செல்லையன், முத்து வேலய்யன், பரஞ்சேர்வழி பயிரகுலச் சின்னய்யன், ஆவகுலச் சென்னிமலை, ஆறுதொழு பொருள்தந்த குலப் பழனியப்ப கவுண்டர்,

காங்கேயம் செங்கண்ண குல அமராபதி சுந்தர காங்கேயன், தூரகுலம் நாகமலை, குமார நாச்சிமுத்து, வள்ளி எறிச்சில் ஆந்தை குலச் சிவன்மலை, புல்லகுல நல்லணன், கருமணன், பட்டாலி கண்ணகுலச் சின்னய்யன்.

ஆகியோர் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல கொடைகளைச் சிவன்மலைக்கு அளித்துள்ளனர்.

ஆலாம்பாடி பொருள்தந்த கோத்திரத்தில் முத்துக்குமாரக் கவுண்டர், நல்ல குமாரக் கவுண்டர், தம்பண கவுண்டர் ஆகியோர் வள்ளல் தன்மையுடன் வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் மடவளாகம் இலட்சுமண பாரதியை ஆதரித்து உள்ளார்கள். இவர்கள் பெயர்களை இலட்சுமணபாரதி சிவன் மலைக் குறவஞ்சியில் குறிப்பிடுகின்றார்.

இப் பாடல் பகுதியில் மடவளாகம் பச்சோட நாதர் தேவஸ்தானம் ஆலாம்பாடி என்று சூலக்கல் எட்டுத் திசை களிலும் நாட்டியிருப்பதாக இலட்சுமணபாரதி கூறுகிறார். பாடல் பகுதி,

செஞ்சடை யீசன் பச்சோட நாதர்தன்
தேவஸ்தானம் என்று திக்கெட்டும் சூலம்
மிஞ்சும்ஆ லாம் பாடிப் பொருளந்தை கோத்திர
வேளாளன் முத்துக் குமாரன் திருத்தின

நஞ்சை யிடத்தினும் சந்தைத் தோப்பினும்
நல்ல குமாரன் விதுரன் வயலிலும்
கொஞ்சும் கிளிகளும் காணாங் கோழிகளும்
குளத்தின் உள் வாயிலும் தம்பணன் பாட்டத்தும்

என்பதாகும்.

ஆலாம்பாடியும் சிவன்மலையும்

சிவன்மலையின் அருகேயுள்ள காங்கேய நாட்டு ஊர் ஆலாம்பாடியாகும். சிவன்மலைக் குருக்கள் குலதெய்வமாகக் கொண்டாடும் காட்டம்மை கோயில் ஆலாம்பாடிக் கிராமத்தில் உள்ளது. சிவன்மலையைச் சேர்ந்த எண்திசைத் துர்க்கை ஆலயத்தில் ஒன்றாக ஆலாம்பாடிக் காட்டம்மை கோயிலைச் சிவன்மலைக் குருக்கள் கூறுகின்றனர். பொருள் தந்த குலத்தினர் காங்கேய நாட்டில் நாள்தோறும் வழிபடும் கோயில் சிவன்மலைக் கோயிலாகும்.

ஆலாம்பாடி

இருப்பிடம்

பெரியார் மாவட்டம், காங்கேயம் வட்டத்தில் காங்கேயம்—சென்னிமலை நெடுஞ்சாலையில் காங்கேயத்தின் வடக்கே 6 கி.மீ. தொலைவில் ஆலாம்பாடி உள்ளது.

மேட்டு நிலப்பகுதியும், ஊர் நத்தமும், பண்டைய குடியிருப்புப் பகுதிகளும் சாலைக்கு மேற்குப்புறமே அமைந்துள்ளன. தொல்பழங்காலச் சின்னங்களும் மேற்குப்புறமே காணப்படுகிறது. எனவே பண்டைய ஊர் சாலைக்கு மேற்குப்புறமே அமைந்திருந்தது எனலாம். காலப் போக்கில் ஊர் சாலைக்குக் கிழக்கே இடம் பெயர்ந்திருக்க வேண்டும்.

ஆவின் சிறப்பு

ஆல மரத்தின் அடிப்படையில்தான் இவ் ஊருக்குப் பெயர் அமைந்திருக்க வேண்டும். ஆலமரம் புனிதமும் தொன்மைச் சிறப்பும் மிக்கதாகும். சங்க இலக்கியத்தில் ஆலங்கானம்—தலையாலங்கானம் குறிக்கப்படுகிறது. (அகநானூறு 36, 175; புறநானூறு 23; மதுரைக் காஞ்சி 126-129). ஆலங்காடு என்பது தேவாரப் பதிகம் பெற்ற திருத்தலம். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் சைவத் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. ஆலங்குடி வங்கனார் என்பவர் சங்க இலக்கியம் குறிக்கும் ஒரு புலவர் பெயர் (அகநானூறு 106; புறநானூறு 319). ஆலத்தூர் கிழாரும் ஒரு சங்கப் புலவரே. இப் பெயர்கள் அனைத்தும் ஆலமரத்தின் அடிப்படையில் தோன்றிய பெயர்களேயாகும்.

சிவபெருமான் ஆலமரத்தின்கீழ் எழுந்தருளிய காரணத்தால் ஆலமர் கடவுள் எனப்பட்டார். ஆல்கெழு கடவுள், ஆலமர் செல்வன் என்பதும் சிவபெருமானின் பெயர்களாகும். திருமாலுக்கும் இப்பெயர் உண்டு (புறநானூறு 198). பல கோயில்களில் ஆலமரம் தல விருட்சமாக இருக்கிறது.

சங்க இலக்கியத்தில் கோசர்கள் வரலாற்றில் தொன்முது ஆலம் பேசப்படுகிறது (குறுந்தொகை 15). ஆலமர நிழலில் மன்றம் கூடுமென்றும், வீரர்கள் தங்குவர், கடல் தெய்வம் உறையும் என்றும் கூறப்பட்டுள்ளது. தட்சிணாமூர்த்தி ஆலமரத்தின் கீழ் இருந்தே உபதேசம் செய்கின்றார். சப்தமாதர், வீரபத்திரர் ஆலின்கீழ் குடிகொள்வர். குபேரன் ஆலமரத்தின் அடியில் உறைவான் என்பது பண்டைய வழக்கு (புறநானூறு 198). வருணனும் ஆலமரத்தில் வசிப்பதாக ஐதீகம்.

ஆலமரம் நீண்ட நெடுநாட்கள் இருக்கும் தன்மை உடையது. சிறிய விதையை உடையது. ஆனால் பெரிய—பரந்த மரமாக வளரக் கூடியது.

'தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே'

என்பது பழம்பாடலாகும். அரசரின் சேனையே ஆலமர நிழலில் தங்கும் என்பது மரபு.

அகலமரம் என்பதே ஆல மரம் ஆயிற்று என்பர். மொழியில் இரு குற்றெழுத்துக்கள் நெடிலாக மாற இடம் தருகிறது. (பெயர்-பேர்; இரு-ஈர்). இலை உண்கலமாகப் பயன்படும். ஆலம் விதையிலும், விழுதிலும் பல் தேய்க்கலாம். 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி' என்பது பழமொழி அல்லவா? ஆலமரம் சிறந்த மருத்துவக் குணம் வாய்ந்தது.

ஆலின் பால் கால்வெடிப்புக்குப் பயன்படும். ஆலமரப் பட்டை நீரிழிவுக்கு மருந்தாகும். ஆல விதையை லேகியம் செய்து சாப்பிட்டால் உடல் குளிர்ச்சியாகும் ஆலம் கொழுந்தில் பல்வலிக்கு மருந்து தயாரிக்கப்படுகிறது.

ஆலமரம் அடிமரம் கெட்டாலும் விழுதுகள் தாங்கும் தன்மை உடையது. இவ்வளவு சிறப்புமிக்க ஆலமரத்தையே வணங்கும் வழக்கத்தைப் பண்டைய மக்கள் மேற்கொண்டனர். ஆலமரத்தை வணங்கி அதற்கு ஆடு, கோழி, பன்றிகளைப் பலியிட்டனர். ஆலமரத்தை வணங்கினால் எதிரிகள் பணிவர், மக்கட்பேறு கிடைக்கும், பொருள்வளம் பெருகும் என்று நம்பினர்.

சீவக சிந்தாமணியில் சீவகன் இளவயதில் தான் விளையாடிய ஆலமரத்திற்கு மாலை அணிவித்துப் பொற்பீடம் அமைத்து அதற்கு 5 ஊர்களைக் கொடையாகக் கொடுத்தான் என்று கூறப்படுகிறது. (சீவக சிந்தாமணி 12 : 197 - 2574).

எனவே ஆலமரத்தோடு தொடர்புடைய இவ்வூர் மேற்கண்ட பெருமைகளுக்கெல்லாம் உரியதாக உள்ளது என்பது தெரியவரும். இன்றும் சில பழமையான ஆலமரங்கள் ஆலாம்பாடியில் உள்ளன.

பெயர்க் காரணம்

இவ்வூர் 'ஆலம்பாடி' என்று மடவிளாகம், ஆலாம்பாடிக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது. ஆனால் சிவன்மலைக் குறவஞ்சி, காணிப் பாடல்கள் போன்ற இலக்கியங்களில் 'ஆலாம்பாடி' என்று குறிக்கப்படுகிறது. இருவகை வழக்கும் உண்டு என்பது இதன்மூலம் தெரிகிறது.

பாடி என்ற சொல்லுக்கு நகரம், சேரி, முல்லை நிலத்து ஊர், நாடு, சேனை, கவசம், பாசறை ஆகிய பல பொருள்கள் கூறப்படுகின்றன.

கொங்கு நாட்டில் கவுந்தப்பாடி, கறைப்பாடி, பூதப்பாடி காராப்பாடி, இடைக்கலப்பாடி, சாந்தப்பாடி, புங்கம்பாடி, இலக்கம்பாடி, தூரம்பாடி, கிழாம்பாடி, தாழம்பாடி, தகடப் பாடி, இடைப்பாடி போன்ற பல ஊர்கள் பாடி என்று பெயர் கொண்டுள்ளன. அவற்றுள் நம் ஆலாம்பாடி என்பதும் அவைபோல் தொன்மையான ஊர் என்பதில் ஐயமில்லை. சில ஆவணங்களில் வாடி என்ற பெயரும் பாடி என மருவி வழங்கி யுள்ளது (கன்னிவாடி—கன்னிபாடி).

ஆலமரத்தின் அடிப்படையில் ஏற்பட்ட நகரம் ஆலம்பாடி அல்லது ஆலாம்பாடி ஆயிற்று. இரு வழக்கும் சரியான வழக்கேயாகும். ‘ஆலநகர்’ என்றும் புலவர்கள் புகழ்ந்துள்ள பெருநகரமாக ஆலாம்பாடி விளங்கியுள்ளது.

வணிக நகர்

நகர் அல்லது நகரம் என்பது வணிகர்கள் கூடியுள்ள இடத்திற்குப் பெயராக அமையும். பண்டைய பெருவழியில் அமைந்துள்ளதாலும், பிற்காலத்திலும் வணிகம் செய்த செட்டியார்கள் குளத் திருப்பணி செய்திருப்பதாலும், கீரனூர், பட்டாலி, காங்கேயம் போன்ற அருகில் உள்ள ஊர்களில் மிகப் பெரிய வணிக மையங்கள் இருந்தமையாலும் ஆலாம்பாடியும் வணிக மையமாக அமைந்திருந்தது எனலாம். பாப்பினிக் கல்வெட்டில் 1469ஆம் ஆண்டு ஆலாம்பாடியில் சுங்கம் வசூலித்த செய்தி கூறப்படுவதனாலும் இங்கு வணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளமை புலப்படுகிறது. பதினெண் விஷயம் என்னும் வணிகக்குழு பற்றி மடவிளாகம் கல்வெட்டுக் கூறுகிறது. ஆலாம்பாடி ‘சந்தைத்தோப்புப்’ பற்றிச் சிவன் மலைக் குறவஞ்சி குறித்துள்ளது.

தொன்மையான பகுதி

கொங்கு நாட்டின் பழைய பூகோள அமைப்பைப்பற்றி நூல் எழுதியுள்ள திரு. கே. எஸ். வைத்தியநாதன் அவர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சின்னங்கள் ஆலாம்பாடியில் கிடைப்பதாக எழுதியுள்ளார்.

1800 வாக்கில் கொங்கு நாட்டுப் பழம் பொருட்களை ஆய்ந்து குறிப்புக்கள் சேகரித்த ஆய்வாளர் மெக்கன்சியின் உதவியாளர்கள் காங்கேய நாட்டுப் பதினான்கு ஊர்களிலும் தொல்பழங்காலச் சின்னங்கள் காணப்படுவதாக எழுதி யுள்ளனர்.

8-1-1469 ; 30-1-1469 ஆகிய நாட்களில் மடவிளாகம் பச்சோட்டு ஆவுடையார் கோயிலில் வெட்டப்பட்டுள்ள விசய நகர மன்னன் விருப்பாட்ச உடையார் (1465-1486) கல்வெட்டுமூலம் ஆலாம்பாடியில் மக்களைக் குடியேற்றிய செய்தி புலப்படுகிறது. ஆனால் அதற்கு முன்னரே இங்கு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது மேற்கண்ட பழம் சின்னங் களால் உறுதிப்படுகிறது.

ஏற்கனவே மக்கள் வாழ்ந்த பகுதியில் புதியதாகக் காடழித்து நாடாக்கிப் புதிய மக்களையும் குடியேற்றித் தனிக் கிராமமாக அறிவித்துக் காங்கேய நாட்டிலும் ஓர் உறுப்பாக ஆக்கிய நிகழ்ச்சியே 15ஆம் நூற்றாண்டில் நடைபெற்றுள்ளது

தேவதானக் கிராமம்

பாப்பினி காங்கேய நாட்டின் பழமையான ஊர் பாப்பினிக்குரிய சிவாலயம், பெருமாள் ஆலயம் முதலியன மடவிளாகத்தில் உள்ளன. மடவிளாகம் சிவாலயம் பாப்பினி

பச்சோட்டு ஆவுடையார் கோவில் என்றே அழைக்கப் படுகிறது.

விசயநகர மன்னர்கள் காலத்தில் பாப்பினி (மடவிளாகம்) பச்சோட்டு ஆவுடையாருக்கு ஆலாம்பாடியைத் தேவதான மாக அளித்துள்ளனர்.

'காங்கேய நாட்டுப் பாற்பதியில் உடையார் பச்சோட்டா வுடையாற்கு மேற்படி நாட்டு ஆலம்பாடியூர் நான்கெல்லைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை தோட்டம் தொடிகை கராசு கைவினை வாசல் மனை வாலவரி முதல் காணிக்கை வினியோகம் தறிபிறை பட்டடை சுங்கம் நல்லெருது நற்பசு வெட்டி வேகாளி காணம் நெய்யுட்பட சறுவ ஆதாயமும்' பாப்பினிக் கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆலாம்பாடியில் உள்ள புஷ்பகிரி எனப்பட்ட நந்தவனத்தி லிருந்து மடவிளாகம் பச்சோட்டு ஆவுடையார் கோயிலுக்குச் சுமார் 50 ஆண்டுகள் முன்புவரை பூசைக்கு மலர்கள் சென் றுள்ளன. நந்தவனம் இருந்த இடத்தில் இன்று மிகப்பெரிய கிணறும், விநாயகர் கோயிலும் உள்ளன. நந்தவனத் தோட்டம் என்ற பெயர் இன்றும் உள்ளது.

இதனைப் பாப்பினிக் கோயில் கல்வெட்டில் பொறித்த துடன் ஆலம்பாடியிலும் சூலக்கல் பொறித்து அதில் கல்வெட் டாகவும் வெட்டி வைத்தனர். ஆலாம்பாடி மாரியம்மன் கோயில் அருகே நடப்பட்டுள்ள குத்துக்கல்லில் கிழக்குப் புறம் அழகிய சூலமும், மேற்குப்புறம்

ஆலம்பாடி நான்கெல்லையும் தேவதானம் பச்சோட்டு ஆவுடையார் ஊர் எனக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. சூலத்தின் மேல் பகுதியில் பச்சோட்டு ஆவுடையார் என எழுதப்பட்டுள்ளது.

இலக்கியத்தில் ஏறிய செய்தி

இந் நிகழ்ச்சி புகழ்பெற்ற மடவிளாகம் இலட்சுமணபாரதி அவர்கள் எழுதிய சிவன்மலைக் குறவஞ்சி என்னும் நூலிலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'செஞ்சடை யீசன்சிவன் பச்சோடர்தன்
தேவஸ்தானம் என்று திக்கெட்டும் சூலம்
மிஞ்சும் ஆலாம்பாடி'

என்பது சிவன்மலைக் குறவஞ்சிப் பகுதியாகும். ஆலாம்பாடி எட்டுத் திக்குகளிலும் சூலக்கல் பொறித்துள்ளதாகக் கூறப்படு கிறது. ஆனால் இன்று ஒரே சூலக்கல் மட்டும் கல்வெட்டுடன் காணப்படுகிறது. கல்வெட்டுப் பொறிக்காத சிறிய சூலக்கல் ஒன்றும் நத்தக்காட்டில் உள்ளது.

15ஆம் நூற்றாண்டில் ஆலாம்பாடி

பாப்பினிக் கல்வெட்டுக்கள் மூலம் ஆலாம்பாடி பற்றிய பல அரிய செய்திகள் வெளிப்படுகின்றன.

ஆலாம்பாடி அப்போதே காங்கேய நாட்டு ஊர்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண்மையும் பல கைத்தொழிலும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. வீடுகள் பல அமைக்கப்பட்டிருந்தன. நெசவுத் தொழில், செக்குகள் வைத்து எண்ணெ எடுக்கும் தொழில் நடைபெற்றுள்ளது. பல தொழில்கள் சிறப்புடன் நடைபெற்றுள்ளன. கால்நடைச் செல்வம் மிகுதியாக இருந்துள்ளது. வணிகம் சிறப்பாக நடை பெற்றுள்ளது. 'தழைத்த ஆலாம்பாடி' எனக் காணிப்பாடல் குறிப்பதால் ஆலாம்பாடியின் வளமும் செழிப்பும் நன்கு விளங்கும்.

புகழ்பெற்ற வாவி

சிவன்மலைக் குறவஞ்சியில் ஆலாம்பாடி

'வாவிசூழ் ஆலநகர்'

என்று புகழப்படுகிறது. வாவி என்பது குளம் ஆகும். மாரியம்மன் கோயில் குறிஞ்சியின் வடமேற்குத் தூணில் ஒரு கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டில்

'...செட்டியார் மகன் வெள்ளை செட்டியார்
வாவி உபயம்'

என்று அக்கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது. வெள்ளை செட்டியார் வெட்டி வைத்ததால் வெள்ளை வாவி என்று பெயர் பெற்ற அக்குளம் நெடுஞ்சாலையின் மேல்புறம் இன்று நடை கிணறு போன்ற தோற்றத்துடன் காணப்படுகிறது.

சில பழைய இடப்பெயர்கள்

மேற்கே சிவன்மலையையும் கீரனூரையும், வடக்கே பரஞ்சேர்வழியையும், கிழக்கே பாப்பினியையும், தெற்கே காங்கேயத்தையும் எல்லையாக உடைய பழம்பெரும் அணி நகர் ஆலாம்பாடியில் சில இடங்களுக்கு வழங்கும் பெயர்கள் ஊரின் வரலாற்றுச் சிறப்பு, தொன்மைச் சிறப்பு, பசுமைத் நன்மை, வற்றாத வளம், சோலைகளின் செறிவு ஆகியவை களைக் காட்டுகின்றன.

அவ்விடங்களின் பெயர்கள், அரண்மனைத் தோட்டம், சாம்பல் தோட்டம், மானுவக்காடு, நத்தமேடு, தண்ணிக் கிணத்துத் தோட்டம், குளத் தோட்டம், சின்ன நந்தவனத் தோட்டம் பெரிய நந்தவனத் தோட்டம், மாந்தோப்புக்காடு தோட்டம், வில்லமரத் தோட்டம், வேலங்காட்டுத் தோட்டம்,

என்பனவாகும். கல்லேரி, வெள்ளைவாவி என்பன நீர் நிலைகளை உணர்த்தும் பெயர்களாகும்.

நத்தமேடு என்பது பழைய ஊரழிவுப் பகுதியாகும். சாம்பல் தோட்டம் என்பதும் தொல் பழங்காலச் சின்னம் அமைந்துள்ள இடப்பகுதியாகும். ஒன்பது இடங்கள் தோட்டத்தின் பெயரைப் பெறுவது ஆலாம்பாடி அக்காலத்தில் பெற்றிருந்த நீர் வளத்தைக் காட்டுகிறது. மானுவக்காடு என்பது கொடையளித்த பகுதியாகும். அவை பாப்பினிக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட மானியமாக இருக்கலாம். ஒரு காலச்தில் ஆலாம்பாடி ஊர் முழுவதும் பாப்பினிச் சிவாலயத் திற்கு மானியமாக அளிக்கப்பட்டது என்பது வரலாறு.

சென்னிமலையிலிருந்தும், காங்கேயத்திலிருந்தும் ஆலாம்பாடி வந்து செல்லப் பேருந்து வசதிகள் உள்ளன. காங்கேயம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி இங்குள்ளது. சுமார் 100 பெண்கள் பணிபுரியும் காங்கேயம் சர்வோதய சங்கத்தின் கிளை இங்குள்ளது. நூற்பும், நெசவும் நடை பெறுகிறது. சரஸ்வதி ரைஸ் மில் இங்குள்ள தொழில் நிறுவன மாகும்.

அண்ணன்மார் ஆலயமும் திருப்பணியும்

திருப்பணிப் பெருமை

ஒரு புதிய கோயில் கட்டுவதைக் காட்டிலும் பழைய கோயிலைத் திருப்பணி செய்வது மிகவும் புண்ணியம் தரும் செயலாகும். அறத்தைப் புதியதாகச் செய்வதைக் காட்டிலும் முன்னோர்கள் செய்த அறங்களைப் பேணிப் பாதுகாப்பதே சிறந்தது என்று அறநூல்கள் கூறுகின்றன.

பழைய கோயிலின் சிதைந்த பகுதிகளைச் சரிசெய்து

'கல்லினால் அமைத்த பேர்கள்
கைலைவிட்டு அகலார் தாமே'

என்பது ஒரு பழம்பாடல் பகுதி.

'முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவும்
தெரிந்து முன்னையில் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங்கு உறுவர்'

என்பது காஞ்சிப் புராணத்தில் சிவபுண்ணியம் படலப் பாடலாகும்.

'திரிசேர் விளக்கென' ஆலயத்தைக் காக்க வேண்டும் என்று தென்காசிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இதையெல்லாம் நன்கு உணர்ந்த ஆலாம்பாடி அண்ணன்மார் கோயில் காணியாளப் பெருமக்கள் சிறிய கோயிலாகவும், நெடுங்காலம் திருப்பணியின்றியும் இருந்த தம்

காணியுரிமைக் கோயிலைத் திருப்பணிகள் பல செய்து குட முழுக்கு விழாச் செய்ய முன்வந்தனர். அண்ணன்மார் சுவாமி களின் அருளே இப்புனித நிகழ்ச்சி நடைபெறுவதற்குக் காரண மாகும்.

பணி செய் குழுக்கள்

இறையருளால் ஆலய வளர்ச்சியிலும் திருப்பணிக் கைங்கர்யத்திலும் ஆர்வமுடைய ஆலாம்பாடிக் காணியாளர் களான பொருளந்தை குலப் பெருமக்கள் ஒன்றுகூடிச் செய்ய வேண்டிய நற்காரியங்களைத் தீர்மானித்தனர்.

முதலில் ஆலயத் திருப்பணிக் குழுவிற்கு திருவாளர்கள் ஆலாம்பாடி வரதப்ப கவுண்டன் புதூர், எம். கோவிந்தசாமிக் கவுண்டர் அவர்களைத் தலைவராகவும் குப்பக் கவுண்டன் வலசு ஆர். முத்துசாமிக் கவுண்டர் அவர்களைத் துணைத் தலைவராகவும், வரதப்ப கவுண்டன் புதூர் மு. சுப்பிரமணியக் கவுண்டர், துரைசாமி என்கிற முத்துச்சாமிக் கவுண்டர். குப்பக் கவுண்டன் வலசு, சாம்பத் தோட்டம் ஆர். முத்துசாமி, எஸ். சிவசாமிக் கவுண்டர், வேலாங்காட்டுப் புதூர் பொன்னு சாமிக் கவுண்டர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

பின்னர் நடைபெற்ற திருப்பணிக் கூட்டத்தில் திருவாளர்கள் வேட்டைக்காரன் புதூர் வி. ஏ. இராசரத்தினக் கவுண்டர், வி. பி. செயபால் கவுண்டர், வி. பி. லட்சுமிபதிக் கவுண்டர், சேயூர் கே பி. பழனிசாமிக் கவுண்டர் ஆகியோர் திருப்பணிக்குழு உறும்பினர்கள் ஆகினர். ஒவ்வொரு தமிழ் மாதமும் 1-15 தேதிகளில் திருப்பணிக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

திருவாளர்கள் வேட்டைக்சூரன் புதூர் வே. ப. சபாபதிக் கவுண்டர், திருப்பூர் ஏ. ராயப்ப கவுண்டர், சாலைப்புதூர்

கே. மாரப்ப சுவுண்டர், இராவணாபுரம் ஆறுச்சாமிக் கவுண்டர், வாணிப்புத்தூர் ஆர். இராமசாமிக் கவுண்டர், சேயூர் சே. இராக்கியன சுவுண்டர், செங்காவி வலசு ஆர். முத்துசாமிக் கவுண்டர், திருப்பூர் ஆர். சுப்பிரமணிய கவுண்டர், அனுப்பர் பாளையம் சி. ஆறுமுகம் ஆகியோர் திருப்பணிக்குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

வேட்டைக்காரன் புதூர் வி. கே. ரங்கராஜுக் கவுண்டர், வி. ஆர். திருமலைசாமிக் கவுண்டர், வி. ஆர். சேனாபதிக் கவுண்டர் உள்ளிட்ட பல காணியாளர்கள் ஆர்வத்துடன் திருப்பணிகளில் பங்கு கொண்டனர்.

திருப்பூர் விஸ்வபாரதி டெக்ஸ்டைல் உரிமையாளர் இராயப்ப கவண்டர் திருப்பணியில் சிறப்பாகப் பங்கு கொண்டார். இப்போது அவர் மகன் சுப்பிரமணியம் அவர்கள் திருப்பணிச் செயல்களில் ஆர்வம் காட்டி வருகிறார். அவிநாசி வட்டம் அவனாயிபுதூர் பழனியப்ப கவுண்டர், அதே வட்டம் கண்ணாண்டாங்குளம் பழனிசாமி அவர்கள் ஆலயத் திருப் பணியில் ஆர்வம் காட்டினர். திருப்பூர் சென்னிமலைக் கவுண்டர் மக்கள் குப்புசாமிக் கவுண்டர், ஆறுமுகக் கவுண்டர் ஆகியோர் திருப்பணியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பலமுறை திருப்பணிக் குழுக் கூட்டங்கள் ஆலயத்தில் நடைபெற்றன. 1-9-1986ல் நடைபெற்ற கூட்டத்தில் 4 லட்சம் ரூபாய் அளவில் திருப்பணி செய்ய முடிவு மேற் கொள்ளப்பட்டது. ஆனால் இப்போது அன்பர்கள் ஆதரவால் ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய்க்கு மேல் திருப்பணிக்குச் செலவிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருப்பணித் தொடக்க விழா

22-8-1986 அன்று ஒரு நல்ல வெள்ளிக்கிழமை திருப்பணித் தொடக்கக் கால்கோள் விழா மிகவும் சிறப்பாக

நடைபெற்றது. சிரவையாதீனம் தவத்திரு. சுந்தர சுவாமிகள் திருப்பணியைத் தொடங்கி வைத்தனர். காணியாளர்கள் பலர் எல்லையற்ற ஆர்வத்துடன் பல ஊர்களிலிருந்து வந்து கூடித் தங்கள் வாழ்முதலாகிய அண்ணன்மார் சுவாமி ஆலயம், பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாசு வந்த திருக்கூட்டம்போல் கூடிக் குலவி உற்றாரும் உறவினருடன் வழிபட்ட ஆலயம் தங்கள் காலத்தில் திருப்பணி செய்யப் படுவதை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர்.

தொடக்க விழாவில் கொங்கு நாட்டின் பல்வேறு பகுதிப் பெருமக்களும், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் கே. சின்னசாமிக் கவுண்டர் உட்படக் காங்கேய நாட்டுப் பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருப்பணிகள்

அண்ணன்மார் சுவாமி கோயிலின் சுற்றுப்புறம் மேடு பள்ளமாக இருந்த இடங்கள் சரி செய்யப்பட்டுச் சமன்படுத்தப் பட்டது. கோயிலுக்கு வரும் சாலை சீரமைக்கப்பட்டது. கோயிலின் வடபுறம் ஓடும் கரை எனப்படும் சிறு பள்ளத்தில் மழை காலத்தில் வெள்ளம் ஏற்பட்டுப் பாதையில் அரிப்பு ஏற்பட்டது. அவ்வாறான அரிப்பு ஏற்படாத வகையில் கரைக்குப் பக்கச் சுவர் கட்டிப் பாதுகாப்புச் செய்யப்பட்டது.

ஆலாம்பாடிக் கிராமம் ஒரு தாய்க் கிராமம். அது ஆலாம்பாடி, குப்பக்கவுண்டன் வலசு. வரதப்ப கவுண்டன் புதூர், நல்லிக் கவுண்டன் வலசு, சென்னிமலைக் கவுண்டன் வலசு, நெய்க்காரம்பாளையம் போன்ற சேய்க் கிராமங்களை உடையது. பட்டாலிக் கிரைய சாசனத்தில் குப்பக்கவுண்டர் என்பவரையும், கத்தாங்கண்ணிச் செப்பேட்டில் நல்லிக் கவுண்டர் என்பவரையும் சாட்சிக் கையொப்பமிட்ட பொருளந்தைகுலப் பெருமக்கள் பெயாகள் உள்ளன. அவர்கள்

பெயராலேயே குப்பக்கவுண்டன் வலசு, நல்லிக்கவுண்டன் வலசு என்ற ஊர்ப் பெயர்கள் இக்கிராமத்தில் ஏற்பட்டிருக்க லாம். இப்போது ஆலாம்பாடியில் வேலாங்காட்டுப் புதூர், மாந்தோப்புப் புதூர், திருமலைசாமி புதூர், கல்லேரி என்ற புதிய ஊர்ப் பகுதிகளும் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குப்பக்கவுண்டன் வலசு. வரதப்ப கவுண்டன் புதூர் ஆகிய இரு ஊர்ப் பொருளந்தை குலப் பெருமக்கள் இங்குள்ள பெரிய அண்ணன்மார் கோயிலையும், ஏனைய நான்கு ஊர்ப் பொருளந்தை குலப் பெருமக்களும் ஆலாம்பாடிக்காரர்களும் பரஞ்சேர்வழிக் கிராமத்தில் இதே ஆலாம்பாடிக் சுரைப் பள்ளத்தருகில் சண்முகம்பாளையம் அருகில் உள்ள சின்ன அண்ணன்மார் கோயிலையும் தம் குல தெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபட்டுவருகின்றனர்.

ஆலாம்பாடி பெரிய அண்ணன்மார் கோயிலில் அண்ணன் மாரில் மூத்தவரான பொன்னர் மட்டும் எழுந்தருள்விக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தார். சின்ன அண்ணன்மார் கொயில் அண்ணன்மாரில் தம்பியான சங்கர் மட்டுமே எழுந்தருள் விக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறார்.

பிரிந்தவர் கூடினர்

ஆலாம்பாடி பெரிய அண்ணன்மார் கோயிலில் பொன்னரை மட்டும் இதுவரை வணங்கிவந்த பொருளந்தை குலப் பெருமக்கள் தம் காணிக் குடிபாட்டுக் கோயிலில் சங்கரை எழுந்தருளச் செய்யப் பூவாக்குக் கேட்டனர், பொன்னர் நல்வாக்கு உத்தரவு கொடுத்ததால் இப்போது ஆலாம்பாடி பெரிய அண்ணன்மார் கோயிலில் தம்பியான சங்கரும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். பெரிய அண்ணன் மார் கோயில் என்று அழைக்கப்பட்ட இத்திருக்கோயில் இனி அண்ணன்மார் கோயில் என்றே அழைக்கப்படும் பெருமை யைப் பெறும்.

பன்னெடுங் காலத்திற்கு முன்னர் ஒரே கோயிலில் வீற்றிருந்து தம் அடியார்களான ஆலாம்பாடிப் பொருளந்தை குலப் பெருமக்களை வரந்தந்து வாழவைத்த பொன்னரும், சங்கரும் நமக்குத் தெரியாத ஏதோ ஒரு வேற்றுமை காரண மாகப் பிரிந்திருந்தனர். இப்போது அவர்கள் இருவரும் ஒன்றாக எழுந்தருளியிருப்பது அடியார்கள் செய்த பெரும் பாக்கியமாகும். இருவரும் ஒருங்கு இருப்பதைக் காணாத கண் என்ன கண்ணே! என்று பாடிப்பரவத் தோன்றுகிறது.

அண்ணன்மார் ஆலய எதிரில் கொங்கு நாட்டுக் கோயில் கட்டிடக் கலைக்கேயுரிய தனித்தன்மையுடன் 4 மீட்டர் உயரத்தில் தீபத்தூண் சிறு மண்டபத்துடன் விளங்குகிறது. அத் தீபத்தூணில் கிழக்குப் பக்கம் விநாயகரும், மேற்குப் பக்கம் தங்காத்தாளும் உள்ளனர். தெற்குப் பக்கம் கிரீடம் கத்தி கேடயத்துடன் பொன்னரும், வடக்குப் பக்கம் கத்தி கேடயத்துடன் சங்கரும் எழுந்தருளியுள்ளனர். இச்சிற்பச் சான்றே பொன்னர், சங்கர் இருவரும் ஒன்றாக ஒரு காலத்தில் எழுந்தருளியிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. மீண்டும் அப் பொற்காலம் பூத்திருப்பது காணியாளர்கள் செய்த தவப் பயனாகும்.

சில பணிகள்

காவல் தெய்வமான கருப்பண்ண சுவாமி எலந்தமரத்தின் அடியில் வீற்றிருந்தார். அவருக்கு முன்னர் வேல்கள் பல நடப்பட்டுள்ளன, நீண்ட வாள்களும், பட்டாக் கத்திகளும் உள்ளன. குடிமக்களால் பலி கொடுக்கும் காவல் தெய்வம் கருப்பண சுவாமி இப்போது புதிய பொலிவுடன் புதிய கோயில் அமைக்கப்பட்டு அண்ணன்மார் கோயிலின் கீழ்புறம் வெளியே எழுந்தருள்விக்கப்பட்டுள்ளார். மேற்குப் புறம் அருகே மற்றொரு கருப்பணசாமி உள்ளார். அவர் பொன்னர் சங்கர் வரலாற்றில் வரும் வாதுக்கருப்பணன் ஆகலாம்.

விநாயகர், பெரியக்காண்டி அம்மன், பொன்னர், சங்கர், தங்காத்தாள், கருப்பண சுவாமி, நாகர், மாயவர், முருகன். கன்னிமார் திருவுருவங்கள் சிற்ப சாஸ்திர முறைப்படி அமைய வேண்டிய இடங்களில் அமைப்புடனும் அழகுடனும் அமைக்கப்பட்டுள்ளன.

ஏகதள விமானம் என்னும் ஒரு நிலையுடன் முன்பு விமானம் அமைக்கப்பட்டிருந்தது. இப்போது மூன்று நிலை விமானமாகச் சிற்பச் சிறப்புடன் வண்ணக் கோலத்தில் எடுக்கப்பட்டுள்ளது சிறப்புக்குரியதாகும்.

வழிபாடு

மாசி சிவன் ராத்திரியும், கார்த்திகைத் தீபமும், சித்திரைக் கனியும், ஆடி 18 பண்டிகையும் இங்கு சிறப்பாகப் பெரு விழா வாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சிவராத்திரி நாட்களில் காணியாளர்கள் வீரப்பூர் செல்வர். காணியாளர்கள் வருடம் முழுவதும் தாம் விரும்பிய நாட்களில் கோயிலுக்கு வந்து வழி பட்டுச் செல்லுகின்றனர். முன்பு மாசி சிவராத்திரிப் பெரு விழாவில் அண்ணன்மார் சுவாமி வரலாறு இங்கு படிக்கப் பட்டது.

பொருளந்தை குலத்தார் ஆலாம்பாடியிலிருந்து கொங்கு நாட்டின் பல்வேறு பகுதிகட்குக் குடியேறியுள்ளனர். அவர்கள் எல்லாம் தம் காணியூரான ஆலாம்பாடி வந்து அண்ணன்மாரை வழிபட்டுச் செல்லுகின்றனர். அவர்கள் அனைவரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்கியுள்ளனர்.

காங்கேய நாட்டுக் காடையூர்ப் பகுதியில் குடியேறிய பொருளந்தை குலப் பெருமக்கள் காடையூர் சேட குலத்தார் வீட்டில் பெண் கொண்டு வெள்ளையம்மாளைக் குல முதல்வியாகக் கொண்டவர்கள் முழுக்காது சீர் செய்யும் பொருளந்தை குலத்தினர். காடையூர்க்குரிய முழுக்காது சீர்ப்

பொருளந்தை குலத்தைச் சேர்ந்த இல்லியம்புதூர், இல்லியம் பகுதியில் வாழ்பவர்களும் ஆலாம்பாடி அண்ணன்மார் கோயிலுக்கு வழிபட வருகின்றனர். சின்ன அண்ணன்மாரை வழிபடும் ஆலாம்பாடிக் கிராமப் பொருளந்தை குலப் பெரு மக்கள் சிலரும் இப்போது வழிபட வருவது சிறப்புக்குரியது.

வரந்தரும் அய்யன் வரதயன்

அண்ணன்மார் வணங்கி நின்று வேண்டி வழிபடும் அடியார்க்கு வேண்டிய வரங்களை ஈய வல்லவர். அதனால் அண்ணன்மாருக்கு வரதய்யன்' 'வரதப்பன்' என்ற பெயரும் இங்கு அமைவதாயிற்று. இச்சீரிய சிறந்த பெயரைக் காணி யாளர்களும் பலர் தம் பெயராக வைத்துக் கொண்டனர்.

இதனை ஆலாம்பாடி அண்ணன்மார் ஆலயத்தில்இன்றும் நல்ல நிலையில் உள்ள வெண்கலத் திடுமத்தில் உள்ள எழுத்துப் பொறிப்பு நமக்கு உணர்த்துகிறது. அத்திடுமத்தில் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

> 'றுத்றோத்காரி வருசம் மாசி மாதம் 1 தேதி குப்பக் கவுண்டன் வலசுலேயிறுக்கும் வரதப்ப கவுண்டன் மகன் பழனிக் கவுண்டன் மகன் முத்து வேலப்ப கவுண்டன் வறுதயன் சாமிக்கு அண்ணமார் சாமிக்கு கெஷத் திடுமம் உபயம் உ'

இத்திடுமம் இன்றும் ஆலாம்பரடி அண்ணன்மார் ஆலயத்தில் பாதுகாப்பாகப் பராமரிகப்பட்டு வருகிறது.

ஆலய அமைப்பு

மூலக் கருவறை வடக்குப் பார்த்து உள்ளது. அக்கரு வறையில் பொன்னர், சங்கர், தங்கை தங்கம் என்னும்

அருக்காணி ஆகியோர் உள்ளனர். இருபுறமும் துவார பாலகர்கள் உள்ளனர்.

அடுத்து கிழக்குப் பார்த்து வரிசையாக விநாயகர்,மாயவர், பெரியக்காண்டி அம்மன், முருகர் ஆகியோர் உள்ளனர். பெரியக்காண்டி அம்மனின் இருபுறமும் துவாரசக்திகள் உள்ளனர்.

கிழக்குப் பார்த்துக் கன்னிமார் உள்ளனர். மகாமண்டபம் தூண்கள் இன்றி விசாலமாக அமைந்துள்ளது. மாயவர், பெரியக்காண்டி, அம்மன் முருகன் சன்னிதிகள் ஏகதள விமானமாக அமைந்துள்ளது.

வடக்கு முகப்பிலும், கிழக்கிலும் முகப்பு மண்டபங்கள் உள்ளன. வடக்கு முன் மண்டபத்தில் பொன்னர், சங்கர், தங்கம், தோழி, சாம்புவன் ஆகியோர் உள்ளனர். கிழக்கு முன் மண்டபத்தில் பெரியக்காண்டி அம்மன் ஐந்து தலை நாகத்தின்கீழ் உள்ளார். பெரியக்காண்டி அம்மன் ஐந்து தலை நாகத்தின் குழந்தையாகப் பிறந்தவர் என்பது ஐதீகம்.

இரு குதிரைகள்மீது பொன்னர், சங்கர், எருத்தின்மீது முரசு அடித்துக்கொண்டு சாம்புவனும் அமர்ந்திருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. புதிய திருப்பணிகளான இவை மிகவும் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. மேற்குப் பிரகாரத்தில் பழைய குதிரை ஒன்றும் உள்ளது. விமானத்தின் கிழக்குப் பக்கம் பொன்னர் வீற்றிருக்கும் காட்சி உள்ளது. கிழக்குப் பக்கம் பொன்னர் சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளார், பொன்னர். சங்கருக்கு ஈஸ்வரன் காட்சி கொடுக்கின்றார். செக்கநத்தம் செம்பகுல ஆசாரி மரவள்ளத்துடன் காட்சி தருகிறார். பூசாரியும் காணப்படுகிறார். தெற்குப்பக்கம்; ராக்கியண்ண ரிடம் பொன்னர், சங்கர் வாள் பயிற்சிபெறும் காட்சியும், தம்முள் பயிற்சி பெறும் காட்சியும், தாமரைநாச்சியார் அன்னதானம் செய்யும் காட்சியும் உள்ளது. சங்கர் படுகள மும், குன்றுடையாக்கவுண்டர், தாமரைநாச்சியார் தேர்

இழுக்கும் காட்சியும் உள்ளது. மேற்குப் பக்கம் குன்றுடையாக் கவுண்டர் உள்ளார். சங்கரின் பன்றிவேட்டைக் காட்சி காணப்படுகிறது. வீரமலைச் சாம்புவன் பறையடிக்கும் காட்சியும் உள்ளது. அத்தைமக்கள் முத்தாயி, பவளாயி உள்ளனர். மகாமண்டபத்தின் நான்கு மூலைகளிலும் மேலே காளை வாகனங்களும் வெற்றிச்சங்கு ஊதும் பூதகணங்களும் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. கோயிலின் வடகிழக்கு மூலையில் நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

எல்லாச் சிற்பங்களும் சுதைவடிவாய் அழகுற அமைக்கப் பட்டுக் கண்கவர் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. எல்லாச் சிற்பங்களும் பொன்னர், சங்கர் வரலாற்றோடு மிகவும் பொருந்தியிருப்பது சிறப்புக்குரியதாகும்.

திருக்கோயில் வடிவமைப்பில் பங்கு கொண்டவர்கள்

திருவாளர்கள்

அழ. இராமச்சந்திரன், ஸ்தபதியார், கொடுமுடி
பழனிமலை, ஸ்தபதியார், பழனி
சி. தண்டபாணி, ஸ்தபதியார், பழனி
டி. பழனிச்சாமி, சி, தண்டபாணி ஸ்தபதியின் உதவியாளர்
கே. வேலுச்சாமி, எஸ். பொன்னுசாமி, மேஸ்திரிகள்
கே. பி. தனக்கோடி, வெள்ளகோயில், குதிரை, காளை வடிவமைத்தவர்
டி. முருகேசன், பழனி, வர்ண வேலை.

குடமுழுக்கு விழாக்குழு

ஆங்கீரச ஆண்டு ஆனித்திங்கள் 25ஆம் நாள் 9-7-92 வியாழக்கிழமை வளர்பிறை தசமி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய நன்னாளில் 9-30 மணி முதல் 10-30 மணிக்குள் சிம்ம லக்கினத்தில் குடமுழுக்கு விழா நடைபெறுகிறது.

குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெறக் கீழ்க்கண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் :

தலைவர் : சி. குப்புசாமிக் கவுண்டர், திருப்பூர்

உபதலைவர்கள் :

வி.ஏ. முத்துமாணிக்கக் கவுண்டர்,
வேட்டைக்காரன் புதூர்
வி.டி. லட்சுமிபதிக் கவுண்டர்,
வேட்டைக்காரன் புதூர்
எஸ். முருகசாமிக் கவுண்டர், நம்பியூர்

செயலாளர் : வி.டி. ஜெயசிம்மக் கவுண்டர்,
வேட்டைக்காரன் புதூர்

பொருளாளர் : வி.டி. சேதுபதிக் கவுண்டர்,
வேட்டைக்காரன் புதூர்

உறுப்பினர்கள் : ஏ. மணி, இராவணாபுரம்
வி.கே. பழனிசாமி, வேட்டைக்காரன் புதூர்
வி.ஜே. பிரசாத் ,,
வி.டி. உத்தரராஜ் ,,
வி.எஸ். அருண் ,,
வி.எஸ். உதயக்குமார் ,,
வி.எஸ். இராஜாராம் ,,
வி. எம். தியாகு ,,
வி.எஸ். இரமேஷ் ,,
கே. முத்துராஜ், வாவிப்பாளையம்
எஸ். முத்துசாமிக் கவுண்டர்,
குப்பக்கவுண்டன் வலசு

பி. சிவசாமிக் கவுண்டர்,
வரதப்ப கவுண்டன் வலசு
கே. சிவசாமிக் கவுண்டர்,
குப்பக்கவுண்டன் வலசு

இக்குழுவினர் திட்டமிட்டு அடியார்கள் வசதிக்கேற்ற எல்லாச் செயல்களையும் நன்கு செய்துள்ளனர்.

அண்ணன்மார் வரலாறு

சோழநாட்டுத் திருப்பாதூரிலிருந்து கொங்கு வாழவந்திச் சீமைக்குக் குடியேறி வாழ்ந்தவர் கொங்கு வேளாளரில் வரகுண்ணாப் பெருங்குடி குலத்தைச் சேர்ந்த ஆலத்தாக் கவுண்டர். ஆலத்தாக் கவுண்டரின் 12 ஆண் குழந்தைகளில் மூத்தவர் கோளத்தாக் கவுண்டர்.

கோளத்தாக் கவுண்டர் சகோதரர்கள் சதி, சூது காரண மாக குளித்தலைப் பக்கம் மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள திருக்காம்புலியூருக்குக் குடி யேறினார். மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அடிக்கடி கூடுவர். ஒரு முறை அவர்களுக்குள் ஏற்பட்ட வழக்கைக் கோளத்தாக் கவுண்டர் தீர்த்து வைத்தார். சோழன் கோளத்தாக் கவுண்டரைப் பாராட்டி 200 ஏக்கர் நிலம் கொடை அளித்து மணியம், கணக்குப் பணியும் அளித்தான்.

கோளத்தாக் கவுண்டர் வாங்கல்வரை தன் அதிகாரத்தைச் செலுத்தினார். வாங்கலான் என்ற பட்டப் பெயரைப் பெற்றார். சிற்றாலைப் பட்டணத்தில் நாட்டுக்காவல் அரசு புரிந்தார். அப்பகுதி நெல்லி வளநாடு எனப்பட்டது. நெல்லி யம்மன் ஆலயம் கட்டினார். நீர்ப்பாசனத்தின் பொருட்டு வெள்ளாங்குளம் ஏரியைக் கட்டி வெண்கலக் குமிழிகள் அமைத்தார்.

கோளத்தாக் கவுண்டர் மணியங்குறிச்சி மலைக் கொழுந்தாக் கவுண்டர் சகோதரி பவளாத்தாக்கவுண்டச்சியை

மணந்துகொண்டார், அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. நெல்லியங்கோடன் என்று பெயர் வைத்து வளர்த்தனர். பணிவும், சாதுத் தன்மையும் கொண்டு வளர்ந்த நெல்லியங்கோடன் 'மசச்சாமி' என்று பெயர் பெற்றான்,

தன் மகனின் சாதுத்தன்மையைக் கண்ட கோளத்தாக் கவுண்டர் மணியம், கணக்கு வேலை மசச்சாமிக்கு ஒத்து வராது என்று சோழனிடமே ஒப்படைத்து விட்டார். நெல்லியங்கோடனை வளர்க்கும் பொறுப்பைத் தன் தம்பி செல்லாத்தாக் கவுண்டரிடம் ஒப்படைத்தார்.

தன் பண்ணையாள் சோழத் தோட்டியிடம் தன் மகனைப் பாதுகாத்து மணியங்குறிச்சி மலைக் கொழுந்தாக் கவுண்டர்—பெருமாயி அம்மாள் மகளான தாமரை நாச்சியாரை மணம் செய்விக்க வேண்டும் என்று கோளத்தாக் கவுண்டர் வேண்டிக்கொண்டார்.

பெற்றோர் மறைவுக்குப்பின் சித்தப்பாவால் துன்புறுத்தப் பட்ட நெல்லியங்கோடன் மாமா வீடு சென்று அங்கும் அவமானப்படுத்தப்பட்டு ஊர் வந்து பங்காளிகளிடமும் வாழ இயலாமல் ஆதிசெட்டி பாளையம் செட்டியார் வீட்டில் தங்கினார்.

மாமன் மகள் தாமரை நாச்சியாரைத் திருமணம் செய்து கொண்ட நெல்லியங்கோடன் சீர் பெற்று வந்து சிற்றாலைப் பட்டணத்தில் வாழ்ந்தார். குன்று சூழ்ந்த பகுதிக்குத் தலைமை ஏற்றதால் நெல்லியங்கோடன் குன்றுடையான் என்று பெயர் பெற்றார்.

குன்றுடையான்—தாமரை நாச்சியார் தம்பதியினருக்கு பொன்னர், சங்கர் என்ற இரு ஆண் குழந்தைகளும். அருக்காணி என்ற பெண் குழந்தையும் பிறந்தனர். அவர்கள் சிறந்த சிவபக்திச் செல்வர்களாகத் திகழ்ந்தனர்,

பொன்னரும், சங்கரும் ஆதிசெட்டி பாளையம் செட்டியார் ஆதரவில் குடையூரில் தங்கி வாங்கல் அருகில் உள்ள மாரிக்கவுண்டம்பாளையம் ராக்கியண்ணன் என்ற பல்கலை வல்லாரிடம் பல்வகைக் கல்வி, போர்ப் பயிற்சி ஆகியவைகளைப் பெற்றனர். பொன்னர், சங்கர் இருவரும் தம்முள்ளும் போர்ப் பயிற்சி பெற்றனர். குதிரை ஏற்றத்தில் இருவரும் சிறந்து விளங்கினர்.

பொன்னரும் சங்கரும் தங்கை அருக்காணியால் 'அண்ணன்மார்' என்று அழைக்கப்பட்டனர். சகோதரர் களால் தங்கை அருக்காணி 'தங்கம்' 'தங்காத்தாள்' என்று அழைக்கப்பட்டார். கல்வி கற்றபின் அண்ணன்மார் இருவரும் சிற்றாலைப் பட்டணம் சென்றனர். அப்பகுதி வளநாடு என்று அழைக்கப்பட்டது.

மணியங்குறிச்சி சின்ன மலைக்கொழுந்தாக் கவுண்டர் (பொன்னர்—சங்கரின் தாய்மாமா) ஆண் மக்கள் அத்தா பெருமாள், அம்மான் பெருமாள், செய்ய பெருமாள் மூவரும் 'அத்தை மக்கள்' எனப்பட்டனர். அவர்கள் பொன்னர் சங்கருக்குத் துணையாக இருந்தனர். சோழத் தோட்டி மகன் வீரமலைச் சாம்புவன் மாட்டுப் பண்ணைத்தலைவன் ஆனான். பொன்னரும், சங்கரும் வளநாட்டில் கோட்டை கட்டி ஆண்டனர். பங்காளிகள் பறித்த சொத்துக்களை மீட்டனர். சோழனின் நன்மதிப்பைப் பெற்றனர்.

பெற்றோர் மறைவால் வருந்திய தங்கை அருக்காணி என்னும் தங்கத்திற்கு மயில், குயில், புறா, கிளிகள் ஆகிய வற்றை விளையாடத் தந்து மகிழ்வித்தனர்.

வேட்டுவர்களின் பன்றிகள் விவசாயத்தை அழித்தது. அதைப் பொன்னரும் சங்கரும் வேட்டையாடி அழித்தனர்.

இராக்கியண்ணரிடம் கல்வி கற்கும்போதே தோல்வியை மேற்கொண்ட வேட்டுவர் குலத் தலையூர்க் காளி தன் குல வேட்டுவர்கள் 18 நாட்டாருடன் தொடர்ந்து பொன்னர் சங்கருக்குத் தொல்லைகள் கொடுத்துவந்தான். விவசாயத்தை அழித்தான். பச்சனா முதலி மகள் குப்பாயியைச் சிறை பிடித்தான். பொன்னர் சங்கரால் மீட்கப்பட்டும் அப்பெண் மான உணர்ச்சியால் உயிர் விட்டுவிட்டாள்.

பொன்னரும், சங்கரும் சோழனிடம் நாட்டுக் காவல் உரிமை பெற்றுச் சிற்றரசர் ஆயினர். அத்தை மக்கள் அமைச்சர்கள் ஆயினர். வீரமலைச் சாம்புவனும் அமைச்சன் நிலையில் இருந்தான்.

போர் செய்து பொன்னர் சங்கரை அழிக்கமுடியாது என்று கண்ட தலையூர்க்காளி வஞ்சனையால் கொல்ல முடிவு செய்தான்.

செக்கநத்தம் செம்பகுல ஆசாரி அச் சதித் திட்டத்திற்கு உதவினான். மாவிலிங்க மரத்தில் வள்ளம் ஒன்று செய்து பொன் மூலாம் பூசி உறையூர்ச் சோழனுக்குக் கொண்டு செல்வதாகவும் இரவு அடைக்கலமாகப் பொன்னரிடம் பொன் வள்ளத்தை வைப்பதாகவும் கூறினான். விடிந்தவுடன் பொன் முலாம் போய் மர வள்ளமாகக் காட்சி அளித்தது.

அடைக்கலப் பொருளை அபகரித்ததாகக் கூறிய ஆசாரி உண்மையைக் கூறிய பொன்னரிடம் வெள்ளாங்குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்ய அழைத்துச் சென்றான்.

பொன்னரைப் பிரித்துச் சண்டைக்கு வந்த வேட்டுவர் களிடம் சண்டை செய்யச் சென்று அத்தை பிள்ளை மூவரும் வேட்டுவர் சதியால் நச்சு நீர் குடித்து உயிர் துறந்தனர். சாம்புவனால் கேள்விப்பட்ட சங்கர் போருக்குச் சென்று வயது முடிந்த காரணத்தால் வேட்டுவ வடிவில் வந்த மாயவர் அம்பால் புகழுடம்பு அடைகிறார்.

சாம்புவனால் சங்கு ஊதி முரசு கொட்டக் கேள்வியுற்ற பொன்னரும் வந்து தம்பியைக் காணுகிறார். முத்தாயி, பவளாயி இருவரும் தீப்பாய்ந்து உயிர் துறக்கின்றனர். அருக்காணி ஓடிவந்து சங்கரை எழுப்புகிறாள், இறந்தவர் மீண்டும் உயிர் பெற்றால் நாட்டில் இடம் இருக்காது என்று கருதி, மாயவனாரையும், பெரியக்காண்டி அம்மனையும் வணங்கி அனைவரும் ஓம குண்டம் வளர்த்துத் தீப்பாய்ந்து புகழுட்ம்பு அடைகின்றனர்.

தன் மந்திர வீரவாளால் சாம்புவன் மரணமடைந்தான். பொன்னர், சங்கர், தங்காத்தாள், அத்தை மக்கள், வீரமலைச் சாம்புவன் எல்லோருக்கும் அருள்பாலித்து வாழ்வில் உதவிய மாயவனார், பெரியக்காண்டி அம்மன், வாதுக் கருப்பணன், கன்னிமார், மகாமுனி ஆகியவர்கட்குக் கொங்கு நாட்டில் கோயில் கட்டி வழிபாடு செய்துவருகின்றனர். பொன்னர் சங்கர் கோயில்கள் கொங்கு நாட்டில் 114 இடங்களில் உள்ளன. வழிபடும் அடியார்கட்கு அண்ணன்மார் இருவரும் அருள்பாலித்து வருகின்றனர். வீரப்பூரில் சிவசோழனால் முதல் கோயில் கட்டப்பட்டது. பின் நாடெங்கும் அண்ணன் மார் வழிபாடு பெருகியது.

அண்ணன்மார் வழிபாடு

அண்ணன்மார் ஆலயங்கள் கொங்கு நாட்டில் பல்கிப் பரவியுள்ளன. கீழ்க்கண்ட இடங்களில் அண்ணன்மார் கோயில்கள் உள்ளன.

ஈரோடு வட்டம்

சித்தோடு, வெள்ளோடு, கண்ணுடையாம்பாளையம், நரிக்காட்டு வலசு, 88 வேலம்பாளையம், விளக்கேத்தி, செம்மடை, கந்தசாமி பாளையம், மொடக்குறிச்சி, கஸ்பா பேட்டை, குளூர், வேலாங்காட்டு வலசு, எழுமாத்தூர்.

கோபி வட்டம்

பொம்மன்பட்டி நாயக்கன் காடு (கோபி), நஞ்சைதொட்டி பாளையம், வெள்ளாள பாளையம், முத்துக்காளிமடை, சானார் பதி, பாரியூர், பொலவக்காளி பாளையம், கடுக்காம்பாளையம், பிச்சாண்டாம்பாளையம், அய்யம்பாளையம்.

தாராபுரம் வட்டம்

ரெட்டியார் பாளையம் (வள்ளி எறிச்சல்)

காங்கேயம் வட்டம்

பூளாம்பரப்பு, ஆலாம்பாடி, சண்முகம் பாளையம் (பரஞ்சேர் வழி), அப்பிய பாளையம்.

பல்லடம் வட்டம்

ராக்கியாம்பட்டி, பெருமாநல்லூர், தொரவநல்லூர், இராமநாடாம்பாளையம், ஈட்டிவீரம்பாளையம்.

அவிநாசி வட்டம்

காசி கவுண்டன் புதூர், காடம்பாடி. சின்னேரி பாளையம், பிச்சாண்டாம் பாளையம், தேவம் பாளையம், ஆயிகவுண்டம் பாளையம், அம்மா பாளையம், கோயில் பாளையம், தெக்கலூர், கணியம்பூண்டி. முத்து செட்டி பாளையம், சேயூர், முதலி பாளையம், வடுக பாளையம், பொத்தப் பாளையம், சூரியம்பாளையம், பெருநாத பாளையம், புதுப் பாளையம்.

கரூர் வட்டம்

கடம்பங்குறிச்சி, மாரி கவுண்டன் பாளையம், வாங்கல்.

முசிறி வட்டம்

கீழ்சீனிவாச நல்லூர், வேந்தம்பட்டி.

கள்ளக்குறிச்சி வட்டம்

வீரபயங்கரம்.

ஆத்தூர் வட்டம்

உளிபுரம், தம்மம்பட்டி.

சங்ககிரி வட்டம்

காணியாளப்பட்டி.

திருச்செங்கோடு வட்டம்

மணியனூர், மேழிப்பள்ளி, கூத்தம்பூண்டி, இருப்புலி, பருத்திப்பள்ளி, கருங்கல்பட்டி, சோபனம்பட்டி, முறங்கம், குப்பிச்சிபாளையம்.

சேலம் வட்டம்

மல்லூர், தாதம்பட்டி.

இராசிபுரம் வட்டம்

காக்காவேரி, கீரனூர், அலைவாய்ப்பட்டி, வெண்ணந்தூர், ராசிபுரம், புதுப்பட்டி, ஒடுவங்குறிச்சி, தொப்பம்பட்டி, குமாரா பாளையம், பிள்ளாநல்லூர், கட்டிப்பாளையம், வையப்ப மலை.

நாமக்கல் வட்டம்

மின்னாம்பள்ளி, நடந்தை, ஏழூர் (பொருளந்தை குலத்தார் கோயில்) பெரியபட்டி, தோகை நத்தம், நகப்பாளையம், நஞ்சை இடையார், கொண்டமநாயக்கன்பட்டி, துத்திக்குளம், திருமலைப்பட்டி, லக்காபுரம், பாய்ச்சல், கண்ணூர்ப்பட்டி, பெரியூர், ஆண்டாபுரம், ஆரூர், கோனங்கிப்பட்டி, காளி செட்டிப்பட்டிப் புதூர், புதுப்பாளையம்.

இவ்வாலயங்களில் சில மண்ணுடையார், வேட்டுவர், வண்ணார், அருந்ததியர், செட்டியார், ஐயர், வன்னியர், நாடார் ஆகியோர் வழிபடும் கோயிலாகும். கொங்கு 24 நாடுகளில் 12 நாட்டு மண்ணுடையார்கள் அண்ணன்மாரையும், 12 நாட்டு மண்ணுடையார்கள் இராசாக்களையும் குல தெய்வமாக வழிபடுகின்றனர். கொங்குச் சமுதாயம் அனைத்தும் ஏற்றுக் கொண்ட கண்கண்ட கடவுளராக அண்ணன்மார் உள்ளனர்,

ஆலாம்பாடி ஆலயங்கள்

விண் மறைக்கும் கோபுரங்கள், வினை மறைக்கும் ஆலயங்கள் தமிழகத்தில் ஊர்கள்தோறும் உண்டு. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி யாகும். அக்கோயில்களில் சித்திரத்தின் மிக உயர்ந்த சிற்ப நூலின் அற்புதங்களைக் காணலாம்.

பொருளந்தை குலத்தாரின் காணி ஊர்களில் ஒன்றாக விளங்கும் ஆலாம்பாடியில் அவர்களின் குலதெய்வக் குடி பாட்டுக் காணிக் கோயிலாக அண்ணன்மார் ஆலயம் விளங்கு கிறது. அதனைப்பற்றி முன் தலைப்பில் கண்டோம். இங்கு ஆலாம்பாடியில் உள்ள பிற ஆலயங்கள் பற்றிக் காணலாம்.

அக்னீசுவரன் கோயில்

சிவபெருமான் செம்மேனி எம்மான்; சிவபெருமானே தீப்பிழம்பாக இருப்பவன். அக்னியின் பெயராலேயே இங்கு சிவபெருமான் அக்னீசுவரன் என எழுந்தருளியிருப்பது சிறப்பு மிக்கதாகும். அம்மன் பெயர் அன்னபூரணி.

அதிட்டானம் வரை கருங்கல்லிலும், மேல் பகுதி செங் கல்லாலும் சுதையாலும் அமைந்த கோயில். அக்னீசுவரன் கோயிலில் பல தெய்வப் படிமங்கள் சிதைந்துள்ளன. சண்டி கேசுவரரின் கழுத்து உடைக்கப்பட்டுள்ளது. பைரவர் தலை இல்லை. அன்னபூரணியம்மன் சிலை உடைந்து கருவறை யிலும், மகா மண்டபத்திலும் பாதி பாதி உள்ளது. நந்தி, நாகர் மகா மண்டபத்தில் உள்ளன.

கோயில் தோட்டம் என்ற கோயிலுக்குரிய காட்டின் நடுவே கிழக்கு நோக்கி இக்கோயில் உள்ளது. எதிரே தீபத் தூண் உள்ளது. அதன் நான்கு புறங்களிலும் காமதேனு, ரிஷபம், சூலம், விநாயகர் பொறிக்கப்பட்டுள்ளது.

முன்பு பரஞ்சேர்வழி குருக்களய்யர் குடும்பத்தில் பூசை செய்து வந்தனர். இப்போது இக்கோயிலுக்குப் பூசை இல்லை. கோயிலுக்குச் செல்லச் சரியான வழி இல்லை.

மாரியம்மன் கோயில்

மழைத் தெய்வம் என்றும், கண்ணகி வழிபாட்டின் அம்சம் என்றும் அறிஞர்கள் கூறும் மாரியம்மன் கோயில் நத்தமேடு பகுதியில் உள்ளது. பண்டாரம் பூசை. ஆவணிக் கிருத்திகை, பங்குனி யுகாதி அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறு கின்றன.

மாரியம்மன் கோயில் அருகே தென்புறம் தெப்பக்குளம் இருந்து அழிந்து போயுள்ளது. இங்கு ஆண், பெண் முன்னோர் தெய்வங்கள் உள்ளன. தட்சிணாமூர்த்தி சிற்பம் ஒன்று இங்கு உள்ளது. தூண்கள் வேலைப்பாட்டுடன் உள்ளன.

கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முன் மண்டபம் ஆகியவை உள்ளன. கோயில் முன் வேல்கள் நடப் பட்டுள்ளன. குறிஞ்சி ஒன்று கோயில் எதிரே உள்ளது. குறிஞ்சித் தூண் ஒன்றில்தான் வெள்ளைவாவி பற்றிய கல்வெட்டு உள்ளது.

கரியகாளியம்மன் கோயில்

தமிழ்நாட்டில் தாய்த்தெய்வ வழிபாடே மிகவும் தொன்மை யானது. பேசும் மொழியை, வாழும் நாட்டை, தேடிய

செல்வத்தை, பெற்ற கல்வியை, போரில் காட்டும் வீரத்தை, பெறும் வெற்றியைத் தாயாகவே உருவகம் செய்வது நம் நாட்டு வழக்கம். சிந்துவெளி நாகரிகம் ஏறக்குறைய 5000 ஆண்டு கட்கு முற்பட்டது. அங்கும் தாய்த் தெய்வ வழிபாட்டின் சின்னங்கள் கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டுத் தொன்மையான இலக்கியங்கள் எனப்படும் சங்க இலக்கியங்கள் தாய்த்தெய்வ வழிபாடு பற்றிய பல்வேறு குறிப்புக்களைந் தருகின்றன. காடுகாள், காடு கிழாள், காடு கெழு செல்வி, காடமர் செல்வி, கொற்றவை போன்ற பல பெயர்கள் சங்க இலக்கியத்துள் காணக்கிடைக்கின்றன. முற்காலக் கல்வெட்டுக்களில் பிடாரி என்ற பெயரைக் காணுகிறோம்.

பிற்காலத்துக் காளி, துர்க்கை போன்ற பெயர்கள் வழங்கின. காளி கோயில் நிருவாகிகள் காளி கணத்தார் எனப்பட்டனர். காளி சக்கரம் என்பது ஒரு நாணயப் பெயராகும்.

கொங்கு நாட்டிலும் காளியம்மன், ஓங்காளியம்மன், கவைய காளியம்மன், செம்ப காளியம்மன், பத்திரகாளியம்மன். மதுர காளியம்மன், மன்னாத காளியம்மன், மாகாளியம்மன், கருங்காளியம்மன் போலக் கரியகாளியம்மன் என்றகோயில்கள் பல உள்ளன.

ஆலாம்பாடிக் கரிய காளியம்மன் கோயில் முன்பு நெடுஞ் சாலையின் கீழ்புறம் கோயில் காடு என்னும் பகுதியில் இருந்தது. சுமார் 40 ஆண்டுகட்கு முன்பு அக் கோயிலை மாரியம்மன் கோயில் உள்ள நத்தக்காட்டிலேயே எடுத்தனர். ஆனால், இங்கு எடுக்கப்பெற்ற கரிய காளியம்மனுக்குக் குடமுழுக்கு விழா நடத்தப் பெறவில்லை. குடமுழுக்கு விழா நடத்தப் பெறாமையால் இன்று அக்கோயிலில் வழிபாடு எதுவும் நடத்தப்படுவதில்லை. முன்பு பண்டாரம் இக்கோயில் பூசையை நடத்தினார்.

கருவறை அர்த்த மண்டபம், மகாமண்டபத்துடன் கூடிய கோயில். விநாயகர், நாகர், ராகு, கேது உருவங்களும், பொருளந்தை குல வள்ளல்களின் உருவச்சிலைகளும் குடும்பத்துடன் உள்ளன. நடுகல் ஒன்று தலைகீழாக வைக்கப் பட்டுள்ளது.

காட்டம்மை கோயில் (பாளையத்தம்மன்)

பண்டாரம் பூசை செய்யும் காட்டம்மை அல்லது பாளையத்தம்மன் கோயில் ஆலாம்பாடி கிராமம் முழுவதிலும் உள்ள பொருளந்தை குலத்தார்க்கு உரியது. ஊரின் தென்மேற்கே சிவன்மலை எல்லைக்கருகில் உள்ளது. காட்டுக்குள் இருக்கும் காரணத்தால் காட்டம்மை என்று பெயர் பெற்றது போலும். பாளையத்தம்மன் கோயில் என்றும் இக்கோயில் அழைக்கப்படுகிறது.

இங்கு கருபபண சுவாமி, கன்னிமார், விநாயகர், சூலதேவர் ஆகியோர் எழுந்தருள்விக்கப்பட்டுள்ளனர். கருப்பண சுவாமி சிற்பம் சுதை வடிவில் உள்ளது. ஊஞ்சல், யானை உருவம் ஆகியவையும் உள்ளன.

இக்கோயிலுக்குப் பிரபவ மாசி 23ஆம் நாள் (6-3-1988) ஞாயிறு அன்று காலை 5 மணிக்குமேல் 6-45 மணிக்குள் குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. அதனை நடத்திய வர்கள் பொருளந்தை குல கோத்திரத்துக் கவுண்டர்களும், சிவன்மலை ஆதி சைவ சமூகத்தாரும் ஆவர்.

இக்காட்டம்மை சிவன்மலைக் கோயில் குருக்களாக உள்ள ஆதி சைவப் பெருமக்கள் அனைவருக்கும் குல தெய்வமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. 7 கன்னிமார் உருவங்கள் உள்ள இடத்தில் 14 உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. 7 கன்னிமார் வேளாளர்கட்கும், 7 கன்னிமார் ஆதி சைவப்பெருமக்களுக்கும் உரியதாக இருக்கலாம்.

ஆதி சைவர்கள் சிவன்மலையைச் சுற்றியுள்ள 8 துர்க்கை களில் கிழக்கேயுள்ள மிக முக்கிய துர்க்கையாகக் காட்டம்மை யைக் கூறுகின்றனர். இக்கோயிலில் உலக்கை-உரல் ஒலி மேளதாள ஒலி கேட்கக்கூடாது என்பது ஐதீகம்.

ஆதி சைவர்கள் பெண் பிள்ளை பிறந்தால் காட்டம்மை பெயரைக் (வனசாட்சி) குழந்தைகட்கு வைப்பர். சிவன் மலையிலிருந்து காட்டம்மை கோயிலுக்கு வர நேர் சாலை வசதி உண்டு. சிவன்மலை ஆதி சைவர்கட்குச் சிவன்மலையி லேயே அப்பாயி அம்மன் என்ற கோயில் குல தெய்வமாக விளங்கினாலும் ஆலாம்பாடிக் காட்டம்மனையே பிரதான அம்மன் என்று கூறுகின்றனர். பிறப்பு, திருமணம் போன்ற எந்தக் குடும்ப நிகழ்ச்சியாக இருந்தாலும் சிவன்மலை ஆதி சைவர்கள் காட்டம்மன் ஆலயத்தில் வழிபட்டே அவைகளை நிகழ்த்துகின்றனர்.

126 குடும்பங்கள் இருந்த சிவன்மலையில் இன்று 22 ஆதி சைவக் குடும்பங்கள் உள்ளன. அக்குடும்பங்களில் சுமங்கலி களாக உள்ள குடும்பத்தைக் கணக்கிட்டுச் சுமார் 60 தம்பதியர் மாங்கல்யவரி என்னும் வரி வசூல் செய்து காட்டம்மை கோயில் வழிபாட்டைச் செய்கின்றனர்.

சென்னிமலைக் கவுண்டன் வலசு கருப்பட்டிக்காரர் சதாசிவக் கவுண்டரும், அகிலாண்டபுரம் சிவசுப்பிரமணியக் கவுண்டரும் காட்டம்மை கோயிலுக்குச் சில திருப்பணிகள் செய்துள்ளனர். இப்பணிகள் 1988-இல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவையொட்டிச் செய்யப்பெற்ற பணிகளாகும்.

பழனியாண்டவர் கோயில்

நத்தக்காட்டில் உள்ள சிறு கோயில். பண்டாரம் பூசை. கிருத்திகை, யுகாதி காலங்களில் சிறப்புப் பூசை நடைபெறும். பழனி, சென்னிமலை, சிவன்மலைமீது மிகுந்த பற்றுக்

கொண்டவர்கள் பொருளந்தை குலத்தினர். தம்குழந்தைகட்கு இம்மலையின் பெயரை வைத்து மகிழ்த்துள்ளனர்.

விநாயகர் கோயில்கள்

பல சைவக் கோயில்களில் விநாயகர் படிமங்கள் வைக்கப் பட்டுள்ளன. திட்டுப்பாறை சக்கரை விநாயகர் கோயில், நந்தவன விநாயகர் கோயில், ஆசாரிகள் குலத்தினர் வழிபாடு செய்யும் விநாயகர் கோயில்கள் தனி விநாயகர் கோயில்கள் ஆகும்.

பெருமாள் கோயில்

திட்டுப்பாறை அருகே கல்லேரியின் வடபுறம் பெருமாள் கோயில் இருந்தமைக்கான அடையாளம் காணப்படுகிறது. 'திருமலைசாமி' புதூர் என்ற பெயர் பெருமாள் கோயிலை நினைவுறுத்துகிறது.

இவ்வாறு சிறப்புமிக்க பல ஆலயங்கள் ஆலாம்பாடியில் உள்ளன.

பாப்பினிக் கல்வெட்டில் நூலாம்பாடி

பாப்பினி என்பது காங்கய நாட்டு ஊர்களில் ஒன்று. பாப்பினிக்குரிய சிவாலயம், பெருமாள் ஆலயம் முதலியவை மடவிளாகத்தில் உள்ளன. மடவிளாகம் சிவபெருமானுக்கு வடமொழியில் ஆர்த்திர கபாலீசுவரர்; தமிழில் பச்சோட்டு ஆவுடையார் என்பது பெயர். ஈரோடு கோட்டையில் உள்ள திருத்தொண்டீசுவரருக்கும் ஆர்த்திர கபாலீசுவரர் என்பதே பெயர். ஈரோட்டில் 'பச்சோடு' என்பதை ஈரஓடு; ஈரோடு எனத் தமிழ்ப்படுத்தியுள்ளனர்.

போசள மன்னர்கள் காலத்தில் காங்கேய நாட்டவர் அனைவரும் பாப்பினிக் கிராமத்தை டணாயக்கன் கோட்டையில் மூன்றாம் வீரவல்லாளனின் (1292-1340) அமைச்சன் மாதவத் தண்ட நாயக்கன் கட்டிய மாதவப் பெருமாள் கோயிலுக்குக் கொடையாக அளித்துப் பாப்பினிக்கும் 'கொங்கர்மாரி மாதவ நல்லூர்' என்றும் பெயரிட்டனர்.

பாப்பினியில் நாற்பாங்கு எல்லைக்குட்பட்ட எல்லா நிலமும் நீலகிரி சாதாரன் கோட்டை எனப்பட்ட டணாயக்கன் கோட்டைப் பெருமாள் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப் பட்டதால் பாப்பினிப் பச்சோட்டு ஆவுடையார்க்குப் பூசை முட்டுப்பட்டது போலும்.

போசளர் ஆட்சிக்குப் பின் கொங்கு நாடு விசயநகர ஆட்சிக்குட்பட்டது. விசயநகர மன்னன் விருப்பாட்சராயன் என்னும் அரியராய உடையார் (1465-1486) பாப்பினிக்

கோயிலுக்குக் கொடையாக ஆலாம்பாடியை அளித்தார். 8-1-1469 அன்று ஆலாம்பாடி (மடவிளாகம்) பாப்பினி பச்சோட்டு ஆவுடையார்க்குச் சர்வ மானியமாக அளிக்கப் பட்டது.

8-1-1469 அன்று அரியராயரே நேரில் இக்கொடையை அளித்துள்ளார்; ஆலாம்பாடியில் உள்ள நன்செய், புன்செய் நிலம் அனைத்தும் பச்சோட்டு ஆவுடையார்க்குக் கொடை யாக அளிக்கப்பட்டது. வணிகர்களும், எல்லாத் தொழி லாளிகளும் பச்சோட்டு ஆவுடையார்க்கே வரி செலுத்த வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஆலாம்பாடி யுடன் கத்தாங்கண்ணியில் ஆறு தடி நிலமும் பாப்பினிக் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்டது.

ஆலாம்பாடியில் குடியேறிய மக்கள் நிலத்தை உழுது மேல்வாரம் முழுவதையும் பச்சோட்டு ஆவுடையார்க்கு அளித் தனர். அதைப் பெற்றே பச்சோட்டு ஆவுடையார்க்குப் பூசை நடைபெற்றது.

இதை உறுதிப்படுத்தி அரியராயரால் மீண்டும் 30-1-1469இல் கல்வெட்டு ஒன்று வெட்டப்பட்டது. ஊர்க் கொரு பணமும் அமுது படிக்குப் பரம்பரையாகத் தம் பங்கை அளிக்க வேண்டும் என்று ஆலாம்பாடிக் கிராமத்தார்க்கு ஆணையிடப்பட்டது.

மார்க்கண்டேய கோத்திரத்துப் பச்சோட்டு ஆவுடையான் என்னும் அந்தணர் ஆலாம்பாடியில் மக்களைக் குடியேற்ற வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. பட்டாலியில் மேல் வாரம் கொடுப்பதைப் போலக் கொடுக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டது. ஆலாம்பாடியில் வாழும் ஒவவொரு குடியும் பச்சோட்டாவுடையார்க்கு உரிய பங்கை வரியாகச் செலுத்த வேண்டும், ஆலாம்பாடியார் கொடுத்த கொடை

யாலேயே அன்று (மடவிளாகம்) பாப்பினி பச்சோட்டு ஆவுடையார்க்கு அமுதுபடி படைக்கப்பட்டது. திருவிளக்கு எரிந்தது. அணிகலன்கள், பூமாலைகள் சாத்தப்பட்டன. திருக்கோயில் பணியாளர்கட்குப் படியும் வழங்கப்பட்டது.

இன்றும் ஆலாம்பாடிப் பெருமக்கள் தம் ஊரில் பல நூறு ஏக்கர் நிலங்கள் பாப்பினி பச்சோட்டு ஆவுடையார்க்கு மானியமாக இருந்ததை நினைவு கூர்கின்றனர். ஆலாம்பாடி எட்டுத் திக்கிலும் சூலக்கல் நடப்பட்டது. இன்று ஒரு கல் மட்டும் ஆலாம்பாடிக் கொடையை நினைவூட்டும் வண்ணம் நத்தமேட்டில் உள்ளது. எழுத்துக்கள் இன்றிச் சிறிய சூலக்கல் ஒன்றும் உள்ளது. மடவிளாகம் இலட்சுமண பாரதியும் தன் சிவன்மலைக் குறவஞ்சியில் ஆலாம்பாடிக் கொடை, சூலக்கல் இவைகளைக் குறிக்கின்றார்.

இந்தப் பண்டைய தொடர்பை நினைவுறுத்தும் வண்ணம் மடவிளாகம் சிவன் கோயில் தேர்த் திருவிழாவில் மேற்கு வீதிப் பங்கு இன்னும் ஆலாம்பாடிக் கிராமத்திற்கு உரிய தாகவே உள்ளது.

பழம் பெரும் சிறப்பு வாய்ந்த இத்தொடர்பை விளக்கும் வண்ணம் மடவிளாகம் பச்சோட்டு ஆவுடையார் கோயிலில் உள்ள இரு வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்வெட்டுக்களை இங்கே காணலாம். இக்கல்வெட்டுக்களை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் 1920 ஆம் ஆண்டு படி எடுத்துள்ளனர். இன்னும் மூலபாடம் வெளிவர வில்லை. பாப்பினி, மடவிளாகம் பகுதிகளில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைக் கோவை அலுவலர் இரா. ப. கருணானந்தம் அவர்கள் களஆய்வு செய்துள்ளார். அவர் அளித்த கல்வெட்டுப்படிகள் இங்கு வெளியிடப் படுகின்றன.

(மடவிளாகம்) பாப்பினி பச்சோட்டு ஆவுடையார் கோயில் கல்வெட்டுக்கள்

வடக்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலீஸ்வரன் ராயர் மகாராயர் தேவராய உடையார் குமாரர் அரியராய உடையார் சர்வதாரி வருஷத்துத் தை மாதம் 13 தேதி காங்கேய நாட்டு

2. பாற்பதியில் உடையார் பச்சோட்டாவுடையாற்கு மேற்படி நாட்டு ஆலாம்பாடியூர் நான்கெல்லைக் குட்பட்ட நஞ்சை புஞ்செய் தோட்டந் தொடிகை கராசு கை விநை

3. வாசல்மனை வாலவரி முதல் காணிக்கை வினீயோகம் தறியிறை பட்டடை சுங்கம் நல்லெருது நற்பசு வெட்டி வேகாரி காணம் நெய் எண்ணை யுட்பட சறுவாதா

4. யமும் வீரசோழ நாட்டு கற்றாயன் காணியான வீர சோழச் சதுர்வேதி மங்கலத்து வாய்க்கால்பற்றில் பெரிய பிராட்டி தடியிரண்டு, தென் வடக்குக் கட்டையடி மணவாழ

5, நோக்கி கிழக்கு மேற்கா நிலம் தடி நாலுமாவாகத் தடி யாறினால் நிலமளவின்படி யிரண்டு மாவும் ஏரிகீழ் நிம்மணீசுரமுடையார் சொக்கப் பெருமாளு நிலத்தருகே அப்பார் செய் தடி

6. மூன்றும் இதருகே கீழ்புறத்தில் காணியாக காணி முந்திரிகை தடி மூன்றுமாக தடியாறினால் நில அளவின்படிக்கு இந்த கற்றாயன்காணியில் நில மூன்று மாவும் சர்வ மாந்யமாக உதகபூர்வமாகச்

7. செய்து குடுத்தோமிந்த ஊராலம்பாடியும் குடி ஏற்றிக்கொண்டு நிலமும் பயிர் செய்வித்துக் கொண்டு இந்த கோயிலுடைய நம்பியார் தாநிகர் உடையவற்குப் பூசை புநற்காரம் நட

8. த்தக் கடவார்களாகவும். இந்தத் தன்மம் சந்திரா தித்தர்வரைக்கு நடத்தக் கடவதாகவுமிந்தத் தருமத்தையழித்து அதிதம் பண்ணினவந் கெங்கைக் கரையிலே பசுவையும் பாப்பாநை(யும்)

9. கொன்ற பாவத்திலேயனுபவிப்பான். இது பன்மா ஹேஸ்வரர் ரக்ஷை

தெற்குச் சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமன்டலீஸ்வரன் இராயர் மகா ராயர் தேவராய உடையார் குமாரர்

2. அரியராய உடையாற்குச் செல்லாநின்ற சர்வதாரி வருஷத்து தை மாதம் 25 தேதி காங்கேயந்

3. நாட்டு நாட்டவர் எங்கள் நாட்டிற் பாற்பதியூருடைய நாயனார் பச்சோட்டாவுடையார்க்கு

4. கல்வெட்டிக் குடுத்த பரிசாவது. எங்கள் நாட்டு ஆலாம்பாடியும் கற்றாயன்காணியிலே மூன்று

5. மா நிலமும் உடையவற்கு தேவதானமாக அரியராய உடையார் குடுத்தருளி எழுகரைநாடும்

6. பதினெண் விஷையமும் தேவராயமும் கட்டிக்குடுத்து உடையவர் மகாபூசை கொள்ளுகுற அளவுக்கு எங்

7. கள் நாட்டிலே பெரியவூரும் சிற்றூரும் நாட்டுக்கும் ஊற்கொரு பணமாகக் கலத்திலமுதுபடி

8. க்கு வம்ஷ பரம்பரையாகக் குடுத்து ஆலாம்பாடிக் குடியு உடையவற்குக் குடுத்தோ

9. மிந்தக் கோயில் காணியுடைய சிவப்பிராமணன் மார்க்கண்டேய கோத்திரத்து சூர்யதேவர் பச்சோட்டு

10. ஆவுடையானுள்ளிட்டாரிந்த வூராலாம்பாடியுங் குடி ஏற்றிக்கொண்டு கற்றாயன்காணியில் நிலமும் பயி

11. ர் செய்து கொண்டு பட்டாலி வட்டைக்குட்பட்ட தேவராயமும் ஊர்க்கொரு பணமும் மற்றும் புற முதலாக

12. வரு முதல்களும் பற்றிக்கொண்டு உடையவற்கு அமுதுபடி திருவிளக்கெண்ணை திருவா பரணந் திருப்பரிவட்டந் தி

13. ருமாலை திருமேல்பூச்சு நம்பியார் பரிசாரகம் திருவலகு திருநந்தாவனம் உவச்சனையுமிட்டுக் கொண்டு பூஜை

14. புநற்காரம் நடத்தக்கடவர்களாகவுமிந்த தன்ம நாடாகச் சந்திராதித்தவற் செலுத்திக் குடுக்கக் கடவோமாகவும்.

பொருள்தந்த குலம்

கொங்கு வேளாண் பெருமக்களில் பொருளன் என்னும் சிறப்பான குல முதல்வரின் கால்வழியாகத் தோன்றிய குலத்தினர் பொருளந்தை குலத்தினர் எனப்பட்டனர். இது பொருளன் × தந்தை = பொருளந்தை எனத் தமிழ் இலக்கண மரபுப்படி ஏற்பட்ட பெயராகும். சாத்தந்தை, கண்ணந்தை, கொற்றந்தை, பூச்சந்தை, ஆந்தை என்பன இவ்வாறு ஏற்பட்ட பிற பெயர்களாகும். அறிஞர் டி. எம். காளியப்பா அவர்களும் இவ்வாறே கருதுகிறார்கள்.

குழந்தை, மடந்தை என்பது போலத் தை விகுதி பெற்ற தனி ஒரு சொல்லாகவும் 'பொருளந்தை' என்ற பெயர் ஆக இருக்கலாம் என்று அறிஞர் புலவர் அ.மு. குழந்தை அவர்கள் கருதுகிறார்கள்.

'அந்தை' என்ற பெயர்களை 2000 ஆண்டுகட்கு முற்பட்ட தொல் எழுத்துப் பொறிப்புகளில் காணுகின்றோம். தந்தை எனப் பொருள் தரும் 'அந்தை' என்ற பெயரை ஈற்றில் கொண்டு முடியும் சொல்லாகவும், 'பொருளந்தை' என்ற பெயர் இருக்கலாம் பொருளப்பன், பொருளாத்தா என்ற பெயர்களை கொங்கு நாட்டுப் பெயர்களாகக் காணுகின்றோம் பொருளந்தை குலம், பொருளந்தை கூட்டம், பொருளந்தை கோத்திரம் ஆகிய மூன்று பெயர்களாவும் இக்குலம் அழைக்கப் பெறுகிறது. 'பொருளன்' என்ற பழங்காலப் பெயரை இலக்கியங்களில் காணுகின்றோம். குலம், கூட்டம் கோத்திரம் என்பன ஒரே பொருள்தரும் சொற்களாகும்.

சேரர் ஆட்சிப் பிரதிநிதியாக மையூரில் வாழ்ந்த 'பொருளன்' இக்குல முதல்வர் என்றும், மாந்தரஞ்சேரல் காலத்தில் கொங்குப் பகுதிக்குப் படைத்துணையாக அவர் வந்திருக்கலாம் என்றும் திருப்பூர் க. பழனிச்சாமிப் புலவர் அவர்கள் கருதுகிறார்கள்.

இப் பொருள்தந்த குலம் இலக்கியங்கள், தனிப்பாடல், செப்பேடு பட்டயங்களில் பலவாறு அழைக்கப்படுகிறது. கொங்கு மண்டல சதகம், வெள்ளையம்மன் காவியம் போன்ற நூல்கள் 'பொருள்தந்த குலம்' என்று குறிக்கின்றன. கொடைச் சிறப்பு மிகுதியால் இக்குலப் பெயர் தோன்றியிருக்கலாம் என்று குறித்தவர்கள் கருதியிருக்கலாம். பொருள் தந்த குலம்.

> பொருளந்தை குலம், புரளந்தை குலம், பிரளந்தை குலம், புரளந்த குலம், பெரளந்தை குலம், பெரளந்த குலம், 'பேரிழந்தான் குலம்'

என்றெல்லாம் மருவி அழைக்கப்படுவதன் காரணம், மக்கள் இக் குலப்பெயரை அதிகமாக உச்சரிப்பதனாலேயாகும். அதிகம் மக்களால் பயிலப் பெறும் சொற்களே இவ்வாறு திரிபடையும் என்பது மொழியியல் வல்லவர்கள் கருத்தாகும். அதனாலும் பொருள்தந்த குலம் சிறப்படைகிறது. இவைகளை ஒரே குலமாகவே எஸ்.ஏ.ஆர் சின்னசாமிக் கவுண்டர் அவர்கள் கொள்கிறார்கள். கு. சேதுராமன் அவர்களும் இதே கருத்தைக் கூறுகிறார்.

டி.எம். காளியப்பா அவர்கள் தம் கொங்கு வேளாளர் வரலாற்றில் பொருளந்தை, பிறழந்தை, பேரிழந்தான் என மூன்று தனித்தனிக் குலங்களாகக் கொள்வது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

பல்வேறு இலக்கியங்களில் மிகச்சிறப்பான அடைமொழிகளுடன் பொருளந்தை குலம் குறிக்கப்பெறுகின்றது. நல்ல தம்பிச் சர்க்கரை காதல் பிரபந்தம்,

மேவு பொருளந்தை குலம்'

என்றும், தனிப் பாடல்கள்,

'பெருமைபெறு பொருள்தந்த குலம்'
'நேர்மையது தவறாத பொருளந்தை'

என்றும், வேளாளர் 96 கீர்த்திப் பாடல்,

'கனத்த பொருளந்தை குலர்'
'பெருகு புரளந்தை'

என்றும், மரபாளர் உற்பத்திக் கும்மி,

'பெரிய பொருளந்தை'

என்றும், காங்கேய நாட்டுப் பாடல்கள்,

'அன்னதான பொருளந்தை'
'அதிக சௌக்கிய பொருளந்தை'
'முதலான பொருளந்தை'

என்றும் சிறப்பிப்பதைக் காணுகின்றோம். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தச் சிறப்பு அடைமொழிகள் யாப்பு அமைதிக்காக எழுதப்பெற்றதல்ல. சிறப்புக்கள் கருதியே எழுதப் பட்டுள்ளன.

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் இன்றைய திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள கருமாபுரத்தை முதற்காணியாகக் கொண்டு வாழ்ந்த பொருள் தந்த குலத்தினர் காங்கேய நாட்டு ஆலாம்பாடியிலும், காடையூரிலும், மேல்கரைப்

பூந்துறை நாட்டுப் பிடாரியூரிலும், மேலும் பல ஊர்களிலும் காணி பெற்றதைச் செப்பேடுகளும், இலக்கியங்களும் சிறப்பிக்கின்றன. 'ஆதிகருமாபுரம்', 'திருமரபு கருமாபுரம்' என இலக்கியம் கருமாபுரத்தைப் புகழும்.

காடையூரில் சேட குலத்தாருடனும், பிடாரியூரில் ஈஞ்ச குலத்தாருடனும் திருமண உறவு பெற்றுக் காணிகொண்ட பொருளந்தையர், விசயமங்கலப் பகுதியில் சாத்தந்தை குலத்தாருடன் திருமண உறவுகொண்டு அப் பகுதியில் குறுநில மன்னர்களாய் நீண்ட நாள் அரசு புரிந்தனர். வாரணவாசி, வடமலை, சீரங்கன் என்பன விசயமங்கலப் பொருள்தந்த குலத் தலைவர்கள் சிலர் பெயர். அவர்களில் வாரணவாசி, மன்றாடி பட்டம் பெற்றார் என்று கொங்கு மண்டல சதகம் கூறுகிறது. விசய மங்கலம் பொருளந்தை குலத்தாரை அங்குள்ள குலத்தாருக்கு முதல்வர் என்றும், பட்டக்காரர் என்றும் கல்வெட்டுக் குறிக்கிறது.

விசயமங்கலம் பொருள்தந்த குலத்தினர் பல யானைகளைப் படையில் பெற்றிருந்தனர். விசயமங்கலத்தில் தமிழ்ச் சங்கம் வைத்துப் புலவர்களை ஆதரித்தனர். அள்ளி அள்ளிக் கொடுத்துக் 'குமார வள்ளல்' என்று சிறப்புப் பெயர் பெற்றனர்.

காங்கேய நாட்டில் ஆறுதொழுவும், ஆலாம்பாடியும் பொருள்தந்த குலத்தார் ஏற்படுத்திய புது ஊர்கள் என்பதை ஏற்கனவே கண்டோம்.

பொருள்தந்த குலத்தினர் காடையூர்க் காணியைக் கொங்குச் சோழர் காலத்திலேயே பெற்றிருந்தனர் என்பதைக் காடையூர் காடையீசுவரர் கோயில் கல்வெட்டுக்கள் மூலம் அறிகின்றோம்.

பாண்டியர் ஆட்சிக் காலத்திலும் பொருள்தந்த குலத்தினர் சிறப்பும் தலைமையும் பெற்று விளங்கினர்.

மதுரைப் பாண்டியரின் கயல்கொடியையும், வேப்பமாலையையும் பெற்றனர் மதுரைப் பாண்டியர் தெருவினிலே கள்ளழகர் பொருளந்தை குலத்தாருக்கு முடிசூட்டியுள்ளனர். பாண்டியரின் பட்டங்களான தென்னவன், மீனவன் போன்ற பெயர்களைக் காடையூர்ப் பொருளந்தை குலத்தினர் பெற்றனர். பாண்டியர்களாலும் முடிசூட்டப் பெற்றனர்.

விசயநகர அரசு, மதுரை நாயக்க அரசு, மைசூர் திப்புசுல்தான், கிழக்கிந்தியக் கம்பெனி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தலைமையும், பெருமையும், புகழும் கொண்டு கொங்கு நாட்டில் செங்கோல் செலுத்தியவர்கள் பொருள்தந்த குலத்தினர்.

தமிழகத்தில் படையெடுத்துவந்த அந்நியர்களை வரவேற்றதாகவும், அடிமை ஆனதாகவும், தோல்வியைத் தழுவியதாகவுமே வரலாறு உள்ளது. ஆனால் எதிர்த்து வந்த ஒட்டியனைப் போரில் புறமுதுகுகாட்டி ஓடச்செய்து வென்று அவனை வெட்டிச் செயங்கொண்ட பெருமை பொருள் தந்த குலத்தாருக்கும், காடையூர் காங்கேய மன்றாடியாருக்கும் மட்டுமே உரியது, தமிழக வரலாற்றில் இது பொன் எழுத்துக்களால் பொறித்து வைக்கவேண்டிய வீரவெற்றிச் செயலாகும்.

கொங்கு நாட்டு வரலாறு கூறும் கொங்கு மண்டல சதகங்களில் பொருள்தந்த குலத்தின் சிறப்பை விளக்கும் பாடல்களே அதிகம் உள்ளன. எட்டுப் பாடல்கள் சதக நூல்களில் இடம் பெற்றுள்ளன. அவை ஆங்காங்கு இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவ்வளவு மிகுதியான பாடல்கள் வேறு எந்தக் குலத்திற்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காணி ஊர்கள்

கொங்கு வேளாளர் குலங்கள் குடியேறி வாழும் உரிமையுடைய தொன்மையான ஊர்களை அவர்தம் காணி ஊர்கள் என்று குறிக்கின்றோம். பல குலத்தார்களுக்குக் காணிப் பாடல்கள் கிடைத்துள்ளன. ஒருசில குலத்தார்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காணிப் பாடல்கள் கிடைத்துள்ளன காணி ஊர்கள் பெருகப் பெருகப் பாடல்களிலும் அவை குறிக்கப்பெறுகின்றன.

பொருளந்தை குலத்தாருக்கு இரண்டு காணிப் பாடல்கள் கிடைத்துள்ளன. முதல் பாடல் கருமாபுரம், காடையூர், ஆலாம்பாடி உட்பட 18 ஊர்களைக் குதிக்கிறது. இரண்டாவது பாடலில் முதல் பாடல் குறிப்பிடும் 6 ஊர்களை நீக்கி 12 புதிய ஊர்களைச் சேர்த்து 25 ஊர்களைக் காணி ஊர்களாகக் குறிக்கிறது. இரு பாடல்களிலும் ஆலாம்பாடி குறிக்கப்பெறுகிறது.

இப்பாடல்கள் மூலம் முதலில் காணிபெற்ற சில ஊர்கள் குறிக்கப்பெறாமல் பல புதிய ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளமையால் காணி ஊர்களின் தளர்ச்சி-வளர்ச்சி இவைகளை அறிகிறோம். முதல் பாடலில் பதின்மூன்றாம் ஊராகவும், இரண்டாம் பாடலில் பதினோராம் ஊராகவும் ஆலாம்பாடி குறிக்கப்பட்டுள்ளது.

கருமாபுரம், காடையூர், மதுரை, திங்களூர், ஆதியூர், குன்னத்தூர், முத்தூர், அமுக்கயம், விசயமங்கலம், புன்னம், பவித்திரம், தோழுர், ஆலாம்பாடி மாவுரட்டி, பெருமாநல்லூர், பழனி, பிடாரியூர், பரமத்தி ஆகிய 18 ஊர்களைக் காணி ஊர்களாகப் பின்வரும் பாடல் மூலமாக அறிகிறோம்,

திருமரபு கருமா புரம்காடை யூர்மதுரை
திங்களூர் ஆதியூரும்
திறமான குன்னத்தூர் முத்தூர் அமுக்கயம்
செயவிசைய மங்கைநகரம்
திருவுலவு புன்னம் பவுத்திரம் தோழூர்
தழைத்த ஆ லம்பாடியும்
தாதவிழ் மலர்ந்தபஞ் சூளைமா விரட்டியூர்
திருபெருமா நல்லூருடன்
கருதரிய பழனியும் பிடாரியூர் பரமுத்தி
காணியென வேபடைத்தாய்
கமலமலர் அருள்வதன சென்னியங் கிரிமுருகர்
கழலிணையை மறவாதவர்
பெருமைபெறு பொருள்தந்த குலதிலகன் எனவந்த
விபேகன் குழந்தைவேலன்
பெற்றகண் மணியான பழனிமலை நாயகன்
பிரபுடிக மகராசனே!

இரண்டாவது பாடலிலும் முதல் காணியாகக் கருமாபுரம் குறிக்கப்பெற்றுக் கீழ்வருமாறு ஏனைய ஊர்களும் குறிக்கப் பெறுகின்றன. கருமாபுரம், காடையூர், பெருமாநல்லூர், ஆகியூர், விசயமங்கலம், அமுக்கயம் பரமத்தி, புன்னம், தோடயம், ஆறுதொழு, ஆலாம்பாடி, ஏழூர் கொங்கணாபுரம், வஞ்சி, முத்தூர், மதுரை, உறையூர், நல்லூர், பிடாரியூர், மாம்பூண்டி, மாவுரட்டி, சேமூர், தலையூர், தூரம்பாடி, பிள்ளைக்கரை ஆகிய 24 ஊர்கள் கீழ்வரும் பாடலில் குறிக்கப்பெறுகின்றன.

ஆதிகரு மாபுரம் காடையூர் தென்பழனை
ஆதியூர் விசயமங்கை
அமுக்கயம் பறமுத்தி புன்னமது தோடயம்
ஆலாம்பாடி ஆறைஏழூர்
சோதிபெறி கொங்கணா புரம்வஞ்சி முத்தூரும்
சொக்கர்வாழ் மதுரை உறையூர்

சுயமான நல்லூர் பிடாரியூர் மாம்பூண்டி
சொற்பொருளின் மாவுரட்டி
தாதுலவு இஷ்டமா நேமிசே மூர்வளர்
தலையூர்நற் றூரம்பாடி
தமிழ்பெற்ற பிள்ளைக் கரைக்கதிப ராகவளர்
தார்பெற்ற கொங்குவேளிர்
நீதியுள மன்னவர்கள் சிற்றம் பலத்தாரை
நினைக்கின்ற கங்கைகுலமான்
நேர்மையது தவறாத பொருளந்தை கோத்திரன்
நிலமையுடன் வாழ்கநன்றே!

மேற்கண்ட பாடல் மூலமாகக் கொங்கின் பண்டைய பிரிவுகளான காங்கய நாடு, குறுப்புநாடு, பொன்கலூர்நாடு, வையாபுரிநாடு, தலையநாடு, தென்கரை நாடு, வெங்கலநாடு, மேல்கரைப் பூந்துறைநாடு, கீழ்கரைப் பூந்துறை நாடு, ஆறை நாடு, இடைப் பிச்சநாடு, வாழவந்திநாடு, கீழ்கரை அரையநாடு பூவானி நாடு ஆகிய பகுதிகளில் பல்கிப்பரவிக் காணி கொண் டிருந்தார்கள் என்பதை அறிகிறோம்.

இன்றைய நிருவாகப் பிரிவில் பெரியார் மாவட்டக் காங்கேயம் வட்டம், பெருந்துறை வட்டம், தாராபுரம் வட்டம், திண்டுக்கல் அண்ணா மாவட்டப் பழனி வட்டம், திருச்சி மாவட்டக் கரூர் வட்டம், சேலம் மாவட்டத் திருச்செங்கோடு. இராசிபுரம், நாமக்கல் வட்டம், கோவை மாவட்டப் பல்லடம், அவிநாசி வட்டம் ஆகிய பகுதிகளில், அதாவது கொங்கு நாட்டின் மைய, தெற்கு, கிழக்குப் பகுதிகளில் பொருளந்தை குலத்தினர் குடியேறி வாழ்ந்துள்ளனர் என்பதை மேற்கண்ட பாடல்கள் மூலம் அறிகின்றோம்.

இன்று இவ் எல்லைகளைக் கடந்து கொங்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்கிப் பரவி சீருடனும் சிறப்புடனும் செல்வம் செல்வாக்குடன் பொருளந்தை குலத்தார் வளமாக வாழ்ந்து வருகின்றனர்.

பிடாரியூர்ப் பொருளந்தை குலத்தினர் கோபி—கள்ளிப் பட்டிப் பகுதியில் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர், பிடாரியூர் திருப்பிராட்டியம்மன் ஆலயப் பணியில் பெரும்பங்கு வகித்து வருகின்றனர்.

பொருளந்தைகுலச் செப்பேட்டில் கருமாபுரம், ஏழூர். பருத்திப்பள்ளி, காடையூர், தோட்டக்குறிச்சி, நல்லூர், முத்தூர் ஆகிய ஊர்களில் வாழ்ந்த பொருளந்தை குலப் பெருமக்கள் கூடிப் புலவர் நியமனம் செய்ததாகக் கூறப் படுகிறது. இவற்றில் சில புதிய ஊர்களாகும்.

ஆன்றாபட்டி பொருளந்தை குலத்தினர் வீரமாத்தியையும், உன்னியூர்ப் பொருளந்தை குலத்தினர் காளியம்மனையும், சீராமடைப் பொருளந்தை குலத்தினர் வேலாத்தாள் சுவாமி யையும் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

ஓதாளர் குறவஞ்சி பொருளந்தை குலத்தார் தென்பள்ளி, மண்ணறை, அமுக்கயம் ஆகிய ஊர்களில் காணிகொண்டு சிறப்புடன் வாழ்ந்ததைக் கூறுகிறது.

கரூர் வட்டாரத்தில் வாழும் பொருளந்தை குலத்தார் தோட்டக்குறிச்சி மலையம்மனைக் குலதெய்வமாக வழிபடு கின்றனர். கரூர் அருகில் சுக்காலியூர்ப் பகுதியிலும் மலை யம்மனை வழிபடும் பொருளந்தை குலத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

மேல் ஓரத்தைப் பொருளந்தை குலத்தினர் ஆலாம்பாடி பொருளந்தை குலத்தார் போலவே அண்ணன்மார் சுவாமியை வணங்கிவருகின்றனர்.

சேலம் மாவட்ட ஏழூரில் பண்ணையம்மனை வழிபடும் பொருளந்தை குலத்தார் 'கட்டி' 'நல்லகட்டி' என்று பெயர் வைத்துக்கொள்கின்றனர். சங்க இலக்கியத்தில் கட்டி

மரபினர் குறிக்கப்படுகின்றனர். அவர்களோடு பொருளந்தையர் தொடர்புடையவரோ என்பது ஆய்வுக்குரியது. அவர்கள் திருச்செங்கோட்டில் பல திருப்பணிகளைச் செய்துள்ளதாகத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை கூறுகிறது.

காங்கேய நாட்டில் பிற்காலத்தில் சேர்க்கப்பெற்ற ஊராக இருப்பினும் ஆலாம்பாடி பொருளந்தை குலக் காணிப் பாடல் கள் இரண்டிலும் இடம் பெற்றிருப்பது சிறப்புக்குரியதாகும்.

முத்தூர்க் காணிப்பாடல்

காங்கேய நாட்டு முத்தூருக்கு ஏழு காணியாளர்கள். அவர்களில் ஐந்தாம் காணியாளர் பொருளந்தை குலத்தினர். அதனை முத்தூர்க் காணிப்பாடல் பின்வருமாறு கூறுகிறது.

'முத்தன் மணியன் முதற்சேரன் வெள்ளம்பர்
மெத்துபொரு ளந்தையுடன் மேலான—சித்திபெறும்
காவலியர் நன்முதலிக் காமருடன் ஏழ்முதன்மை
தாவுபுகழ் முத்தூர்த் தலம்'

என்பது அப்பாடலாகும்.

கருமாபுரம்

'ஆதி கருமாபுரம்'
'திருமரபு கருமாபுரம்'
'நிழலுற்ற கருமாபுரம்'

என்றெல்லாம் இலக்கியத்தில் புகழப்பட்ட பேரூர் கருமாபுரம் பொருளந்தை குலத்தாரின் முதல் காணியூர் ஆகும். கீழ்க் கரைப் பூந்துறை நாட்டின் புகழ்மிகு 32 ஊர்களில் பதினான் காம் ஊராகச் சிறப்புடன் திகழுவது. பொருள்தந்த குலத்தினர் யாவரும் தம் ஆதியூர் கருமாபுரமே என்று கூறுகின்றனர்.

மிகுந்த வளமான பகுதிகளை உடைய தொன்மையாள ஊர் கருமாபுரம். ஏரிகளையும், குளங்களையும், நீர்நிலை களையும் உடையது. மரங்களும், செடி கொடிகளும் அடர்ந்து வளர்ந்து பசுமையாக உள்ள ஊர். மக்கள் வாழ்க்கைக்கு ஏற்ற வளமான ஊர்.

கருமாபுரத்தின் ஒரு பகுதிக்கு மறவம்பாளையம் என்று பெயர் வழங்குகிறது. வீரத்தின் விளைநிலமாகவும் இவ்வூர் விளங்குகிறது.

இவ்வூரின் வற்றாத வளம் கருதியே காஞ்சிபுரத்திலிருந்து நாடார் குலப் பெருமக்களின் குருவாகிய ஆண்ட சிவசுப்பிரமணிய பண்டித குருசுவாமிகள் குடியேறியுள்ளார். கொங்கு நாட்டு நாடார் சமூகத்தாரின் திருமடம் கருமாபுரத்தில் உள்ளது. அந்த மடம்பற்றிய செப்பேடு நாடார் சமூகக் குருசுவாமிகளாக விளங்கும் அம்மடத்தின் தலைவரிடம் உள்ளது.

பாண்டீசுவரன் — சிவகாமியம்மன் கோயிலும், சென்ன கேசவப்பெருமாள் சீதேவி பூதேவி கோயிலும், செல்லியம்மன் கோயிலும், மாரியம்மன் கோயிலும், அத்தனூரம்மன் கோயிலும் படைத்தலைச்சியம்மன் கோயிலும், கருப்பணசாமி கோயிலும் இங்கு உள்ளன.

பொருளந்தை குலத்தாரின் கல்வெட்டுக்களும். குடும்பத் துடன் முன்னோர் சிற்பங்களும் உள்ள குலதெய்வக் கோயில் செல்லியம்மன் கோயில் பூசை செய்யும் பண்டாரங்களின் நிருவாகத்தில் உள்ளது.

'சின்னாக் கவுண்டன்'
'முத்தண கவுண்டன்'

என்ற பழைய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் முறையே மேற்கு, கிழக்குச் சுவர்களில் உள்ளன. அங்குள்ள வேல்களில்கூட 'இராமசாமிக் கவுண்டர்', 'பழனியப்ப கவுண்டர்' 'செல்லிய கவுண்டர்' என்ற பழமையான சில எழுத்துப் பொறிப்புக்களைக் காணலாம்.

கருமாபுரத்தில் அண்ணன்மார் கோயில் இல்லை. ஆனால் கருமாபுரம் பொருளந்தை குலத்தார் இரட்டியப்பட்டி இராமபுரம் பகுதியில் உள்ள அண்ணன்மாரை வணங்குகின்றனர்.

உள்ளேரி, பொய்யேரி என்ற பகுதியில் சூலத்துடன் பழைய கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. ஆனால் பெரும் பாலும் கல்வெட்டு அழிந்துவிட்டது.

எல்லாக் கோயிலுக்கும் மானிய பூமிகள் உள்ளன. அண்மைக் காலம் வரை கந்தசாமிக் கவுண்டர் என்பவர் நிர்வாக தர்மகர்த்தாவாக இருந்துள்ளார்.

மோர்பாளையம், கருப்ப கவுண்டம்பாளையம், வேப்பம் பட்டி, மன்னார்பாளையம், எளம்பள்ளி, இரட்டியப்பட்டி வெள்ளைக் கவுண்டம்பாளையம், மேகாடு, இராசிபுரம் பகுதி

களிலிருந்து சுமார் 1700 பொருளந்தை குலக் குடும்பங்கள் கருமாபுரம் செல்லியம்மனைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள் உள்ளனர். ஆயினும் கோயில் நிர்வாகம் அவர்களிடம் இல்லை.

பண்டாரம் குடும்பத்தினர் பலர் பல்வேறு தொழில்களைச் செய்வதால் செல்லிபம்மன் கோயில் சரியாகத் திறந்து வைக்கப்படுவதில்லை. நெடுந்தொலைவிலிருந்து தம் உற்றார் உறவினருடன் வரும் மக்கள் தம் குல தெய்வத்தை வணங்க முடியாமல் தவிக்கின்றனர்.

தம் பரம்பரைக் காணியாட்சிக் கோயிலை மீட்டுப் பொருள் தந்த குலத்தார் பொறுப்பில் கொண்டுவர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

கொங்கு நாட்டுப் பொருளந்தை குலப் பெருமக்கள் தம் ஆதிக் காணியூரான கருமாபுரம் சென்று வழிபட வேண்டும். தம் முன்னோர்வாழ்ந்த ஊரைப் பார்ப்பது எவ்வளவு பெருமை. கருமாபுரத்தில் தொடர்புகொள்ளும் முகவரி :

செ. இராசமாணிக்கம்
(செங்கோட கவுண்டர் மகன்)
ஏரித்தோட்டம்,
மறவம்பாளையம்,
கருமாபுரம் - 637 302.

குல குருக்கள்

கொங்கு நாட்டில் சைவம் சிறப்புற்று விளங்கியது. கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் ஏழு. அவை கரூர், வெஞ்சமாங் கூடல் அவிநாசி, பவானி கொடுமுடி, திருச்செங்கோடு, திருமுருகன் பூண்டி என்பன. அவ்வேழு தலங்களையும் ஒன்றாகச் சேர்த்து வணங்கும் வழக்கம் கொங்கு நாட்டில் இருந்தது. அதனை,

ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறசை
நீதி அவிநாசி நீள்நணா—மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை

என்ற வெண்பா சிறப்புடன் விளக்குகிறது. காங்கேய நாட்டுப் பட்டக்காரர்கள் ஒரே நாளில் இவ்வேழு தலங்களையும் வணங்கும் வழக்கம் கொண்டிருந்தனர் என்பதைத் தனிப் பாடல்கள் விளக்குகின்றன.

இவ்வாறு சைவம் சிறந்த கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வேளாண்குலப் பெருமக்கள் பலரும் தங்களுக்கென்று தனித்தனியாகக் குலகுருக்களை நியமித்துக்கொண்டு பலர் தீட்சை பெற்றுச் சைவசமயச் சிறப்புடன் நலமாக எல்லாப் பேறும் பெற்று வாழ்ந்தனர். குலகுருக்கள் சைவம் பேணி, ஆலயங்களைக் காத்து, அடியார்க்கு ஆசி வழங்கிச் சிறப்புடன் திகழ்ந்தனர்.

கொங்கு நாட்டில் முதலில் குடியேறிய கொங்கு வேளாண் பெருமக்கள் 'தங்கள் குலகுருவுடன் வந்தனர்' என்பதைப் பல

செப்பேடுகள் கூறுகின்றன. 24 நாடுகள் பிரித்ததும் நாட்டுக்கு ஒரு குலகுருவாக 24 பேரை நியமித்தனர் என்று ஒரு பட்டயம் கூறுகிறது.

சோழர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தும்போது சோழநாட்டிலிருந்து சிறந்துள்ள ஆதி சைவர்களைக் கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்ததாகக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

குலசே கரன்குலோத் துங்கசீர்ச் சோழர்கள்
கொங்கினிடை
தலபூசை நன்குறத் தன்நாட்டு ளாரில் சமர்த்தர்கண்டு
நிலையான காணியும் மேன்மையும் ஈய நிதானமுறு
வலவாதி சைவர்கள் வாழ்வதன் றோகொங்கு
மண்டலமே

என்ற சதகப்பாடல் மூலம் அதனை அறியலாம். ஒரு சில செப்பேடுகள் சோழநாட்டுத் திருக்கடையூரிலிருந்து அவர்கள் வந்ததாகக் கூறுகின்றன. சில குருக்கள் காஞ்சிபுரம் தம் பூர்வீகக் காணியூர் என்று கூறுகின்றனர்.

திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையும் இதனை ஒரு பாடல் மூலம் விளக்குகிறது.

காரணிக மானவள வன்கலி யுகாதியில்
கட்செவி மலைப்பரமனைக்
கந்தனை வணங்கிமக பூசையுண் டாக்கினன்
கைலாச நாதசிவனைத்
தாரணி புகழ்ந்திடத் தாபித்த னன்பெரிய
தண்கூப மதுகண்டனன்
சைவமறை போய்பூச னைக்கினிய ராகவே
தனதுமண் டலமேவியே

சீரணிசீ காழியா லம்பாயர் காசிபர்
திறத்தோடர்ச் சனைசெய்யவே
திதமுற அமைத்தனன் மநுநீதி முறைகண்ட
செம்பியன் பெற்ற பெருமை

என்ற பாடல் மூலம் அதனை அறியலாம்.

கொங்கு வேளாளர்கட்குக் குலகுருக்கள் இருந்தனர் என்பதைப் பல செப்பேடு பட்டயங்கள் உறுதிப்படுத்து கின்றன.

'கந்தாபுரிப் பட்டணம் அதிலுள்ள பதினெண்குடிகள் இந்தத் திருமுருகன் பூண்டி ஆதீனத்துக்கு உடையவ ராகிய காசிப கோத்திரத்துக் குருக்களானபடியினாலே தன்னுடைய சிஷியனாகிய வீரவிக்கிரம சோழியாண்டாக் கவுண்டர்'

என்பது ஒரு எடுத்துக்காட்டாகும்.

கொங்கு வேளாளர்கள் தங்கள் குலகுருக்களை எவ்வாறு மதித்தனர் என்பதைத் கொங்கு நாட்டுச் செப்பேடு ஒன்று பின்வருமாறு விளக்குகிறது.

'நாங்கள் யெந்த நாட்டிலே யெந்த ஊரிலேயிருந்தாலும் எங்கள் கோத்திரத்தார் தலைக்கட்டு ஒன்றுக்கு நாகரம் பணம் அஞ்சு வருஷம் பிரதி குடுத்துச் சஞ்சாரம் வந்தபோது சஞ்சாரக் காணிக்கையும் அப்பணைப் படிக்கி உபதேசம் பாத பூசை முதலானதும் பண்ணிக்கொண்டு எங்கள் வமுசத்தார் புத்திரபவுத்திர பாரம்பரியமாயி பாதபூசை பண்ணிக்கொண்டு சன்னிதானத்துலே தீட்சை மகாமந்திர உபதேசம் பண்ணிக் கொண்டு சுவாமியார் தெண்டினை கண்டினை ஆணை ஆக்கினை அபராதத்துக்குட்பட்டு நடந்து கொள்ளுவோ மாகவும்.

எங்கள் கோத்திரத்தார் எந்த நாட்டிலே எந்த ஊரிலே காணி வாங்கி அதிகாரம் பண்ணினாலும் சுவாமியார் பாதத்துக்குப் பணிந்து நடந்து கொள்ளுவோமாகவும். இப்படி நடந்துவரும் காலத்தில் இதுக்கு விகாதம் சொல்லாமல் பரிபாலனமாயி எங்கள் வமுசத்தார் பயபக்தியாய் நடந்து வந்தவன் சுகமாயி தனசம்பத்தும் தானிய சம்பத்தும் அஷ்டைஸ்வரியமும் ஆயுளாரோக்கியமும் தேவப்பிரசாதமும் குருப்பிரசாதமும் மேன்மேலும் உண்டாகி கல்லும் காவேரிப் புல்லும் பூமியும் சந்திராதித்தாள் உள்ளவரைக்கும் சுகமாயிருப்பார்கள்'

உடல்பொருள் ஆவி மூன்றையும் குலகுருவுக்கே தத்தம் செய்து பட்டயம் எழுதித் தந்துள்ளனர். வாரிசு இல்லாத சொத்து குலகுருவுக்கே என்றும் சிலர் கூறினர். 'குருவே சிவம்' என்று திருமூலர் முதலிய சான்றோர்கள் கூறிய சிறந்த வழியில் கொங்கு வேளாண் பெருமக்கள் நடந்துள்ளனர்.

குருக்கள்புரம், குருக்கள்பாளையம், தம்பிரான் வலசு போன்ற ஊர்கள் குருக்களுக்குத் தனி ஊர்ப் பகுதிகளைக் கொடையாக விட்டு அவர்களுக்கென்றே தனி ஊர்கள் ஏற்பட்டதைக் குறிக்கும். பொருளந்தை குலத்தார் காடையூரில் 'குருக்களய்யன் பாளையம்' என்ற ஊரும், குலகுருக்கள் மடமும் ஏற்படுத்தியுள்ளனர். அங்கு குருக்கள் சீரும் சிறப்புடனும் இன்றும் வாழ்ந்து அடியார்களுக்கு அருளியும் ஆலயத் திருப்பணியில் பங்கு கொண்டும் சிறந்துவருகிறார்கள்.

வேறு கொங்கு நாட்டின் எந்தப் பகுதிக்கும் இல்லாத சிறப்பு காங்கேய நாட்டுக்கு உண்டு. இங்குதான் காங்கேய நாட்டுப் பதினான்கு ஊர்களுக்கும் பனிரண்டு குருபீடங்கள் உள்ளன.

1. காங்கேயம் — சிவத்திரு உத்தமபண்டித குருசுவாமிகள்

2. வள்ளியறச்சல் — சிவத்திரு பெரியசாமிபண்டித குருசுவாமிகள்

3. காடையூர்
4. ஆறு தொழு } — சிவத்திரு மீனாட்சி சைவ புரந்தரபண்டித குருசுவாமிகள்

5 பட்டாலி — சிவத்திரு கனககிரிபண்டித குருசுவாமிகள்

6. கீரனூர் — சிவத்திரு கொடுமுடிப் பண்டித குருசுவாமிகள்

7. பார்ப்பதி — சிவத்திரு ஒருநான்கு வேதாந்தபண்டித குருசுவாமிகள்

8. பரஞ்சேர்வழி — சிவத்திரு பாலசக்தி சைவ சிகாமணி பண்டித குருசுவாமிகள்

9. காரையூர் — சிவத்திரு சிவஞானபண்டித குருசுவாமிகள்

10. மருதுறை — சிவத்திரு ஆலாலசுந்தர பண்டித குருசுவாமிகள்

11. முத்தூர் — சிவத்திரு குலசேகரபண்டித குருசுவாமிகள்

12. கண்ணபுரம் — சிவத்திரு கனகசபாபதி பண்டித குருசுவாமிகள்

13. வெள்ளகோயில்
14. ஆலாம்பாடி } — சிவத்திரு சந்திரசேகர பண்டித குருசுவாமிகள்

ஆலாம்பாடி பொருளந்தை குலத்தாருக்கு அமராவதி ஆற்றங்கரையில் தொன்மையான ஊராக விளங்கும் மயில் ரங்கத்திலிருந்து அருளாட்சி நடத்திய குருக்கள் குலகுருவாக இருந்தனர். அவர்களே ஆலாம்பாடிக் கோயிலில் அர்ச்சகமும் செய்துவந்தனர்.

இடையில் குருக்கள் தொடர்பு விடுபட்டுப் போய்விட்டது அதனால் ஆலாம்பாடி அண்ணன்மார் கோயிலுக்குக் கவுண் டர்களே பூசை நடத்திவந்தனர். குப்பக்கவுண்டன் வலசு பூசாரிக் கவுண்டர் குடும்பத்தினர் கோயில் பூசையைக் கவனித்துவந்தனர்.

மயில்ரங்கம் குருக்கள் குடும்பத்தினர் தம் தாய்வழிக் குருக்கள் வாழும் பரஞ்சேர்வழிக் கிராமத்திற்கு வருகை புரிந்து தங்கினர். மயில்ரங்கம் மடத்தைச் சேர்ந்த காஷ்யப கோத்திர ஆதிசைவக் குருக்கள் பரஞ்சேர்வழியில் வாழ்பவர்கள். ஆலாம்பாடிப் பொருளந்தை குலக் குருக்களாக இருப்பவர்கள் சிவத்திரு மயில்ரங்கம் மடாதிபதி சந்திரசேகர பண்டித குரு சுவாமிகள் ஆவார். இவர்கள் மயில்ரங்கம் செல்லையா குருக்கள் என வழங்கும் பஞ்ச சுப்ரமணியக் குருக்களின் மூத்த மகன் ஆவார்.

அவர்கள் ஆலாம்பாடிப் பொருளந்தை குலத்தினருக்கும் பரஞ்சேர்வழி ஆவ குலம், ஆட குலம், விளிய குலத்தின ருக்கும், வெள்ளகோயில் மாடகுலம், வண்ணக்கன் குலம், ஆந்தைகுலம், ஒதாள குலத்தினருக்கும் குலகுருவாக இருந்து வருகின்றனர்.

இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை குருக்கள் தம் அடியார்கள்—பக்தர்கள் இருக்கும் இடங்களுக்குச் சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் பெட்டிகளுடன், பூசைக்கு வேண்டிய பொருட்கள் ஆட்களுடன் பல வண்டிகளில் சஞ்சாரமாக யாத்திரை செல்வர். ஆங்காங்கு அடியார்கள் உள்ள ஊர்களில் தங்கித் தகவல் அனுப்பினால் குருக்கள் தங்கியுள்ள இடத் துக்கே அடியார்கள் வந்து வழிபட்டுப் பிரசாதம் பெற்றுப் பாத காணிக்கையும், சஞ்சாரக் காணிக்கையும் செலுத்துவர். இக்காலத்தில் இவ்வழக்கம் படிப்படியாகக் குறைந்து நின்று விட்டது.

பரஞ்சேர்வழி சிவத்திரு. சந்திரசேகர பண்டித குரு சுவாமிகள் வீட்டில் இந்த நூற்றாண்டின் தொடக்கம்வரை

எழுதப்பட்ட பல ஓலைச்சுவடிகள் உள்ளன. அந்த ஓலைச் சுவடிகளில் அடியார்கள் வாழும் ஊர், அவ்வூர் உள்ள இடம், அடியார்கள் குலம், அவர்கள் எங்கிருந்து குடிவந்தனர். அவர்கள் பெயர். உறவுமுறை, எண்ணிக்கை ஆகிய விபரங்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

அவைகளை முழுமையாகப் படி எடுத்து ஆய்வு செய்தால் கொங்குநாட்டு வேளாண்குல வரலாறு மிகவும் தெளிவடையும். பிற குருக்கள்மார் வீட்டு ஓலைச்சுவடிகளைவிட மிகவும் விளக்கமாக இருப்பதைக் காண முடிந்தது. கீழ்க்கண்ட விபரங்கள் சில ஏடுகளிலிருந்து அளிக்கப்படுகின்றன.

அ) 'சுக்ல ஆடி 19

வேட்டக்காரம்புதூரிலிருக்கும்* ஆலாம்பாடி வரதயண சுவாமிக்குச் சேர்ந்த புரளந்தை கோத்திரம் திருமூர்த்தி கவுண்டர் மகன் மலையாக் கவுண்டர்[1]. சின்ன வீடு கருப்பக் கவுண்டர் மகன் பழனிசாமிக் கவுண்டர்[2]. ஷியார் தம்பி நள்ளியப்ப கவுண்டர்[3]. தம்பி அமராவதிக் கவுண்டர்[4]. சுப்பய கவுண்டர்

---

* வேட்டைக்காரன் புதூர் பொருளந்தை குலத்தினர் ஆலாம்பாடி—குப்பக் கவுண்டன் வலசிலிருந்து சில தலைமுறைக்கு முன்பு குடிபெயர்ந்து சென்றவர்கள். இரண்டு குழந்தைகளுடன் குப்பக்கவுண்டன் வலசு சின்னக்க ஆத்தாள் என்பவர் வேட்டைக்காரன் புதூரில் குடியேறினார். குல முதல்வி சின்னக்க ஆத்தாள் திருக்கோயில் வேட்டைக்காரன் புதூரில் உள்ளது. அதற்குக் கொடையளித்து நாட்பூசை செய்து வருகின்றார்.

வேட்டைக்காரன் புதூருக்கு வருமுன் மதுரைப் பாளையப் பட்டைச் சேர்ந்த ஜலலிப்பட்டி வெங்கிடபதி நாயக்கர், அவர் மகன் பெரிய செல்லமுத்து நாயக்கர், எறம நாயக்கர் ஆகியோரிடம் படைத்தலைமை பூண்டு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக இருந்துள்ளனர். பாலக்காட்டுச் சண்டையில் 1000 பேருடன் சென்று போரிட்டனர். ஆயுத பலத்தால் கம்பெனியார் வெற்றி பெற்றனர். பலரைக்

மகன் அமணாண்டிக் கவுண்டர்[5]. குருசாமிக் கவுண்டர் மகன் திருமூர்த்திக் கவுண்டர்[6].

ஆ) 'திருப்பூருக்கும் கிழக்கு அரமனை புதூரிலேயிருக்கும் கருப்ப கவுண்டர் 1. காவிலிபாளையத்திலிருந்து வந்தவர்'

இ) 'சேவூருக்கு வடக்கே புதூர் குட்டிக் கவுண்டர் வரதய கவுண்டர் நல்லகட்டிக் கவுண்டர்'

ஈ. 'ராக்கியாபாளையத்திற்கு மேற்கு சமய செட்டி பாளையம் புதூரிலேயிருக்கும் பிரளந்தைகுலம் காளியப்பகவுண்டன் காவிலிபாளையத்தில் குடி வந்தது'

உ. ஆட்டையாம்பாளையத்திற்கு மேற்கு கணபதி பாளையம் பிரளந்தை குலம்'

ஊ. 'இதுக்கு வடக்கு காவிலிபாளையத்திலிருக்கும் பிரளந்தை குலம் கருப்ப கவுண்டர் 1. தம்பி சின்னிய கவுண்டர் 2. தம்பி குமரசாமிக் கவுண்டர் 3. கருப்ப கவுண்டர் 4. தம்பி சென்னி மலைக் கவுண்டர் 5. தம்பி காளியப்ப கவுண்டர் 6.

கொன்றனர். எஞ்சியவர்களை மலையிலிருந்து உருட்டினர். ஜல்லிப்பட்டி நாயக்கரை மாரியம்மன் கோயில்முன் தூக்கி விட்டனர். அதனால் அவ்வூர் அழிந்தது. மஞ்சநாயக்கனூர் என்ற ஊர் புதியதாக ஏற்பட்டது அங்குள்ள மும்மூர்த்தி கோயிலில் எறம நாயக்கன் தம்பதியினர் சிற்பம் உள்ளது.

தமிழக மேலவைத் துணைத்தலைவராகவும், கோவை மாவட்டக் கழகத் தலைவராகவும் விளங்கியவர் வேட்டைக்காரன் புதூர் வி. கே. பழனிசாமிக் கவுண்டர். பல பொதுப்பணிகளில் ஈடுபட்ட அவர் பரம்பி குளம் ஆளியாறு திட்டம் வர முக்கிய காரணமாக விளங்கினார்.

இன்னும் ஏடுகளில்,

வேட்டுவபாளையம், கணக்கம்பாளையம், பெருமா பாளையம், புத்தூர், கிடாத்துறை, பல்லவராயம்பாளையம், அவனாசிக்கு வடக்கு குறும்பபாளையம், கண்ணாண்டாங் குளம், மோதிலிபாளையம், திம்மநாயக்கன்பாளையம், செட்டிபாளையத்திற்குத் தெற்கு நல்லகட்டியாபாளையம், பரமசிவம்பாளையம், அவனாசிபாளையம், கோயமுத்தூருக்கு மேற்கே பள்ளபாளையம், புதூா. இராமநாதபுரம், மோகனூர், செக்கறபாளையம், பச்சாக்கவுண்டம்பாளையம், நடுவச்சேரி, ராயகவுண்டன் புதூர். வடுகபாளையம், செட்டிபாளையம், அய்யம்பாளையம், ஊஞ்சம்பாளையம், வாவிப்பாளையம், தீத்திபாளையம். செல்லப்பநாயக்கன்பாளையம், ஆட்டையாம் பட்டி, சுல்தான்பேட்டை, தண்டுக்காரம்பாளையம் போன்ற பற்பல ஊர்களில் உள்ள ஆலாம்பாடிக் காணியாளர்கள் ஆகிய பொருளந்தை குலத்தார் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன.

மேற்கண்ட ஊர்களில் வாழும் காணியாளர்கள் பலர் ஆலாம்பாடியுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

புகழ்பாடும் செப்பேடுகள்

கொங்குவரலாற்று ஆவணங்களில் பொருளந்தைகுலமும், அக்குலப் பெருமக்களும், காடையூர் காங்கேய மன்றாடியார் களும் குறிக்கப்பெற்றமையைப் பின்னர் பார்க்கலாம். இவை தவிரச் சில செப்பேடுகள் தனியாகப் பொருள்தந்தகுலச் செய்தி களையே மிகவும் சிறப்பித்துப் பேசுகின்றன. அவைகளை இத்தலைப்பில் காணலாம்.

1 பொருளந்தை கோத்திரச் செப்பேடு

மதுரை நாயக்க மன்னன் முத்துவீர சொக்கலிங்க நாயக்கரவர்கள் ஆட்சிபுரியும்போது பொருளந்தை குலப் பெருமக்கள் பலர் ஒன்றுகூடித் தங்களுக்கென்று ஒரு புலவரை நியமித்துக் கொண்டதை இச்செப்பேடு கூறுகிறது.

தீத்தாப்பெருமகன் பொன்னாலிப் புலவனுக்குப் பொரு ளந்தை குலமெச்சன் என்று பெயர் கொடுத்து 200 குழி நன் செய்யும், 15 பொன் கொல்லையும் மானியம் கொடுத்துச் செப்பேடும் எழுதித் தந்தனர்.

இவையன்றி பெருங்குடிக்கு ஒரு மிடாக்கம்பும், சிறுகுடிக்கு ஏழு வள்ளக்கம்பும், கலியாணத்துக்கு ஒரு பணமும், செய்க்கு இரு அரியும், காட்டுக்கு எழு கட்டுக் கருதும், அரி சுதந்திரமும் அழிவு நாழியும் அளிப்பதாகவும் எழுதித் தந்தனர்.

சந்திரசூரியர் உள்ளவரை இவை நடக்கவேண்டும் என்றும், இவைகளைக் காப்போர்க்குப் புண்ணியமும் அழிப். போர்க்குப் பாவமும் வரும் என்றும் எழுதப்பட்டுள்ளது.

கம்பும் கலியாணப் பணமும் கொடுக்காதவர்கள் வீட்டில் ஜப்தி செய்துகொள்ளலாம் என்றும் (மண்கலம் கவிழ்த்து வெண்கலமெடுத்து) ஒப்புக்கொண்டனர்.

இவ்வாறு ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்தவர்கள் பெயர்களும் கீழ்வருமாறு வெட்டப்பட்டுள்ளன.

கொங்கு வெள்ளாள காங்கய மன்னாடியார், பாண்டியன் கையில் விருதுகொண்ட லோக காங்கேயன், கீழ்க்கரைப் பூந்துறைநாட்டிலிருக்கும் முதலிக் கவுண்டரவர்கள் தம்பி வேலகவுண்டர், பெரியாக்கவுண்டர், பச்சையாக்கவுண்டர், மலையாக்கவுண்டர், காங்கயக் கவுண்டர்,

ஏழூரு நாட்டிலிருக்கும் அப்பயாக்கவுண்டர், நல்லகட்டிக் கவுண்டர், நல்லிக்கவுண்டர், சின்னயகவுண்டர், அருள்வேல கவுண்டர், கருப்பகவுண்டர், கட்டிக்கவுண்டர், சுப்ரமணிய கவுண்டர்,

பருத்திப்பள்ளிநாடு குடியிருக்கும் குப்பகவுண்டர், மோகை நல்லாக்கவுண்டர், நாகப்பகவுண்டர், நல்லய கவுண்டர்.

காடையூரிலிருக்கும் காங்கயகவுண்டர், மன்னாடிக் கவுண்டர், ஆண்டமன்னாடியார், முத்துக்கவுண்டர், அத்தப்ப கவுண்டர்,

தோட்டக் குறிச்சியிலிருக்கும் மலைய கவுண்டர், சின்ன மலையகவுண்டர், குப்பச்சிக்கவுண்டர்,

நல்லூரிலிருக்கும் அவனாசிக் கவுண்டர், காசிலிங்க கவுண்டர், முத்துக்கவுண்டர், சென்னிமலைகவுண்டர், பிடாரிக்கவுண்டர், நாகப்பகவுண்டர்.

முத்தூரிலேயிருக்கும் சின்னப்பகவுண்டர், குமாரசாமி கவுண்டர், குப்பச்சிக்கவுண்டர், சின்னயகவுண்டர், ரங்கய கவுண்டர்.

கருமாபுரம் அறுபது காங்கேயர், நல்லாக்கவுண்டர் குமாரர் முதலிக்கவுண்டர் ஆகியோர் பெயர்கள் செப்பேட்டில் காணப்படுகின்றன.

இச்செப்பேடு 53 வரிகளையுடையது, 1936இல் இராசிபுரம் துணைத்தாசில்தார் அவர்கள் மூலமாகப் பெற்று மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

2. காடையூர்ச் செப்பேடு

மதுரையில் திருமலை நாயக்கர் ஆட்சி புரியும்போது அவர்கள் சார்பில் திருப்பூர், ஊத்தலூர்க் கோட்டைகளை கோப்பண கவுண்டர் என்ற வேட்டுவகுலத் தலைவர் பாளையப்பட்டாக நிருவாகம் செய்துவந்தார்.

கோப்பண கவுண்டர் மதுரை அரண்மனைக்குச் செலுத்த வேண்டிய வரிகளைக் கொடுக்கவில்லை. மதுரைக்கு உட்பட்ட காடையூர்ப் பொருளந்தை குலப் பெத்தாங் காங்கேய மன்றாடியார் கோப்பண கவுண்டரை 12 கடகம் யானைப் படை கொண்டு வென்று திருப்பூர், ஊத்தலூர் ஆகியவைகளை மானியமாகப் பெற்றார். தண்டிகையும் உம்பளிக்கையும் பெற்றார்.

பின் கொங்கு வேளாள கவுண்டர்கள் பொருளந்தை குலத்தார் மூலம் தங்களுக்கென்று இருப்புலிக் குமரன் என்ற வேளாள நாவிதனை விலைக்கு வாங்கி ஊத்தலூரில் வீடு கட்டிக் கொடுத்து வைத்துக்கொண்டனர்.

மீண்டும் கோப்பண கவுண்டர் திருப்பூர்க் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். அவரை விரட்டும் போர் முயற்சியில் இருப்புலிக் குமரன் வெற்றி பெற்றும் வஞ்சனையால் கொல்லப்பட்டான்.

இருப்புலிக் குமரன் மனைவி 15 நாள் இளங் குழந்தையை வீசி எறிந்து சாக முற்பட்டவளை உயிர்வாழச் செய்து கறவைப் பசுவும், மாதம் ஒரு சலவைத் தவசமும் கொடுத்துக் காப்பாற்றிப் படிக்க வைத்துக் குலத்தொழிலும் கற்பித்து இருப்புலிக்குமரன் மகன் காங்கனுக்குத் திருப்பூரில் ஒரு மிடா விரைப்பாடு நிலமும் கொடையாக அளித்துக் கல்வெட்டும் வெட்டித் தந்தனர்.

பொருளந்தை குலத்தார் முன்பாகச் செப்பேடும் வெட்டித் தந்தனர்.

காடையூர், திருப்பூர், ஊத்தலூர், அமுக்கயம், பெரிய பாளையம், கத்தாங்கண்ணி, கொடுமணல் ஆகிய ஏழு கிராமத் தினர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

3. பிடாரியூர்ச் செப்பேடுகள்

மேல்கரைப் பூந்துறை நாட்டின் 32 ஊர்களில் ஐந்தாவது ஊர் பிடாரியூர். அவ்வூரில் கிடைத்த இரண்டு செப்பேடு களில் அப்பகுதிப் பொருளந்தை குலத்தினர் வரலாறு விளக்கம் பெறுகிறது.

மூன்று செய்திகள் அவ்விரு செப்பேடுகள்மூலம் தெரிய வருகிறது.

1. பிடாரியூர் கொங்கு வேளாளரில் ஈஞ்சங்கூட்டம், குடுமி வேட்டுவன், சிவபிராமணன், கொங்கச் செட்டி ஆகியோ ருக்குக் காணியூராக இருந்தது.

ஈஞ்சங்கூட்டம் ரகுநாத சிங்கிக் கவுண்டன் மகன் கூத்தக் கவுண்டன் மகள் வெள்ளைப் பழனியம்மாளைக் கருமாபுரம் பொருள்தந்த கூட்டம் பள்ளிக்கூடத்தான் குழந்தை வேலப்ப கவுண்டருக்குக் கொடுத்துப் பிடாரியூரில் தன் பங்கையும் கொடுத்தார்.

2. பின்பு சில ஆண்டுகள் கழித்து ஈங்கூர் பொருள்தந்த கூட்டம் செங்கோட கவுண்டர் மகள் வெள்ளை வேலம்மாளை, வள்ளியறச்சல் ஆந்தை கூட்டம் சென்னிமலைக் கவுண்டர் மகன் வேலப்ப கவுண்டருக்குத் திருமணம் செய்வித்தனர். ஆந்தை குலத்தாருக்குப் பிடாரியூரில் கால்காணி கொடுக்கப் பட்டது.

3. பிடாரியூர் பொருள்தந்த கூட்டம் சூரியாலிச்சாக் கவுண்டர் மகள் வெள்ளை வள்ளியம்மாளை தலையநல்லூர் (சிவகிரி) கூறைகூட்டம் சென்னிமலைக் கவுண்டர் மகன் பொங்காளியப்ப கவுண்டர் திருமணம் செய்துகொண்டு பிடாரியூரில் காணி பெற்றார்.

கருமாபுரம் பொருளந்தை குலத்தார் ஆலாம்பாடி, ஆறு தொழு, காடையூர்க் காணி பெற்றது போலவே பிடாரியூரிலும் காணிபெற்ற வரலாறு சிறப்புக்குரியது.

புலவர்கள் பொன்னுரைகள்

கொங்கு நாட்டிலே புலவர்கட்கு மிகுந்த மரியாதையும் மதிப்பும் இருந்தது. முன்பு இவ்வரலாற்றில் கூறப்பெற்ற பல்வேறு கொங்கு மண்டல சதகப் பாடல்கள் மூலம் அவை நன்கு விளங்கும். கொங்கு வேளாளர் வாழ்க்கையோடு புலவர்கள் வாழ்க்கை இறண்டறக் கலந்து பின்னிப் பிணைந் திருந்தது.

கொங்கு நாட்டில் வாழ்ந்த புலவர்கள் கொங்கு வேளாண் பெருமக்களிடம்தான் வலது கையை நீட்டிப் பரிசில் பெறு வார்கள். பிறர் மன்னவரானாலும் இடது கையைத்தான் நீட்டுவராம். பெரும்பாலும் கொங்கு நாட்டுக் காணிப் புலவர்கள் செங்குந்தர், சேரர், திருமுடியர், சோழியர் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தனர்.

திருமணச் சடங்கில் புலவர்கள் கலந்துகொண்டனர் என்பதை,

'பட்டன் புலவன் பண்பாடி தக்கையன்
திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன் னேவர'

என்ற மங்கல வாழ்த்துப் பகுதிகள் விளக்கமாகக் கூறுகின்றன. திருமண வீடுகளில் இடுப்புக்கும், தோளுக்கும், தலைக்கும் ஆக மூன்று ஆடை புலவருக்கு அளிப்பர். திருமணத்தின் இறுதியில் புலவர் பால் பழம் சாப்பிடும் சடங்கு முன்பு நிகழ்ந்தது. விருந்துண்ட புலவர் வெண்கல வட்டிலில் பால் ஊற்றிப் பழத்துடன் சாப்பிடுவார். அது திருமண வீட்டின் ஒரு சடங்காகவே நடைபெறும். அவ்வாறு புலவர்கள் உண்ணும்

தட்டு மணவீட்டுத் தலைவர்கள் தாம் உண்ணும் தட்டு என்று ஒரு பாடல் கூறுகிறது.

'தங்களுட கீர்த்தியைக் கொண்டாட அஞ்சுபடி
தன்புலமை யாகவைத்து
தானுண் கலத்தில் பழம் சர்க்கரையுடன்
தகுந்தேன் மிகுந்துதவியே
சந்ததம் புகழ்கங்கை வங்கிசம் விளங்கவே'

என்ற பகுதி மேற்கண்ட சடங்குகளைக் கூறும் பகுதியாகும்.

புலவர்கள் பால் பழம் சாப்பிடும் சடங்கு இல்லாமல் கொங்கு வேளாளர் திருமணங்கள் முன்பு முற்றுப் பெறாது.

பல்வேறு பட்டயங்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் புலவர்களை நியமனம் செய்த செய்திகளைக் கூறுகின்றன. அதில் காங்கேய நாடு முன்னிற்கிறது. கீரனூர் முதலிய தனிப்பட்ட ஊர்கள்கூடப் புலவர்களை நியமனம் செய்துகொண்ட நிகழ்ச்சிகளைச் செப்பேடும், பட்டயங்களும் புகழுகின்றன. கொங்கு 24 நாட்டுக்கும் புலவர்கள் நியமனம் பெற்றதைக் ''கொங்குப் புலவர் பட்டயம்'' கூறுகிறது. புலவர்கள் பால் சாப்பிடும் உரிமையைக் கூறி அவர்கள் உரிமை கொள்ளும் எல்லைகளைக் கூறுகிறது குறுப்பு நாட்டுப் பட்டயம்.

பேரரசர்களும், வள்ளல்களும் எவ்வளவுதான் கொட்டிக் கொடுத்தாலும், யானையும் அணி தேர்ப்புரவியும் வாரி வழங்கினாலும், நவநிதிக் குவியல் நவமணிகளுடன் அள்ளித் தந்தாலும் கொங்கு வேளாளர்கள் கொங்கு முறத்தால் கொடுக்கும் கம்புக்கு ஈடாகாது என்று பாடுகிறார் ஒரு புலவர்.

பல ஊர்கள் ''புலவன் பாளையம்'' என்று வழங்கப் பெறுவது சமுதாயத்தில் புலவர்கள் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டும். புலவர்கள் திருமண வீடுகளில் வந்து வாசல் வளத்தைப் பாடுவர். திருமண வீட்டில் குலங்களை வாழ்த்திப் பாடுவர். மங்கல வாழ்த்துக்குப்பின் கம்பர் வாழி 16.

ஏரெழுபது, திருக்கை வழக்கம் ஆகியவைகளைப் பாடியதாகப் பல சான்றுகள் உள்ளன.

புலவர் பொருளந்தை குல மெச்சன்

நாடுகள் சிலவற்றிற்குச் சேர்ந்தும், நாடுகளுக்குத் தனி யாகவும், ஊர்களுக்கும் புலவர்களை நியமனம் செய்து கொண்டதையும், அவர்கட்குக் கொடைகள் பல வழங்கப் பெற்றதையும் வரலாற்றில் அறிகின்றோம். ஆனால் பல ஊர்களைக் காணியாகப் பெற்றுப் பரவி வாழும் ஒரு குலத்தார் தங்களுக்கென்று தனியாகப் புலவர்களை நியமனம் செய்து கொள்ளும் வழக்கம் வேறு எந்தக் குலத்திற்கும் இல்லை. அச்சிறப்புப் பொருளந்தை குலத்தாருக்கு மட்டுமே உரியதாக உள்ளது.

கருமாபுரத்தில், காடையூர், ஏழூர், தோட்டக்குறிச்சி நல்லூர், முத்தூர், பருத்திப்பள்ளி ஆகிய ஊர்ப் பொருளந்தை குலப் பெருமக்கள் ஒன்றுகூடி லோக காங்கேயன் அவர்கள் தலைமையில் தீத்தாப் பெருமகன் பொன்னாலிப் புலவனுக்குப் 'பொருளந்தை குல மெச்சன்' என்று பெயரிட்டுக் குலப்புலவன் ஆக்கியதையும். அவருக்குப் பல சிறப்புக்கள் அளித்ததையும் கருமாபுரம் பொருளந்தை கோத்திரச் செப்பேடு விரிவாக விளக்குகிறது.

கொங்குப் புலவர் பட்டயம் காங்கேய நாட்டுக்குச் செங்குந்த கோத்திரம் போக்கங்கூட்டம் நஞ்சராயப் புலவரை நாட்டுப் புலவராக நியமித்ததைக் கூறுகிறது. ஆலாம்பாடிக்கும் அவர்கள் உரியவர்களாக விளங்கினர்.

வாரணவாசி தமிழ்ச் சங்கம்

குறுப்புநாட்டு விசையமங்கை நகரம் எனப்படும் விசய மங்கலம் பொருளந்தை குலத்துக் காணி ஊர்களில் ஒன்று. அங்கு பொருளந்தை குலச் செம்மலாகிய வாரணவாசி விசய

நகர மன்னன் அச்சுதராயர் படைத்தலைவராக விளங்கினார். இம்முடி வாரணவாசி என்று சிறப்புப் பெயர் பெற்றார். அவ்வாரணவாசிக்கும் காங்கேய நாட்டுக்கும் தொடர்பிருந்த தால் அவரும் காங்கேயன் என்ற பட்டப் பெயர் கொண்டார். வாரணவாசி மன்றாடி என்றும் அவருக்குப் பெயர் உண்டு.

அவர் காலத்தில் விசயமங்கலத்தில் தமிழ்ச் சங்கத்தை அவர் ஆதரித்தார். சங்கப் புலவர்கட்கு விருந்தளித்தார் என்று வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

'பூரண மான சந்திரோ தயமும் பொருள்தந்தகோன்
நாரணன் கமல வல்லி குறுப்புநன் னாட்டவர்கள்
ஆரணன் தாதி கனதன கும்ப மளித்துச் சங்கம்
வாரண வாசிநன் மன்றாடி வாழ்கொங்கு மண்டலமே !

'சங்கப் பலகை வரும்புல வோர்தமைத் தான்தடுத்தும்
கங்கைக் குரியவன் காத்தவன் காண்கற்ப காலத்திலே
கொங்கில் பொருள்தந்த பெம்மான்காங் கேயன்
சிறந்தவனாம்
மங்கைக்கு வாரண மன்றாடி வாழ்கொங்கு மண்டலமே!

வரலாற்று ஆவணங்களில்

கொங்கு நாட்டு வரலாற்றைக் கூறும் பல வரலாற்று ஆவணங்கள் செப்பேடு, ஓலைப்பட்டயம், பழைய காகிதப் பிரதிகள் ஆகியவற்றில் எழுதப்பட்டவை கிடைத்துள்ளன.*

அவ்வாறான ஆவணங்களில் ஆலாம்பாடி காணியாளர்களான பொருளந்தை குலத்தினர், காடையூர்க் காங்கேய மன்றாடியார் ஆகியோர் குறிப்பிடப்பெற்றுள்ளனர். கொங்கு வேளாண் பெருமக்கள் பலர் குறிக்கப்பெறும் ஆவணங்களில் பெரும்பாலும் முதல்வராகப் பொருளந்தை குலத் தலைவர்களில் காடையூர் காங்கேய மன்றாடியார், பயிர குலத்துத் தலைவர்களாகிய பழைய கோட்டை சர்க்கரை மன்றாடியார், செங்கண்ண குலத்துத் தலைவர்களாகிய காங்கேயம் பல்லவராயர் ஆகிய மூவரில் முதல்வராகப் பெரும்பாலும் காடையூர் மன்றாடியார் குறிக்கப் பெறுகின்றார். காங்கேய நாட்டு மூவரசில் முதல் அரசுக்கு உரியவர்கள் காடையூர்க் காங்கேய மன்றாடியார் மரபினரே ஆவர்.

முகுந்த நல்லூர்ப் பட்டயம்

விசயநகர மன்னரின் பிரதிநிதி ஆளித மகாராயர் ஈரோட்டிலிருந்து ஆட்சி செய்யும்போது மேல்கரைப் பூந்துறை

---

* இவை 'கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்' என்னும் பெயரால் 80 கொங்குநாட்டு ஆவணங்கள் இந்நூலாசிரியரால் தொகுக்கப்பட்டுத் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் நான்காவது தலைநகரான எழுமாத்தூர்க் காணி யாளர் பனங்காடை குலத்து ஆண்டாக் கவுண்டர் மகன் சோழியாண்டாக் கவுண்டர், தென்குறுப்பு நாடான வீர சோழபுர நாட்டைச் சேர்ந்த தேவார வைப்புத் தலமான முகுந்தநல்லூர் என்னும் குரக்குத்தளியையும், திருப்பூர், ஊத்துக்குளி, மண்ணறையையும் திருமியகோத்திரம் கொங்குச் செட்டிகளில் அவிநாசி செட்டியார் மகன் காசிலிங்கம் செட்டியா ரிடமிருந்து 1000 பூநாகரம் பொன்னுக்கு விலைக்கு வாங்கிய பட்டயத்தில் பூந்துறை நாடு, குறுப்பு நாடு, காங்கேய நாடு. பொங்கலூர் நாடு, ஆறு நாடு, வீர சோழபுர நாடு போன்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பாளையக்காரர்களும், பெரு மக்களும் அடங்கிய பல சமூகத்தவர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளனர். பாளையக்காரர்களில் முதலில் கையொப்ப மிட்ட பெருமை 'புறளந்த குலத்தில் சரவண காங்கய மன்றாடியார்' அவர்களுக்கேயுரியதாகும்.

திருவாச்சிச் செப்பேடு

மதுரையில் துளசி நாயக்கர் ஆட்சி செலுத்தும்போது மேல்கரைப் பூந்துறை நாட்டுத் திருவாச்சியைக் காங்கேய நாட்டுப் பரஞ்சேர்வழி ஓதாளகுலத்துக் காளியப்ப கவுண்டரும், வெள்ளகோயில் ஆந்தை குலத்துச் சென்னி மலைக் கவுண்டரும், கொங்கச் செட்டியார் வேலாயுத செட்டியார், பூவாணி வேட்டுவர் ஆகியோரிட மிருந்து 1500 பொன்னாகரத்துக்கு விலைக்கு வாங்கிய செப்பேட்டில் 'காங்கேய நாட்டுக்குப் பொருளந்தை குலப் பட்டக்காரர் காங்கேய மன்றாடியார்' சாட்சிச் கையொப்பம் இட்டுள்ளார்.

பட்டாலிக் கிரயப் பட்டயம்

18-4-1792 அன்று திப்பு சுல்தான் அவர்கள் அதிகாரம் செய்யும் நாளையில் பட்டாலிக் காவலன் அனுமந்தக் கவுண்டர் அவர்களிடமிருந்து தீர்த்தகிரிச் சர்க்கரைக் கவுண்டர் 200

ரூபாய்க்குப் பட்டாலிக் கிராமத்தின் ஒரு பகுதியை விலைக்கு வாங்கினார். வாங்கிய தீர்த்தகிரி 'தீரன் சின்னமலை' ஆவார். ஆயுதங்கள் செய்யவும், வெள்ளையரை எதிர்த்த இராணுவ நடவடிக்கைக்காகவும் அவ்வூர் வாங்கப்பட்டது. முதல் கையொப்பம் 'கொங்கு தாராபுரம் வடக்கு வாசலுக்குச் சேந்த காங்கய நாட்டுப் பொருளந்தை குலப் பட்டக்காரர் காங்கய மன்றாடியாரவர்கள்' இட்டுள்ளார்கள். ஆலாம்பாடி பொருளந்தை குலக்குப்பக் கவுண்டரும் இதில் கையெழுத்திட்டுள்ளார். இதனால் ஆங்கிலேயருக்கு எதிராகச் சின்னமலை நடத்திய போராட்டத்திற்குப் பொருளந்தை குலத்தினர் அளித்த ஆதரவு புலப்படுகிறது. விடுதலை வரலாற்றில் இச்செய்தி சிறப்புமிக்கதாகும்.

நல்லூர்க் கிரயப் பட்டயம்

16ஆம் நூற்றாண்டில் பொன்குலுக்கிநாட்டு நல்லூர்ப் பகுதியைக் கொங்குச் செட்டிகளில் பவளத்தான் என்பவரும், சிவப்பிராமணர்களும் நிர்வாகம் செய்துவந்தனர். அவர்கள் அரசனுக்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தைச் செலுத்த முடியவில்லை. மேய்ச்சல் பட்டிக்காக அப்பகுதிக்கு வந்திருந்த ஆத்தூர்ப் பனங்காடை குலத்தில் முத்து நஞ்சப்ப கவுண்டர் மகன் சோழியப்ப கவுண்டர் 1000 பொன்னாகரமும், 10 பொதி நெய்யும் கொடுத்து அவ்வூரின் ஒரு பகுதியை விலைக்கு வாங்கினார். காங்கேய நாட்டு மூவரசர் உட்பட வேளராசி, உகாயனூர், குண்டடம், பெருந்தொழுக்காரர்களும் கையெழுத்திட்டுள்ளனர். முதல் கையெழுத்து 'பொருளந்தை காங்கேய மன்றாடியார்' கையொப்பமே காணப்படுகிறது.

கத்தாங்கண்ணிப் பட்டயம்

குறுப்பு நாட்டுக் கத்தாங்கண்ணியில் முதல் காணி யாளர்கள் சிவந்தி குலத்தினர். சிவந்தி குலத் தீத்தாக் கவுண்டர் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை வெள்ளைப்

பிள்ளையாக இருந்தது. அப் பெண்ணைக் கண்ணகுலச் செங்கோட்டு வேலப்ப கவுண்டர் திருமணம் செய்துகொண்டு அவ்வூரில் காணி பெற்றார்

'பொருள்தந்த குலத்தில் பட்டம் பெற்றிருக்கும் பெத்தான் காங்கய மன்றாடியாரவர்கள் முன்பதாகவும் யின்ன மற்று முண்டாகிய சகலரனைவோர் முன்பதாகவும்' பட்டயம் எழுதப் பட்டதாகக் குறிக்கப்பெறுகிறது

இப்பட்டயத்தில் கத்தாங்கண்ணி மணியகாரராக 'பொரு ழந்தை குல நல்லிக்கவுண்டர்' குறிக்கப்பெற்றுள்ளார்.

கொங்குப் புலவர் பட்டயம்

குலோத்துங்கச் சோழன் காலத்தில் கொங்கு வேளாளர் களுக்காகப் புலவர்கள் நியமிக்கப்பட்டனர். இடைக்காலத்தில் இவ்வழக்கம் நின்றுவிடவே விசயநகர மன்னர் தேவப்பராயர் காலத்தில் மீண்டும் 24 நாடுகட்கும் புலவர்கள் நியமனம் செய்யப்பெற்றனர். கொங்கு 24 நாடுகட்கும் பொதுவான இப்பட்டயத்தில் காங்கேயநாடு மூவரசர்களும் கையொப்ப மிட்டுள்ளனர். முதல்வராகக் 'காங்கயநாடு புரளந்தை குலத்தில் மன்றாடியார்' எனக் காங்கேய மன்றாடியார் குறிக்கப் பெறுவதுடன் அனைத்து மக்கள் சார்பில் கையொப்பமிட்ட பொதுமக்களில் 'புரளந்தை குலத்தில் சூரிய நாராயணக் கவுண்டர்' என்பவர் குறிக்கப் பெறுகின்றார்.

குறுப்பு நாட்டுப் பட்டயம்

இப் பட்டயம் குறுப்பு நாட்டு ஊர்கள், காணியாளர்கள், எல்லை, புலவர் ஆகிய விபரங்களைக் கூறுவது. இதில் தென்குறுப்பு நாட்டு வீரசோழபுர நாட்டில் முதல் காணி யாளர்கள் பொருளந்தை குலத்தில் சூரிய நாராயணக்கவுண்டர் என்பவர் குறிக்கப்பெறுகின்றார். நான்கு பட்டக்காரர் களையும் குறிக்கும். இப்பட்டயத்தில் தென்கரை நாடு பெரிய

குலத்தில் முத்துரத்தின வேணாடுடையாருடன் 'காங்கயநாடு பொருளந்தை குலத்தில் சரவண காங்கய மன்றாடியார்' அவர்கள் குறிக்கப்பெற்றுள்ளார்.

காங்கய நாட்டுப் பட்டயம்

காங்கேய நாட்டுக் கீரனூருக்குப் பால் சாப்பிடும் உரிமையுடைய காணிப் புலவராகப் பழனிமலைப் புலவர் மகன் சென்னிமலைப் புலவனை நியமித்த இப்பட்டயத்தில் காடையூர்க் காங்கேய மன்றாடியார் அவர்கட்குப் பிற்கால அரசர்கட்கு அளிக்கப்பெற்ற எல்லாப் பட்டங்களும் அளிக்கப் பட்டுள்ளன.

'ராசாதிராசன், ராசமார்த்தாண்டன், ராசகுல திலகன், ராசகெம்பீரன், நாடாளும் நாயகன், ராசகுலதுங்கன், பூலோக தேவேந்திரன், ஆரணமுறையார் ஆறிலொன்று கடமை கொண்டு ஆடுங்கடைமணி நாவசையாமல் அரசாளும் ராசன் காங்கயநாடு பொருளந்தை குல காடையூரு இம்முடிக் குமார காங்கய மன்றாடியாரவர்கள்' என அவர் குறிக்கப்பட்டுள்ளார்.

காலிங்கராயன் அணைப் பட்டயம்

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் மேல்கரைப் பூந்துறை நாட்டைச் சேர்ந்த வெள்ளோடு கனகபுரம் சாந்தத்தை குலக் காலிங்கராயக் கவுண்டர் பவானியாற்றில் அணை கட்டிக் கால்வாய் வெட்டும் முயற்சியில் ஈடுபட்டார். அது தொடர்பாக கொங்கு 24 நாடுகளில் 10 நாடுகளைச் சேர்ந்த பல கவுண்டர்கள் ஈரோடு கொங்கிலம்மன் கோயிலில் கூடிப் பேசினர். அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் 'காங்கேய நாட்டுப் பொருளந்தைகளில் சரவண காங்கேயன்' அவர்கள்.

பூந்துறை நாட்டார் மேலோலை

மதுரை நாயக்கர் முத்துவீரப்ப நாயக்கர் ஆட்சிக்காலத்தில் 1617ஆம் ஆண்டு காங்கேய நாட்டுக்கும், பூந்துறை நாட்டுக்

கும் எல்லைத் தகராறு எழுந்து போர் ஏற்பட்டு இரு தரப்பிலும் பலத்த ஆள் சேதம் ஏற்பட்டது. நாயக்க அரசர் சார்பில் தாராபுரம் அலுவலர் திம்மப்ப முதலியார் அவர்களால் நேரில் வந்து எல்லைத் தகராறைத் தீர்த்துப் பட்டயமும் எழுதித்தரப்பட்டது. பொருளந்தை குல 'காங்கய நாடு காங்கய மண்ணாடியார்' கையொப்பமும் காணப்படுகிறது.

முத்தூர்ப் பட்டயம்

விசயநகர மன்னர் பிரபுட தேவராயர் காலத்தில் தாராபுரம் சீமைக்காரர்கள் பலர் வரி கொடுக்காத காரணத்தால் சிறை வைக்கப்பட்டனர். அவ்வாறு வைக்கப்பட்டவர்களில் 'பிரளந்தையரில் தேவண கவுண்டர் மகன் நல்லதம்பி' என்பவரும் ஒருவர். விடுதலைக்குப் பின் எழுதப்பட்ட முத்தூர்ப் பட்டயத்தில் காடையூர் 'கழுவன காங்கேயர்' என்ற பெயரும் காணப்படுகிறது.

அனுப்பப்பட்டிச் செப்பேடு

சேரமான் பெருமாள் காலத்தில் கொங்கு 24 நாடுகளையும் கைப்பற்றச் சோழன் படையெடுத்தான். கரூர், காங்கெயம் பகுதியில் போர் நடைபெறும்போது மேற்குத் தலைவாசல் காக்கும் இராமலிங்கம் பிள்ளை என்பார் காவல் பணியிலிருந்து ஓடிவிடுகிறார். அவரைப் பதவி நீக்கம் செய்து எழுதப்பெற்ற செப்பேட்டில் 'நாட்டார் காடையூர்ப் பட்டம் பொருளந்தை குல கொமர காங்கய மன்றாடியார் ஒப்பிதம்' என்ற பெயர் காணப்படுகிறது.

மதுக்கரைப் பட்டயம்

தெற்கேயிருந்து வேட்கோவர்களாகிய குலாலர்குலப் பெருமக்களை அழைத்துக்கொண்டு கொங்கு 24 நாடுகளிலும் கொங்குத் திருநீலகண்டர் என்று பெயரிட்டுக் குடியேற்றி மண்பாண்டங்கள் வழங்குவது பற்றி எழுதப்பட்ட இவ்

ஒப்பந்தத்தில் பொருளந்தைகுல 'காங்கயநாடு காங்கய மன்றாடியார்' பெயர் காணப்படுகிறது.

நாரணபுரம் செப்பேடு

கொங்கு வாரக்க நாட்டைச் சேர்ந்த பல்லடம் கஸ்பாவில் உள்ளது நாரணபுரம். அவ்வூர் அங்காள பரமேசுவரி கோயில் திருவிழா - திருப்பணி தொடர்பான செப்பேட்டில் 'கருமாபுரம் காடையூர் பிரளந்தை கோத்திரம் கந்தப்ப கவுண்டர், அமராபதிக் கவுண்டர், செங்காளியப்ப கவுண்டர், வடமலைக் கவுண்டர், சின்னிய கவுண்டர், வட்டமலைக் கவுண்டர், முத்திராயர் காளியப்ப கவுண்டர், ராக்கியாக் கவுண்டர், கருமாண்டைக் கவுண்டர் என்பவர்கள் குறிக்கப்படுகின்றனர்.

இலக்கிய ஏடுகளில்

பல்வேறு சிற்றிலக்கியங்களும், தனிப்பாடல்களும் பொருளந்தை குலத்தாரின் பல்வேறு பெருமைகளை விரித்துரைக்கிறது. அவற்றின் மூலம் பொருளந்தை குலத்தாரின் ஆட்சிச் சிறப்பு, அரசரால் நன்கு மதிக்கப்பெற்ற தன்மை, பக்திச் சிறப்பு போன்ற பல்வேறு பெருமைகள் வெளிப்படுகின்றன.

காணிப்பாடல்கள்

'தமிழ்பெற்ற பிள்ளைக் கரைக்கதிப ராகவரும்
தார்பெற்ற கொங்குவேளிர்
நீதியுள மன்னவர்கள் சிற்றம் பலத்தாரை
நினைக்கின்ற கங்கைகுலமான்
நேர்மையது தவறாத பொருளந்தை கோத்திரன்
நிலமையுடன் வாழ்கநன்றே!'

இதனால் பொருளந்தை குலத்தாரின் தமிழ்ப் பற்று, அதிகாரத் தலைமை, வெற்றிமாலை சூடியது, நீதி செலுத்திய தன்மை, நடராசப் பெருமானை வழிபடும் சிறப்பு, நேர்மை ஆகியன புலப்படுகின்றன.

'கமலமலர் அருள்வதன சென்னியங் கிரிமுருகர்
கழலிணையை மறவாதவர்
பெருமைபெறு பொருள்தந்த குலதிலகன் எனவந்த
விபேகன் குழந்தைவேலன்
பெற்றகண் மணியான பழனிமலை நாயகன்
பிரபுடிக மகராசனே'

என்ற பாடல்பகுதி மூலம் சென்னிமலை, பழனிமலை போன்ற தலங்கள்மீது பொருளந்தை குலத்தார் கொண்டிருந்த பற்றும் தொடர்பும் வெளிப்படுகிறது. பிரபுடிக மகராசன் என்பதால் நாட்டு நிர்வாகப் பொறுப்பும், தலைமையும் ஏற்ற பண்பு வெளிப்படுகிறது.

காங்கேய நாட்டில் பொருளந்தை குலத் தலைவராக முதலிக்காமிண்டன் என்பவர் வாழ்ந்துவந்தார். அவருக்கு முதலி மன்றாடி என்றும் பெயர் உண்டு. பாண்டியர் அதிகார நாளில் முதன்மையானவராக இருந்த காரணத்தால் அவர் 'முதலி' என்று பட்டப் பெயர் பெற்றார். அவருக்குக் கொங்கு நாட்டுத் தாராபுரத்தில் 56 நாட்டு அரசர்களும், கொங்கு நாட்டுப் பாளையக்காரர்களும் அறியும்வண்ணம் பாண்டிய மன்னன் முடி சூட்டினான் என்பதைக் கீழ்வரும் பாடல்பகுதி உணர்த்துகிறது. முதலிக் காமிண்டன் பாண்டியன் படைத் தலைவனுமாவான்.

'சீருலவும் மதுரையில் சொக்கேசர் மீனாட்சி
செயலருள் கிருபை அதனால்
சிங்காச னாதிபதி அதிவீர பாண்டியன்
செங்கோல் செலுத்தும் அந்நாள்
சீரான காங்கயநன் னாட்டினில் கீர்த்திபெறு
செயகொங்கு மன்றாடியார்' (கம்பர் வாக்கியம்)

'கொற்றவனும் இனியசுந் தரவீரபாண்டியன்
கொங்குதா ராபுரத்தில்
கூறும்ஐம் பத்தாறு தேசத்தில் உள்ளவர்கள்
கொங்கில்உள துரைகள் அறிய
வெற்றிபுனை காங்கயமன் றாடியென் றபிடேகம்
மேவிமணி முடிகள் பெற்றான்...'

வழுதிநாட்டுக் காமிண்டன் பாடல்

பொருளந்தை குலக் காங்கேயர் மதுரையில் வாழ்ந்த காரணத்தாலும், பாண்டியரிடம் பெருமை பெற்றும், பாண்டி

யருக்கு உதவியும் உள்ள காரணத்தாலும் வழுதிநாட்டுக் காமிண்டன் என்றே பெயர் பெற்றார். காணிப் பாடலில்கூடப் பொருளந்தை குலத்தாரின் காணி ஊராக மதுரை குறிக்கப் பெறுவது காணலாம். இவர்கள் தொடர்பான பாடலில் ஒட்டியனை வென்ற சிறப்பும், அதனால் பாண்டியர் சிறப்புச் செய்ததும் கூறப்படுகிறது.

'திடமருவு முருகவிழ்க் கொன்றையொடு பொற்சடை
　　சிறந்தநட் ரேர்பேரில்
தெரியாமல் ஒட்டியன் கரடமத கரியுடன்
　　திரண்டுவந் துற்றபோரில்
வடிவனைய செவ்வரி படர்ந்தநற் காடைதான்
　　மருவலர் வெருவிநிற்க
மதகரி செகுத்துமொன் னார்படை வதைத்திட
　　.........
பாண்டியன் கேட்டுமகிழ் பண்புபெற நின்னையும்
　　பாராட்டி வரிசைதந்தான்
முதலிமன் றாடிதான் அன்புடன் வரிசை பெற்றான்!'

'ஒட்டியனை வெட்டித் தரங்கொண்ட தால்மெச்சி
　　தவமிகுந் திடும்பெரிய காங்கேயமன் றாடிக்குத்
தனியரசு சூட்டினர்களே!'

பலர் காங்கேயன் என்று பெயர்கள் வைத்திருந்ததால் காடையூர்க் காங்கேயர் பெரிய காங்கேயர் என்று பெயர் பெற்றனர். இவர்கள் 'தனியரசு' பெற்றது சிறப்புமிகும் செய்தியாகும்.

காங்கேய நாட்டுப் பாடல்

காங்கேய நாட்டின் முத்தூர், பொருளந்தை குலத்தாரின் காணி ஊர். ஆறுதொழுவும், ஆலாம்பாடியும் பொருளந்தை குலத்தார் ஏற்படுத்திய புதிய ஊர்களாகும். காங்கேயநாட்டுப்

பாடல்களில் இம்மூன்று ஊர்களில் வாழும் பொருளந்தை குலத்தார்கள் பற்றிச் சிறப்புடன் அப்பாடல் பகுதிகள் புகழுகின்றன.

'அழகான முத்தூரில் வளர்கின்ற முத்தனை
அய்யமிகு மணியகுலனை
அகளங்க சேரனைத் தனபதிவெள் ளம்பனை
அனதான பொருளந்தயை'

'வளமைசேர் ஆறுதொழுவில்
அதிகசௌக்கிய புரளந்தையை'

'வாவிசூழ் ஆலநகரில் மருவு
முதலான பொருளந்தையை'

பொருளந்தை குலத்தார் அன்னதானம் செய்கின்ற சிறப்பும், அவர்களின் 'சௌக்கிய' வாழ்வும், முதன்மைத் தன்மையும் இப்பாடல் பகுதிகள்மூலம் சிறப்பிக்கப்படுகின்றன.

திருச்செங்கோடு கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் தலைமைத் தலம், தேவாரப் பாடல் பெற்ற சிறப்பிற்குரியது அவ்வூரில் அரசர்களும், அலுவலர்களும் பல, சமூகப் பெரியவர்களும் செய்த திருப்பணிகளைத் தொகுத்துப் பாடலாகப் பாடப் பெற்ற அரிய நூல் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை.

திருச்செங்கோட்டுக்குக் காடையூர்ப் பொருளந்தை குலக் காங்கேய மன்றாடியார் நிவேதனமாகப் பொருள்கள் படைத்ததும், மாலை சாத்தியதும், நெய்த்தீபம் வைத்ததும் ஒரு பாடலில் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

'பானு லாவிய பணிமலைவே லரும்
பரமரும் உளம்மேவத்
தேனு லாவிய காடைமன் றாடியார்
திருந்தவிழ் மரக்காலும்

கானு லாவிய கறிகளும் பருப்பும்
　　கவினுறு திருமாலை
யானு லாவுநெய்த் தீபமும் தினம்தினம்
　　அளித்தனன் புகழ்ந்தானே!

என்பது அப்பாடலாகும்.

கொங்கு மண்டல சதகம்

கொங்கு நாட்டின் பல்வேறு சிறப்புக்களையெல்லாம் தொகுத்துக் கூறும் வரலாற்று நூல் கொங்குமண்டல சதகம் ஆகும். வாலசுந்தரக் கவிராயரும், கார்மேகக் கவிஞரும், கம்பநாத சுவாமிகள் ஆகியோரும் பாடிய சதக நூலில் பொருளந்தை குலம்பற்றி எட்டுப் பாடல்கள் உள்ளன. அவற்றின் மூலம் பொருளந்தை குலத்தாரின் பல்வேறு சிறப்புக்கள் வெளிப்படுகின்றன.

காடையூர் பொருளந்தைகுலத் தலைவர் காங்கேய மன்றாடியாருக்குப் பாண்டியனின் மதுரைத் தெருவில் திருமாலிருஞ்சோலை கள்ளழகர் முடிசூட்டினார் என்று ஒரு சதகப் பாடல் கூறுகிறது.

'வெள்ளைநல் யானைத் துதிக்கையி னாற்புகழ்
　　　　　　　　　　　　　　மீனவன்தன்
தெள்ளிய சொக்கர் மதுரை மீனாட்சி தெருவினிலே
கள்ளனஞ் சோலை மலைவாழ் அழகரும் காங்கயற்கு
வள்ளல் கடக முடிசூட்டு வார்கொங்கு மண்டலமே'

அகத்தியரோடும், பொதிய மலையோடும், ஒரு பாடலில் காங்கேயர் தொடர்புபடுத்தப்பெறுகின்றனர். செம்புருக்கும் உலையில் ஆடியதால் மன்றாடி பட்டம் பெற்றதை மெக்கன்சியின் ஆவணம் கூறுகிறது. அதைப் பின்வரும் சதகப் பாடல் மெய்ப்பிக்கிறது.

'அன்றாடி ஈசன் தமிழ்புரி வாதுக்கு அகத்தியன்தன்
கன்றாடி ஈசன் பொருள்தந்த கோத்திரக் காங்கயனைச்
சென்றாடி ஈசன் பொதியனைச் சங்கமும் செம்புருக்கும்
மன்றாடி மன்றாடி என்றோது மேகொங்கு மண்டலமே'

விசயமங்கலத்தில் பொருளந்தை குலத்தில் வாரணவாசி என்பவர் வாழ்ந்துவந்தார். அவருக்குச் சீரங்கன், வடமலை என்னுமிரு சகோதரர்களும் இருந்தனர். அச்சுதராயனின் பகைவனாகிய வெங்கட்டராயன் என்பவரை பொருளந்தை குலச் சகோதரர்கள் மூவரும் வென்றனர். வாரணவாசி என்பவர் மன்றாடி பட்டம் பெற்று அச்சுதராயரின் படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதைக் கீழ்வரும் சதகப் பாடல் விளக்குகிறது.

'படைமுனை வெல்லவும் அச்சுத ராயர் படைத்தலைவர்
திடமுனை வீரர் பொருள்தந்த கோத்திரன் செருநர்முடி
இடர்செய்த தாளவன் இம்முடி வாரண வாசிஎங்கள்
வடமலை முன்னவன் சீரங்கன் வாழ்கொங்கு
மண்டலமே'

ஒட்டிய அரசர் தமிழ்நாட்டின்மீது படையெடுத்தபோது காடையூரில் இறைவி பங்கயச்செல்வி காடைக் குருவிகளை ஓட்டி ஒட்டியரின் யானைப் படையை வென்றதாக வரலாறு கூறுகிறது. இச்செய்தி பல தனிப் பாடல்கள் மூலம் உறுதிப் படுகிறது.

'பாங்குறு சொக்கர் மதுரை மீனாட்சிதென்
பாண்டியன்தன்
காங்கய மன்றாடி மைந்தனென் றேநல் கடகமுடி
யோங்கிய காடை களுமோட்டி வென்றவள் உத்தமிதான்
மாங்குயில் பங்கயச் செல்வியும் வாழ்கொங்கு
மண்டலமே'

சர்க்கரை மன்றாடியார் காதல்

காங்கேய நாட்டு மூவரசில் பழைய கோட்டைப் பட்டக்காரர் ஒருவர். அவர்கள் மரபுபற்றிய ஒரு சிற்றிலக்கியம் சர்க்கரை மன்றாடியார் காதல் நூலாகும்.

அந்நூலில் பொருளந்தை குலக் காங்கேய மன்றாடியார் பழைய கோட்டை மரபினருக்கு மூத்த சகோதரர் முறையாக வேண்டும் என்று கூறப்படுகிறது.

'வீடணனைக் காத்தருளும் மேவுபொரு ளந்தைகுலன்
காடையூர் மேவும் காபாரி தென்னவனாம்
மால்குமர காங்கயமன் றாடி மகீபதியைத்
தால மகிழத் தமையன்என வேபடைத்தோன்'

ஓதாளர் குறவஞ்சி

ஓதாளர் குறவஞ்சி பொங்கலூர் நாட்டில் சிறப்புடன் வாழும் காணியாளர்களில் பொருளந்தை குலத்தாரும் ஒருவர் என்று சிறப்பித்துக் கூறுகிறது. அந்நூல் பிரமயணப்புலவர் என்பார் இயற்றியது.

'பொன்னர் ஓதாள கோத்திரர் குழாயர்
பொருந்து சாத்தந்தை செம்பர் செம்பூதர்
கண்ணர் மாடையும் பூசனும் வெண்டுவர்
காடை செங்கண்ணன் பொருளந்தை பயிரர்
எண்ணை ஆந்தை கோவேந்தர் பனங்காடை
இப்ப டிச்சிறந் தோங்கி யிருக்கும்
இன்னம் நற்குல வேளிர்கள் வாழ்வுற்று
இருக்கும் பொங்கலூர் நாடெங்கள் நாடே'

---

* பொருள்தந்த குலத்தார் வீடணனைக் காத்தது ஓர் அரிய செய்தியாகும். மேல் விபரங்கள் தெரியவில்லை.

சிவன்மலைக் குறவஞ்சி

காங்கேய நாட்டின் தலைமைத்தலம் சிவன்மலை. சிவன் மலைத் திருப்பணியிலும், வழிபாட்டிலும் பொருளந்தை குலச் செம்மல்கள் பெரும்பங்கு வகித்தனர். காங்கேய நாட்டு மூவரசில் முதல் அரசாகக் காடையூர் பொருளந்தை குலக் காங்கேய மன்றாடியார் மரபை அந்நூல் புகழுகிறது. காங்கேய நாட்டைக் 'குமார காங்கேயன் நாடு' என்று கூறுவதன்மூலம் காங்கேயம் என்ற பெயரே பொருளந்தை குலக் காடையூர்க் காங்கேயர் மரபால் ஏற்பட்டது என்பது அந்நூல் கருத்தாகும்.

பொருளந்தை குலத்தைச் சேர்ந்த அழைப்பிச்சான், பச்சை ராயன், காங்கேயன் என்ற பலர் திருப்பணிகள்பற்றிச் சிவன்மலைக் குறவஞ்சி விளக்குகிறது. காங்கேய நாட்டுப் பொருளந்தை குலத்தினர் சிவன்மலைக்குச் சென்று தினமும் வணங்குவர் என்று அந்நூல் புகழுகிறது.

இம்முடிச் சோழியாண்டான்

வடபரிசார நாட்டில் பொருளந்தை குலத்தில் தோன்றிய சோழியாண்டான் என்பவன் வாழ்ந்துவந்தான். அவன் கொங்கு நாட்டினை ஆட்சி புரிந்த அரசர்களிடம் உயர் அலுவலராகப் பணிபுரிந்து இம்முடிப் பட்டம் பெற்றவன். சேவூர்ப் பகுதியில் அதிகாரம் செய்தவன். இவனைப் பற்றிய சாசனங்கள் அவிநாசியில் உள்ளன.

நொய்யல் ஆற்றின் பழம்பெயர் காஞ்சி என்பதாகும். நொய்யலாற்றில் 32 அணைகள் இருந்தன என்று பண்டைய ஆவணங்கள் கூறுகின்றன. அவற்றுள் வடபரிசார நாட்டுப் பகுதியில் இருந்த அணையும் ஒன்றாகும்,

அங்கிருந்த அணை நீர்ப்பாசனத்துக்குப் பயன்படாமல் உடைந்துகொண்டேயிருந்தது. அது நிற்க வேண்டுமானால்

கன்னிப் பெண்ணை நரபலி கொடுக்கவேண்டும் என்ற தெய்வ வாக்குக்கேற்ப இம்முடிச் சோழியாண்டான் தன் மகளையே பலி கொடுத்து நொய்யல் அணையை நிற்குமாறு செய்தான்.

இதே பொருளந்தை குலச் சோழியாண்டான் அவிநாசிக் கோயில் திருப்பணிக்குப் பல கல் திருப்பணிகளைச் செய்தான். இவ்விரண்டு செயலையும் கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர் மிகவும் சிறப்பித்துப் பாடுகிறார்.

'பாயும் அணைநிற்க வேண்டி மகளைப் பலிகொடுத்தும்
தோயும் திருப்புக் கொளிக்கோயில் கற்பணித்
தொண்டுமிசை
ஆயும் பொருளந்தை இம்முடிச் சோழியாண் டானளியின்
மாயன் வடபரி சாரநா டும்கொங்கு மண்டலமே'

என்பது அவர் பாடிய கொங்கு மண்டல சதகப் பாடலாகும்.

கட்டிமகிபன் பள்ளு

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் இணை நாடான ஏழூர் நாட்டின் தலைநகர் ஏழூர். தேவார வைப்புத் தலம். ஏழூர் பொருளந்தை குலத்தாரின் காணி ஊர்.

அங்குள்ள பொருளந்தை குலத்தாரின் காணிக் கோயிலான கட்டியண்ணன்கோயிலில் சின்னண்ணன், பெரியண்ணன், முத்தாயி, பவளாயி, முடிபெருத்த நல்லாயி ஆகியோர் தெய்வமாக எழுந்தருளியுள்ளனர். பொருளந்தை குலத்துக் கவுண்டரே பூசாரியாக உள்ளார். இங்குள்ள பண்ணையம்மன் கோயிலும் ஏழூர் நாட்டுப் பொருளந்தை குலத்தாருக்குரிய கோயில்.

இங்கு தெய்வமாக மாறியுள்ள கட்டியண்ணன் ஏழூர்ப் பொருளந்தை குலத்துப் பழனிவேல் கவுண்டர் மகன். அவரைப் பாட்டுடைத் தலைவராகத் கொண்டு அழகிய செந் தமிழ் இலக்கியமாகப் பாடப்பட்ட நூலே 'கட்டி மகிபன் பள்ளு' ஆகும்.

இந்நூலில் பொருளந்தை குலத் தலைவர் 'பழனிவேல் கவுண்டர், அவர் மகன் கட்டிக் கவுண்டர் ஆகியோர் பெருமை களும், பொருளந்தை குலச் சிறப்பும் பரவலாகப் பேசப்படு கிறது.

'விள்ளுதமிழ் ஏழூரன் வேள்பழனீ வேல்புதல்வன்
வள்ளல்பொரு ளந்தைகுலன் மால்கட்டி பூபதி"

'ஒருசொல் வாசகனாகி உயர்ந்த கட்டிவேள்'

'வீசும் செந்தமிழ்க் கங்கை வங்கிசன்
மாசில் பழனீவேல் சொல்
விருது பெற்றிடும் கட்டி பூபாலன்'

'வடித்த செந்தமிழ் புனைந்த வண்புகழ்
நடத்தும் ஏழூர் நாட்டினான்
வண்மை யாகவ ராம னாகிய
தர்மக் கட்டிவேள்"

என்றெல்லாம் பொருளந்தை குலக் கட்டியண்ணன் புகழ்ந்து பேசப்படுகிறார்!

நீதியுள்ள கொங்குக் கவிஞர்கள் நெஞ்சம் மகிழ நூறு பொதி நெல்லும், மலைய பட்டன் குமரவேல் தமிழ்க் கூத்துக் கண்டு நூறு பொதி நெல்லும், சித்தம்பலக் குருக்களுக்கு நூறு பொதி நெல்லும், நல்லாரையன் திருமாளிகைக்கு நல்ல மல்லிகைச் சம்பாவில் நூறு பொதி நெல்லும், குளவெட்டுக்கும், அணைக்கட்டுக்கும் கூலியாக முந்நூறு பொதி நெல்லும் கொட்டிக் கொடுத்த கட்டி வளம் புகழ்ந்து பேசப்படுகிறது.

பொருள் தந்த குலத்தார் பொருள் தொகையாய்ப் படைத்தவர்; அச்சமின்றிக் குபேரன் போல் பொருள் இருந்தால் வாழலாம்; பொருளால் உலகைக் காக்கலாம்; பொருளால் வெற்றி, கீர்த்தி உண்டு; கொடி, விருது உண்டு. பொருளந்தையை வெற்றிப் பொருளந்தை என்று கூறலாம் என்று கூறப்படுகிறது,

'எங்களாண்டான் பொருளந்தை— நலம்
இலகும் கனகத் தங்கக் கட்டி'

என்று தலைவன் குலப் பெயரால் புகழப்படுகின்றான்.

பொருளந்தை குலத்தார் புலையனுடன் உடன் உண்டது நீலிபழி தொலைத்தது. புலவனுக்குத் தண்டிகை சுமந்தது, புலவருக்குக் காளாஞ்சி ஏந்தியது சூலி முதுகில் சோறு படைத்தது போன்ற பெருமைகளைப் பெற்றவர்கள் என்று கூறப்படுகிறது.

208 பாடல்களை உடைய இனிய நூல் கட்டி மகிபன் பள்ளு.

'வருபொரு ளந்தைகுலம் அவன் கிளையும்
வளரும் ஏழூர்நாடும் மிகவாழி"

என முடிகிறது நூல்.

காடையூர் காங்கேய மன்றாடியார்

கருமாபுரம் காங்கேயன்

பொருளந்தை குலத்தாரின் முதல் காணி ஊர் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக் கருமாபுரம். அங்கிருந்து காவிரியைக் கடந்து காங்கேய நாட்டுக்கு வந்த காங்கேயன் என்னும் பொருளந்தை குல இளைஞன் காடையூரில் வாழ்ந்த சேட குலத்தார் வீட்டில் வெள்ளைப் பெண்ணைத் திருமணம் செய்து காடையூரில் காணி பெற்றான்.

சேட குலத்து மாமனார் இறக்கவே மைத்துனர்கள் பொருளந்தை குலக் காங்கேயனுக்குக் காணி கொடுக்க மறுக்கின்றனர். கடும் போராட்டத்திற்கு இடையில் இசுலாமிய சர்தார் ஒருவரின் உதவியுடன் பொருளந்தை குலக் காங்கேய னாகிய தன் கணவன் இறந்தபின் சேடகுல வெள்ளையம்மாள் காடையூர்க் காணியுரிமை முழுவதையும் பெறுகிறாள். சேட குலத்தார் காடையூரிலிருந்து வெளியேறிவிடுகின்றனர்.

பல சோதனைகளில் வென்று வெள்ளையம்மாள் தன் நான்கு மக்களுடன் காடையூரில் குடியேறுகிறாள், வெள்ளை யம்மாள் வழியினரே காடையூர்ப் பட்டக்காரர் பொருளந்தை குலக் காங்கேய மன்றாடியார் ஆவர்.

முழுக்காது சீர்

இசுலாமிய சர்தாருக்காக—அவருக்குக் காட்டும் செய்ந் நன்றியாக முழுக்காது சீர் செய்பவராக அழைக்கப்படு கின்றனர். முழுக்காது சீர் செய்பவர்கள் பொருளந்தை

குலத்தில் ஒரு பிரிவே தவிரத் தனிக் குலம் அல்ல. சில கொங்கர் குல வரலாற்று ஆசிரியர்கள் பொருளந்தை குலத்தையும், முழுக்காது சீர் செய்வோர் குலத்தையும் வேறு வேறாகக் குறிக்கின்றனர். அது தவறான தாகும். இல்லியம் புதூர், இல்லியம் ஆகிய ஊரைச் சேர்ந்த முழுக்காது சீர் செய்வோர் ஆலாம்பாடி அண்ணன்மார் கோயிலுக்கு வழிபட வருவதும், ஆலாம்பாடிப் பொருளந்தை குலத்தாரைப்- பங்காளி உரிமை கொண்டாடுவதும் இதனை விளக்கும். பொருளந்தை குலத்தாரின் எல்லாச் சிறப்புக் களையும் தாம் ஏற்றுக்கொண்டு முழுக்காது சீர்ப் பொருளந்தை குலத்தார் என்றே தம்மைக் காடையூர்க்காரர்கள் அழைத்துக் கொள்கின்றனர். கொங்கு மண்டல சதகத்தில் வெள்ளை யம்மாள் நிகழ்ச்சி கூறப்படுகிறது.

காடையில் சேட குலத்தான் மகள்மெய்க் கழுவறைந்து
மேடையில் சங்கப் பலகையுண் டாக்கிநல் வேப்பமலர்த்
தோடையும் பாடகம் காங்கேயன் தன்னைச் சுமந்து பெற்று
மாடையு நேர்தெய்வப் பேறுபேற் றாள்கொங்கு மண்டலமே

என்பது கார்மேகக் கவிஞர் சதகப் பாடலாகும்.

முழுக்காது குலம் பொருளந்தை குலமே

முழுக்காது சீர் செய்யும் 'முழுக்காது குலத்தார்' மட்டும் வழிபடக்கூடிய காடையூர் காடையீசுவரர் கோயில் கல்வெட்டு 'முழுக்காது குலத்தாரை' பொருளந்தை குலத்தாராகவே குறிக்கிறது.

'ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழ தேவர்க்கு யாண்டு இரண்டா வதிற் கெதிராவது காங்கைய நாட்டுக் காடவூர் வெள் ளாளன் புரளந்தைகளில் சிலம்பன் முதலியான் காடவூர் காடவூரீஸ்வர முடையாற்குச் சந்தியா தீபத்துக்கு

ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்றுக்கு... நிறைந்த... குடங்கொண்டு கோயில் புகுவான் இத்தன்மம் இரட்சிக்க. பன்மாகேஸ்வரர் இரட்சை'

'ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு ப... காங்கையநாட்டுக் காடஹூர் வெள்ளாளன் புரளந்தைகளில் பிள்ளையாரான உடையான் காடஹூர் ஆண்டாற்கு ஒடுக்கின அச்சு ஒன்றும் இக்கோயில் காணியுடைய திருஞானசம்பந்தன் உள்ளிட்டோம் கொண்டு சந்தியா தீபம்... இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரம்...'

'ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலம்சிறக்க விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 8 ஆவது காங்கைய நாட்டுக் காடஹூர் வெள்ளாளன் புரளந்தைகளில் சோழன் காளி... விட்ட இடங்களும் திருமடைப்பள்ளியும் மதிலும் நிர்மாலியத் தொட்டியும் செய்வித்தேன்,'

மேற்கண்ட ஆவணங்களையும், வரலாற்றுச் செய்தியையும் நோக்கும்போது காடையூர் காங்கேய மன்றாடியார் பொரு ளந்தை குலத்தினரே என்பது தெளிவு. கொங்கு மண்டல சதக ஆசிரியர் அவர்களைப் 'பொருள்தந்த கோத்திரக் காங்கயன்' என்றே கூறுகிறார் (எண்-61). அதனால் அவர் கள் வரலாறு இங்கு கூறப்படுகிறது.

சகோதரர் நால்வர்

குல முதல்வி வெள்ளையம்மாளுக்கு நான்கு ஆண்மக்கள் பிறந்தனர். அவர்கள் பெயர்களைக் கழுவறஞ்ச காங்கேயன், சோமன் காங்கேயன், தடிக்காளி காங்கேயன், சேணியன் காங்கேயன் என வமிசாவளி கூறுகிறது.

ஒட்டியர் போர்

இவர்கள் நால்வரும் நட்டூர்க் குடியிருப்புக்காரராக விளங்கும்போது கி. பி. 1463ஆம் ஆண்டு ஒட்டிய நாட்டு மன்னன் (ஒட்டியநாடு—ஒரிசா, கலிங்கம்) தென்னிந்தியாவின்மீது படை எடுத்தான். அம்மன்னன் பெயரைக் கபிலேஸ்வரகஜபதி என்று வரலாற்றில் குறிப்பிடுவர். ஒட்டிய செகன்னாதராசா என்று வமிசாவளி கூறும். கஜபதி என்ற பெயரே அவர்தம் யானைப்படையின் பெருக்கத்தை உணர்த்தும்.

ஒட்டிய மன்னனைச் செயம் பண்ணுகிறவனுக்கு பாண்டியன் தன் பெயரையும், பட்டமும் அளிப்பேன் என்று அறிவித்தான். கழுவறஞ்ச காங்கேயன் கனவில் இறைவன் பிராமண வடிவில் வந்து பாண்டியனிடம் ஒட்டியனை வெல்வதாக அறிவிக்குமாறு கூறினார்.

நட்டூரில் படை இறக்கியிருந்த ஒட்டிய மன்னன் சிவாலயத்தில் இருந்த கிழத்தம்பிரானை இழுக்கவே சிவ ரூபமான அவர் காடைக் குருவி வடிவெடுத்து யானைப் படையைத் துரத்தினார். ஒட்டிய மன்னன் இனிமேல் படை எடுத்து வருவது இல்லை என்று கூறிய இடம் இல்லியம் ஆயிற்று. அவன் பட்ட (இறந்த) இடம் பட்டாலி ஆயிற்று. ஒட்டியர் போர் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறக்கூடியது.

இப்போருக்குப் பின்னரே நட்டூர் காடையூர் ஆயிற்று இறைவனும் காடை ஈசுவரர் ஆனார்.

பாண்டியன் செய்த சிறப்பு

கழுவறஞ்ச காங்கேயனைத் தனக்குச் சமமானவனாகப் பாண்டியன் நடத்தினான். சகல வெகுமதிகளும் கொடுத்துப் பட்டமும் கட்டினான். காங்கேயன் மதுரையிலேயே தங்கி

யிருந்தான். தேர்ந்த கல்வி கற்றுச் சகல கலைகளிலும் வல்லவனாக விளங்கினான்.

மீனாட்சியம்மன் அருளால் பாண்டியன் கேட்டுக் கொள்ளத் தாமிரம் காய்கிற உலை அனலில் குதித்து நடனம் செய்தான் கழுவறஞ்ச காங்கேயன். பாண்டியன் கிரீடம், ஆறுகால் பீடம், வேப்பமாலை, மீன்கொடி இந்தவிதமான விருதுகள் கொடுத்து சகலகலாவல்ல காங்கேயன் என்ற பட்டம் கொடுத்து ஆலிங்கனம் செய்துகொண்டு தனக்குள்ள மிக அரிய சுவேதச் சத்திர விருதையும் கொடுத்தான். மதுரை வீதியில் கள்ளழகர் காங்கேயனுக்கு முடி சூட்டியதாக ஒரு பாடல் கூறுகிறது.

கொங்கு நாட்டுத் தலைமை

மன்று என்னப்பெற்ற சபையில் நடனம் ஆடியதால் மன்றாடி என்று பெயரை அசரீரி வாக்காகக் காங்கேயன் பெற்றான். அக் காலத்தில் பாண்டியனுக்குச் சேரநாடு சேர்ந்திருந்ததால், தாராபுரத்தில் கொங்கு 24 நாட்டுக்கும் அதிபதியாகக் காங்கேயனைப் பாண்டியன் நியமித்தான் இதனை,

'கொற்றவனும் இனியசுந் தரவீர பாண்டியன்
கொங்குதா ராபுரத்தில்
கூறும்ஐம் பத்தாறு தேசத்தில் உள்ளவர்கள்
கொங்கில்உள்ள துரைகள் அறிய
வெற்றிபுனை காங்கயமன் றாடியென்று அபிடேக
மேவிமணி முடிகள் பெற்றான்'

என்னும் பாடல் உணர்த்துகிறது.

காங்கேய நாடு முழுமையும் ஜாகீராக அளிக்கப்பெற்றது. மற்ற 23 நாடுகளிலேயும் பத்தில் ஒரு பங்கு அனுபவிக்கக் காங்கேயனுக்கு உரிமை அளிக்கப்பெற்றது. கொங்கு 24

நாட்டுக்கும் பட்டாதிகாரியாய் இருந்த காடையூர்க் காங்கேயர் காடையூரிலும், தாராபுரத்திலும் வீற்றிருந்து அதிகாரம் செலுத்தினர். மங்கை என்னும் விசயங்கலத்திலே சிறப்புடன் ஆட்சி புரிந்துள்ளனர்.

சேரர் அளித்த பட்டம்

பின்னர் குமாரகாங்கேய மன்றாடியார், அமராபதி காங்கேய மன்றாடியார் அதிகாரம் செலுத்தினர். சேரமான் பெருமாள் சுந்தருடன் கைலாயம் செல்லும்போது குமார காங்கேய மன்றாடியாருக்குச் சேர மன்னன் சேரமான் பெருமான் (திருமஞ்சு சேரராசா என்று வமிசாவளி கூறும்) பாண்டிய ராசாவாலே கிரீடம் பெற்றீர்களே இம்முடியுற கொடுத்தோம் என்று தம்முடைய கிரீடத்தைக் கொடுத்தார்.

இடையில் இசுலாமியர் படை எடுத்தபோது சர்தார் உதவிய செய்தியும், காதுகுத்திக் கலியாணமும் கேள்விப் பட்டுத் தயவாய் நடந்துகொண்டார்கள்.

விசயநகர ஆட்சிக் காலத்தில் நாயக்க மன்னர்களின் கீழ் காங்கேயர் அதிகாரம் செலுத்தினர்.

பரம்பரை

இம்முடி அமராவதிக் காங்கேய மன்றாடியார், இம்முடிக் குமார காங்கேய மன்றாடியார் என்ற பெயர்களை மாறி மாறிப் புனைந்துகொண்டு காங்கேய நாட்டில் அரசு புரிந்து வந்தனர். காங்கேய நாட்டுப் பட்டக்காரர்கள், தென்கரை நாட்டுப் பட்டக்காரர் ஆகியோருடன் உறவாக ஒன்றுபட்டு அதிகாரம் செலுத்தினர்.

ஏனைய பட்டக்காரர்கள் போலவே சிவன்மலைத் திருப் பணியிலும், வழிபாட்டிலும் காடையூர்க் காங்கேய மன்றாடியார் முன்னின்றனர்.

'இம்முடிக் குமார காங்கேய மன்றாடி ராசன்
இருவேளையும் தரிசிப்பார் துரை முருகவேளைச் சகியே'

என்பது சிவன்மலைக் குறவஞ்சி அடிகளாகும்.

காங்கேயத்தில் கோட்டை கட்டிச் சிங்கை என்ற ஊரைக் காங்கேயமாக மாற்றினர். வேணாடுடையாருடன் திருமண உறவுகொண்டு உதவிகள் சில செய்தனர். தென்னிலை வேட்டுவரை வென்ற வள்ளியறச்சல் பில்லகுலத் தொண்டைமானுக்கும், பழைய கோட்டை அழகன் சர்க்கரை மன்றாடியாருக்கும் சிறப்புக்கள் செய்தனர்.

பெத்தான் காங்கேய மன்றாடியார் ஆனைமலை பாளையப் பட்டுக் கோப்பண கவுண்டன் யானைகளைப் பிடித்துக் கொடுத்ததால் அவருக்கு மன்றாடிப் பட்டம் அளித்தார். காங்கேயர்களும் யானைப் படையில் சிறந்து விளங்கினர். விசயமங்கலத்தில் பொருளந்தைகுல வாரணவாசி யானைப் படைத் தலைவராக விளங்கினார்; காடையூரிலும் 12 கடகம் யானைப்படை வைத்து அரசு புரிந்ததாகக் கூறுவர். குதிரைப் படையும் பெரிய அளவில் இருந்தது.

இதர பகுதியில் இருந்த பிராமணர்களைக் காங்கேய நாட்டில் குடியேற்றினர். படியூருக்குக் 'காங்கேய சமுத்திரம்' என்று பெயரிட்டு அந்தணர்கட்குத் தானமளித்தனர்.

பழனி, வய்யாபுரிநாடு வேடக் கம்பளப் பாளையப் பட்டுக்கு வந்த துன்பத்தை நீக்கிக் காங்கேய நாட்டுக்குப் பொதுவான மடவிளாகத்தில் அவர்களுக்குப் பட்டம் கட்டி அவர்கட்கு மடவிளாகம் இம்முடிச் சின்னோப நாயக்கர் என்று பெயர் வழங்குமாறு செய்தனர்.

பழைய கோட்டைப் பட்டக்காரர் சர்க்கரை மன்றாடியார், காங்கேயம் பல்லவராயர் இவர்களுடன் சேர்ந்து மூவரசாகக் காடையூர், பட்டாலி, கீரனூர், பரஞ்சேர்வழி, ஆலாம்பாடி,

ஆறுதொழு, காங்கேயத்தின் ஒரு பகுதி இவைகளை நிர்வாகம் செய்து வந்தனர் காங்கேயர் மரபினர்.

திப்புசுல்தான் காலத்தில் தொடக்கத்தில் தொல்லைகள் ஏற்பட்டாலும் பின் திப்புசுல்தானே பட்டமும் கட்டிவைத்தார். பின்னர் திப்பு ஆங்கிலேயக் கம்பெனியார் போர்களின்போது காடையூர்க் காங்கேயர் குடும்பம் பழனிச் சீமையில் தும்பலப் பட்டிக் கிராமத்தில் வாழ்ந்தது.

இந்த இடமாற்றத்தில்தான் காடையூர் மன்றாடியார் ஆவணங்கள், செப்பேடு, பட்டயங்கள், பிற பாளையப்பட்டுச் சின்னங்கள் அழிந்தன.

இதனை வம்சாவளி பின்வருமாறு கூறுகிறது.

''மேல் எழுதப்பட்ட வம்ச பரம்பரையிலே அவாளவாள் நடக்கப்பட்ட நடத்தையள் முதலானதுகளுக்கு தகவலா யிருக்கப்பட்ட ஒழுகுகள் முதலான ஆதரவுகள் காலாந்தரங் களிலே சீற்மைகள் விட்டு சீற்மைகளிலே வாசமாயிருந்த வாளானபடியினாலே அது வயனம் புரியவில்லை.''

பின்வரும் பாடல் காங்கேயர் முடிசூட்டப் பெற்றதை உணர்த்துகிறது. கொல்லம் ஆண்டு கலியுகம் என்று தவறாகக் குறிக்கப்பெற்றுள்ளது. முடிசூட்டிய நாள் 26-7-1381 என்று காலக் கணக்கீட்டில் தெரிகிறது.

'மதுரபுரி பாண்டியன் விருதுமகு டாசலன்
வளர்கொற்கை நகராதிபன்
வாசமிகு மும்மதக் கடகசூ டாமணி
வைகைநதி யாதிபதியான்

கதிருற்ற சந்திரகுல இம்முடிக் காங்கேயன்
கருமா புரத்தின் அதிபன்
காடைநகர் கொங்கணா உத்தம புரத்தில்வளர்
காங்கேய நாட்டின் முதல்வன்

அதிகமிகு கலியுகம் மீனப் பதாகையான்
அய்னூற்று ஐம்பத்தேழில்
அன்புமிகு துன்முகி கற்கடக பஞ்சமி
அத்தபூர் வபட்சமும்

விதமலர் வெள்ளியில் கருணைசிவ யோகனாம்
மீனாட்சி ராயர் செங்கோல்
வேளாளர் பொருளந்தை ஆண்டான்சொல் முதலிக்கு
மகுடமுடி சூட்டினாரே.'

காங்கேய மன்றாடியார் அவர்கள் சொற்படிப் பழைய கோட்டைச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் தென்னிலை வேட்டுவர் போரில் இறுதி வெற்றிபெற்றார் என்று ஒரு தனிப் பாடல் கூறுகிறது.

'மட்டுக் கடங்காத தென்னிலையின் வேட்டுவர்கள்
மாசிங்க நாட்டில்வந்து
வண்டாட்ட மாகவே கொண்டாட்டம் அதுசெய்து
மாடாடு கொள்ளைகொண்டு

கொட்டமிட் டுக்கொண்டு திரியும்அந் நாளிலே
குமாரகாங் கயமன்றாடி
கொற்றவர்க் கரிதான சர்க்கரை வாவென்று
கொண்டாடி வரவழைத்து

திட்டமுடன் வென்றுவா என்னவே வெட்டியே
செயங்கொண்ட நாதர் அருளால்
தென்னிலையி லேசென்று முக்குறுணி தாலியைத்
தீர்க்கமுட னேஅறுத்து

வட்டமிடு பரிகுலன் உத்தமக் காமிண்டன்
மன்னுசொட் டைக்கதிபனாம்
மருவலர் திறைகொண்ட நல்லதம்பிச் சர்க்கரை
மன்றாடி மகிபாலனே,'

கொங்கின் குடிமக்கள் தலைவர்

1919ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் தேதி பேரூர் வேளாளர் மடத்திலும்,செட்டிபாளையத்திலும் கூடி வேட்டைக் காரன்புதூர் முத்துசாமிக் கவுண்டர் மகள் திருமணம் தொடர் பாகக் கூறப்பெற்ற குற்றச்சாட்டுகளை விசாரித்துத் தள்ளுபடி செய்துள்ளார். காடையூர்ப் பட்டக்காரர், ஸ்ரீமது மதுரை சமஸ்தானாதிபதி கொங்கு 24 நாட்டிற்கும் நற்குடி 48000 கோத்திரத்திற்கும் ஆலகோல 68 ஜாதிக்கும் பள்பறை 18ஜாதி மதாசார விசாரணைக் கர்த்தாவாகிய காடையூர்ப் பட்டக்காரர் மகா. ரா. ஸ்ரீ. ப. இம்முடிக் குமார காங்கய மன்றாடியார் அவர்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

22-2-1925 அன்று ஊத்துக்குளியில் சி. கே. சின்னசாமிக் கவுண்டர் ஜின்னிங் பாக்டரியில் மாநாடு நாட்டுக் கூட்டம் கூட்டி கொங்கு நாவிதர், வண்ணார் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட வழக்கத்தைத் தீர்த்துள்ளனர்.

3-12-1907 அன்று மங்கலப்பட்டியில் குருக்கள் நியமனம் பற்றிய தகராறில் தீர்ப்பு வழங்கினர்.

உரிச்சொல் நிகண்டுக்கு உரியவர்

தமிழ் இலக்கிய உலகில் நிகண்டு என்பது மிகவும் சிறந்த இன்றியமையாத ஒருவகை நூல். இன்றைய பேரகராதிகள் போல அந்தக் காலத்தில் சொற்களின் பொருள் அறியப் பெரிதும் பயன்பட்ட நூல். திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, நாமதீப நிகண்டு, ஆசிரிய நிகண்டு என அவ்வகையில் சில நூல்கள் உள்ளன. அவற்றுள் உரிச்சொல் நிகண்டு என்பதும் ஒன்று.

உரிச்சொல் நிகண்டு 'காங்கேயன்' என்பவரால் இயற்றப் பட்டது.

'பலகலைதேர் காங்கேயன் பட்டம் உடையான்
உலகறியச் சொன்ன உரிச்சொல்'

'முந்து காங்கேயன் உரிச்சொல்'

'பெருத்துநூல் பலவும் சுருக்கித் தமிழில்
உரிச்சொல் நிகண்டென உரைத்த காங்கேயன்'

என இலக்கியங்களால் பாடப்பட்டது.

உரிச்சொல் நிகண்டை மோரூர்க் காங்கேயர் இயற்றிய தாகவும் கூறுவர்.

காடையூரில் வாழ்ந்த பொருளந்தை குலக் காங்கேயன் என்பவர் அந்நூலை இயற்றினார். அவர் வழியினரை

'பொருள் தந்த கோத்திரக் காங்கயன்', 'காங்கயன்'
'காங்கேய மன்றாடி', 'வெற்றியுனை காங்கயன்'

என இலக்கியங்கள் வேறு சிறப்புப் பெயர் இன்றிக் காங்கயுன் என்று மட்டும் கூறி அழைக்கிறது.

மோரூர்க் காங்கேயர்கள் 'காங்கயன்' என்று தனியாக அழைக்கப்படுவதில்லை. 'சூரியன்', 'அத்தப்பன்'. 'அர்த்த நாரி', 'நல்லதம்பி' என்று மட்டுமே குறிக்கப்பெறுகின்றனர்.

காடையூர்க் காங்கேயர் பலர் கவிவல்லமை பெற்றிருந் தனர். அவர்கள் ஆவணங்களிலும் நிகண்டு பாடிய செய்தி வெளிப்படையாகவும் குறிக்கப்படுகிறது.

> 'யெங்கள் ஆதீனம் உண்டான நாள்முதல் வம்சத்தில் உள்ள பட்டகாற்களுக்கு கவிவல்லமையும் உண்டான வளாயி இருந்தார்கள்'

> 'யெங்கள் வம்சத்தில் சொல்லப்பட்ட வுரிச்சொல் யெங்குற னிகண்டு நாளது வரைக்கும் தேச வித னிகண் டிலே ஒரு னிகண்டாக வெளங்கியிருக்கிறது'

என்பது மெக்கன்சி ஆவணங்களில் காணப்படும் தொடர் களாகும். (பாளையப்பட்டு வமிசாவளி, 1 பக். 104)

கொங்கு மண்டல சதகத்தில் உரிச்சொல் நிகண்டு பாடியவர் 'கலைவல்ல காங்கேயன்' என்று கூறுகிறது. பொருளந்தைகுல மரபில் 'சகல கலாவல்ல காங்கேயன்' என்பவர் ஒருவர்இருந்துள்ளார். அவரே உரிச்சொல் நிகண்டு பாடியவர் ஆகலாம்.

தமிழ் இலக்கிய உலகில் அழியாமல் நின்று நிலவும் சிறந்த நிகண்டு இயற்றிய பெருமை பொருளந்தை குலத்திற்கு உண்டு என்பது சிறப்புக்குரிய செய்தியாகும்.

171287

6A
1-31